
# திருக்குறள் மாநாட்டு மலர்

# 1998



## திருவள்ளுவர் ஆண்டு 2029

மங்கலம் வாசகர் மத்தியில் பொங்குக
தங்கும் குறள்தரும் தார்மீகம் -- ஓங்கும்
கனடாவில் மாநாடு காண்பவர் வாழ்வு
இனம்சேர வாழ்த்துவோம் ஈங்கு

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க கீதம்

## ஒன்று கூடுவோம்

பாவலர் முல்லைவாணன்

உலகத் தமிழரே
ஒன்று கூடுவோம்

உண்மையும் நேர்மையும்
பொது நலப் பண்பும்
ஊக்கமும் ஒற்றுமை
ஆக்கமும் நமதே
என்று பாடுவோம்

பெண்ணடிமை தீருதற்கும்
பேதைமைகள் நீங்குதற்கும்
மண்ணடிமை நீக்குதற்கும்
மக்கள் நலம் மீட்பதற்கும்

பொது இறைமை கைகோப் போம்
புதுக்கலைகள் நலம் சேர்ப்போம்
மதுத்தமிழின் பண்பார்ப்போம்
மாந்தர்-சமநிலை ஆர்ப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில் வரவேற்பு

வணக்கம்!

தமிழர்தம் தன்னிகரற்ற முதுசொங்களில் ஒன்றான, திருக்குறள் என்னும் மாபெரும் ஞானக்கடலின் சில துளிகள் என்ற முத்துக்களை எம் ஏடு தருகின்றது. அந்த ஏட்டை எடுத்து, அதில் விளைந்த நலம் பேண, விழையும் நற்றமிழ் வாசகர்களாகிய உங்களை, மாநாட்டு மலரின் மாண்பறிய வாருங்கள், பாருங்கள், அதன் நயம் காணுங்கள் என வாழ்த்தி வரவேற்கின்றோம்.

திருக்குறளின் மேன்மையறிந்து, இன்று அதனைத் தேசிய நூலாகத் தமிழகத்திலே, ஆக்கத் திட்டமிடும் இவ்வாண்டாகிய 1998ல், உலகத்தமிழினத்தை ஒன்றிணைக்கும் உன்னத பாலமாகிய திருக்குறளுக்கு உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கக் கனடாக் கிளையினராகிய நாம், விழா எடுப்பதில் பெருமையடைகிறோம். எமது அன்னை மொழியாம், தமிழ்மொழியின் அரணும், தமிழன்னையின் முடியிலிருந்து ஒளி வீசும் பாரிய வெண்முத்தும் திருக்குறள் என்றால், அதனை உலகத்தமிழினமும், தமிழறிஞர்களும் ''ஓம் ஓம்'' என்று உவந்து தலை அசைத்து ஏற்பார்கள். எமது மொழியின் இனிமையை, பழமையை, புதுமையை, பொருண்மையை இணைத்து அன்றும், இன்றும், என்றும் தமிழனுக்கு வழிகாட்டும் நன்னூல் நமது திருக்குறள்.

திருக்குறள் கூறும் பண்பாடு, கலாச்சாரம் தமிழர்களாகிய எங்களுக்கு, பண்பட்ட செம்மண்ணை நினைவுபடுத்தி, அம்மண்ணிலே எப்பயிர் வைக்கினும் அப்பயிர் வளர்வதுபோல், திருக்குறளில் எப்பொருள் பற்றிக் கூற எடுப்பினும், அப்பொருளுக்குகந்த எண்ணக்கருக்களை, செழுமையாய், தண்மையாய் ஆக்கமாய் தரும் பொருண்மை ''திருக்குறளில் உண்டு, உண்டு அஞ்சற்க'' என எம்மை அழைத்து, தமிழ்தரு எல்லா விழுமியங்களையும், கூற, பரப்ப உதவும் தஞ்சம் திருக்குறள்.

புலம் பெயர்ந்த நாம், மண்வாசனை, மொழிவாசனை மறவாது, தேனீக்கள் பூக்களிலே தேன் எடுப்பதுபோல், திருக்குறள் என்ற பூஞ்சோலையிலே, கலைஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கள், எழுதிய ஆக்கங்களை அறியுங்கள், என வேண்டுகிறோம். அவர்கள் தம் சிந்தனைச் சிதறல்களை திருக்குறளுடன் சார்த்தி, தம் சுயம் விளங்கக் கூறிய கருத்துக்களை அப்படியே எம்மலரிலே தருகிறோம். எழுதுவோரின் எண்ணக்கருக்களுக்கு, அவர்களே பொறுப்பு, என்பது அவர்தம் சுயாதீனத்தை எம்மலர் மதிக்கிறது, வரவேற்கிறது என்பதாகும். அவர்கள் தம் ஆக்கங்கள் எந்தளவு கூரியன, சிறந்தன என்பன எல்லாம் அரிதுணரும் உரைகல் வாசகர்களாகிய, நற்றமிழர் என்பதை நாம் மறந்திலம். சுருங்கிய கால அறிவித்தலில் எழுத்தாளர்கள் அவசர அவசரமாய்த் தந்த கட்டுரைகள், கருத்துக்கள், ஒப்புநோக்குகள் அனைத்தையும் உங்கள் பார்வைக்கும் கருத்தியல் இடைத்தாக்கத்திற்கும் அளிப்பதில் மகிழ்வடைகிறோம்.

வாசகர்களாகிய நீங்கள், அவற்றைத் திருக்குறள் தரும் பல்வேறு அணுகுமுறைகளில், எது பொருத்தமானதோ, அதுவாகக் கொண்டு, நேரான விழுமியங்கள் காணுங்கள், என அழைக்கிறோம்.

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'' (596)

என்ற குறள் தரு சீரிய கருத்தை உங்கள் உள்ளம் எனும் கொள்கலத்தில் கொள்க என விரும்பி,

''குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'' (504)

என்ற பொன்னான குறளையும் கூறித் ''தெரிந்து தெளிக'' எனக் குறள் கூறு வாசகத்தில் வாழ்த்தி எல்லோரும் குறள் கூறு விழுமியங்கள் அறிந்து, உணர்ந்து, பெருவாழ்வு பெறுக என வாழ்த்துகிறோம்.

''மங்கலம் எங்குமே மாண்புடன் ஓங்கட்டும்
தங்கும் கனடாவில் தான்''

வாழ்க திருக்குறள், வளர்க தமிழ்

மலர்க்குழு: திரு. ச.சபாநடேசன்
திரு. தோமஸ் டேவிட்
திரு. ம. செல்வராசா அலெக்ஸ்சாந்தர்
திரு. எஸ். பத்மநாதன்
திரு. வி. கந்தவனம்
திரு. வேல் வேலுப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் மாநாடு
# கனடா 1998.

திருக்குறள் மாநாட்டை உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடாக் கிளை முதன்முறையாக ரொறொன்ரோ மாநகரில் செப்டம்பர் 5ம் தேதி வெகு சிறப்பாக நடத்த எடுத்துவரும் முயற்சிகளுக்கு எமது பாராட்டுகள். மாநாட்டிற்கு முன்னோடியாக திருக்குறள் போட்டிகளை நடத்தி எமது சிறார்களுக்குத் திருக்குறளின் மகிமையை உணரச் செய்தமைக்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கு, அவர்களைக் கௌரவப்படுத்தும் நிகழ்ச்சிகளை மாநாட்டில் ஒழுங்குகள் மேற்கொள்வதும் போற்றப்பட வேண்டிய செயல்கள்.

அத்துடன் தமிழரல்லாதவர்களுக்கும் திருக்குறளின் மேன்மையை அறியப்படுத்துவதற்கு, ஆங்கிலத்தில் ஒரு பிரத்தியேக மாநா டொன்றை ஒழுங்கு செய்திருப்பது சாலச் சிறந்த செயலாகும்.

எங்கள் வாழ்க்கையில் திருக்குறள் முக்கிய பங்காற்ற வேண்டும். அதற்கு நாமெல்லோரும் எங்களால் இயன்ற பணிகளைப் புரிவோமாக.

*நன்றி*

இரா. ந. வீரப்பன்
தலைவர்
உ.த.ப.இயக்கம்
மலேசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Patron

Thiruvalluvar who lived about 2000 years ago is one of the greatest thinkers Tamil Nadu has ever produced. He is considered a mystic and believed to have had a thorough knowledge of world's affairs either through learning or through visionary powers.

His book, Thirukkural, consists of 1330 couplets that are chaptered tenthly under 133 topics. All subjects which are of utmost importance for smooth and peaceful life are treated therein. Hence it is called the bible of ideal life.

I am happy that the Canada branch of the International Movement for Tamil Culture (IMTC- Canada) is moving fast to implement my suggestion that we must organize a vizha (celebration) for Thiruvalluvar to highlight his contribution to the Tamil culture.

Many people in Canada have forgotten thiruvalluvar and the younger generation, I am sure, do not even know that there once lived a great seer called Thiruvalluvar and that he had given us an invaluable treasure in the name of Thirukkural, the tenets of which, if strictly followed, will help people lead an ideal life, make an ideal world. The problem is, no one at present worry much about ideal life.

Thirukkural is a masterpiece that had been preserved during adverse times of fire, flood, wars etc and passed on to us by our ancestors so that we find and learn it, follow the teachings and lead a virtuous life. It is now our responsibility to pass it on to the next generation for their own good.

The country in which we live and the atmosphere that envelopes us are so new that our people are apt to forget our traditions and culture, but the Canadian Charter of Human Rights provides ample scope for every community to foster its traditions and culture.

Further, Thirukkural is not meant just for the Tamils, but it is for the whole world. With that in mind the IMTC-Canada is also holding a conference with a view to taking Thirukkural to the non-Tamil Canadians. I welcome it whole heartedly.

In 1996 IMTC-Canada had organized successfully the Sixth International Conference on Tamil Culture at the Metro Convention Centre in Toronto and I am certain that its members and supporters will pool all their resources for this function too in order to achieve the goal of taking the message of Thiruvalluvar to the people.

I wish the celebrations and the conference all success.

**V. KANDAVANAM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாடுகளும் அவற்றின் பின் விளைவுகளான சுவடுகளும்

பொதுவாக மாநாடு எடுப்பவர்களின் சிரமமான முயற்சிகள், ஒரு ஆடம்பரமான விழாவுடனும், அறிஞர்கள் சந்திப்புக்களுடனும், பேச்சுக்களுடனும் கலை நிகழ்வுகளுடனும் நடந்தேறி இறுதியில் ஒரு அழகிய மலர் வெளியீட்டுடன் முடிவதுண்டு. இதனிலும் பார்க்க ஒவ்வொரு மாநாடும் எதிர்காலச் சந்ததியினருக்குக் காலம் காலமாக பயன் தரக்கூடிய ஒரு சிறு அடிச்சுவட்டையாவது பதித்துச் செல்வதே உகந்த காரியம். அது எந்தவொரு வடிவிலும் இருக்கலாம்.

உதாரணமாக, திருக்குறள் மாநாடு நடத்தும்போது உலகில் எந்த மொழியில் திருக்குறள் இல்லையோ அந்த மொழியில் ஒரு மொழி பெயர்ப்பை வெளியிட்டால் அது நின்று நிலைத்துப் பயன்தரும் நினைவுச் சின்னமாக இடம் பெறும். திருக்குறள் உலகப் பொது மறை என்பதை செயற்படுத்தும் ஒரு பணியாகவும் முழுமை தரும்.

இவ்வாறே எந்தவொரு மாநாடு எடுப்பதாயினும் அதன் பின்விளைவாக நின்று நிலைக்கும் ஒரு நினைவுச் சின்னத்தை எமது சுவடாக பதித்துச் செல்லும் சிரமத்தையும் தாங்கிக்கொள்வோமாக.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்தும் திருக்குறள் மாநாடு சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

ஈழத்துப் பூராடனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தலைவரின் செய்தி

திருக்குறள் ஒரு சமய நூலல்ல. அது ஒரு சமூக நூலென்றுதான் கூறமுடியும். ஆகவே தான் திருக்குறள் மாநாட்டை உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடாக்கிளை கனடாவில் முதன் முறையாக நடத்துகிறது.

திருக்குறளை எமது மக்களிடையே பரப்புவதற்கு, குறிப்பாக எங்கள் வருங்காலச் சந்ததியினரை திருக்குறளின் மகிமையை உணர்ந்து அதன் வழியிலே ஒழுகச் செய்வதற்கும் இப்படியான மாநாடுகள் தொடர்ந்து நடத்தப்படுவது முக்கியம். இம்மாநாட்டின் முன்னோடியாக, திருக்குறள் போட்டிகள் நடத்தப்பட்டன. கணிசமான பிள்ளைகள் பங்கு பற்றினார்கள். அவர்களின் ஆர்வத்தையும், மனனம் செய்வதிலும், ஆளுமையிலும் காட்டிய திறமையையும நினைக்கும் பொழுது அப்பிள்ளைகளின் பெற்றோர் பாராட்டிற்குரியவர்கள். பங்குபற்றிய பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்குவதோடு அவர்களை மாநாட்டில் கௌரவிக்கப்படுவது வருங்காலத்தில் கூடிய எண்ணிக்கையில் பிள்ளைகள் இப்போட்டிகளில் பங்குபற்றித் திருக்குறளின் மேன்மையை மேலும் பரப்ப உதவும் என்பது எமது நம்பிக்கை.

திருவள்ளுவரால் கூறப்பட்ட 1330 குறள்களும் பொன் விழுமியங்கள். அவைகள் அத்தனையும் மனித சமுதாயத்திற்கு உகந்தவையே. அவைகளில் அதி முக்கியமாக நாம் கருதும் சிலவற்றைக் குறிப்பிட்டு அவைகளின் வழியிலே எங்கள் வாழ்க்கையை அமைத்தால் நன்மையடைய உதவுமென்று கருதுகிறோம்.

இன்றைய விஞ்ஞான உலகில் அநேகர் பணம் விரைவில் சேர்க்கும் நோக்கத்தினால், தங்களுக்கு உதவியவர்களையே மறந்து விடுகிறார்கள்.



எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு (குறள் 110)

இதில் ஆழ்ந்த உண்மைகள் இருப்பதை நாம் அறியக் கூடியதாயிருக்கிறது.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (குறள் 127)

இதன் பொருளை உணர்ந்து மக்கள் நடப்பார்களேயானால் வீண் சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கலாம். நிம்மதியாக வாழலாம்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (குறள் 67)

இக்குறளின் பொருளை உணர்ந்த பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் கண்ணும் கருத்துமாகவிருப்பார்கள்.

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல் (குறள் 70)

எமது வருங்காலச் சந்ததியினர் இக்குறளில் கூறப்பட்டிருக்கும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களேயானால் கனடாவில் எங்கள் சமுதாயம் மேம்பட்ட சமுதாயமாய் யாவராலும் போற்றப்படும்.

எங்கள் சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், எங்கள் பாண்பாட்டை எமது மக்கள் மறவாமலிருப்பதற்கும், திருக்குறளின் மகிமையைப் பரப்புவதற்கும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா தன்னாலானவற்றைத் தொடர்ந்து செய்வதற்கு முயற்சிக்கும்.

திருக்குறளின் வழியில் வாழ்வோம் வளம்பெறுவோம்.
வாழ்க தமிழ், வளர்க தமிழர் ஒற்றுமை,

சி. செல்லையா.

உ.த.ப.இ.கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Minister
of Canadian Heritage

Ministre
du Patrimoine canadien

Ottawa, Canada K1A 0M5

**G**reetings to everyone participating in the **Conference on Thirukkural**, organized by the **International Movement for Tamil Culture - Canada**. This is an excellent opportunity to renew vigorous discussion and appreciation for the great poet **Thiruvalluvar** and his master work, still timely nearly 2000 years after its first appearance.

**A**s Minister of Canadian Heritage, I applaud this initiative which highlights an artistic endeavour that continues to have global meaning for the present and future generations. Best wishes for a stimulating and productive conference!

Sheila Copps

Sheila Copps

Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Premier
of Ontario
Legislative Building
Queen's Park
Toronto, Ontario
M7A 1A1

Le Premier ministre
de l'Ontario
Hôtel du gouvernement
Queen's Park
Toronto (Ontario)
M7A 1A1

Ontario

# CONFERENCE ON THIRUKKURAL
## September 5 - 6, 1998

On behalf of the Government of Ontario,
it is with great pleasure that I extend greetings to all attending this conference on Thirukkural in the city of Toronto.

To those of you who have travelled a long way to be here, I offer a special welcome. Ontario is a beautiful province filled with friendly people and many attractions, events and activities. I hope you will find the time to explore as much of our province as you can.

I trust that this auspicious occasion will give members of the Tamil community pause to reflect on your rich history. Cultural diversity is one of our province's greatest strengths, and we show our pride of ancestry by fostering and preserving our different traditions. Events like this add to the contributions Tamil-Ontarians make to enriching our communities.

Please accept my best wishes for a memorable conference.

**The Honourable Michael D. Harris**
**Premier of Ontario**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Secretary of State
(Multiculturalism) (Status of Women)

CANADA

Secrétaire d'État
(Multiculturalisme) (Situation de la femme)

**D**ear **F**riends,

**I** am delighted to send greetings to everyone participating in the **Conference on Thirukkural**. This is an excellent opportunity to join together in expressing your pride in your Tamil culture and heritage.

**C**anada's rich cultural diversity is our strength. By playing an active part in the life of your community and in all of our society, you contribute to Canada's development and its success.

**A**s Secretary of State for Multiculturalism and the Status of Women, I am pleased to take this opportunity to congratulate the **International Movement for Tamil Culture - Canada**, for your efforts to promote your heritage among Canadians. Best wishes for a productive conference and for the success of your future endeavours.

The Honourable Hedy Fry, P.C., M.P.

Ottawa, Canada K1A 1K5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ministry of Citizenship, Culture and Recreation**
Minister
6th Floor
77 Bloor Street West
Toronto ON M7A 2R9
Tel.: (416) 325-6200
Fax: (416) 325-6195

**Ministère des Affaires civiques, de la Culture et des Loisirs**
Ministre
6e étage
77 rue Bloor ouest
Toronto ON M7A 2R9
Tél. : (416) 325-6200
Téléc. : (416) 325-6195

## *Greetings from the Minister*

September 5, 1998

Dear Friends,

As Minister of Citizenship, Culture and Recreation, I would like to extend greetings to everyone attending the **Conference on Thirukkural**, and recognize the efforts of the International Movement for Tamil Culture – Canada in organizing this conference.

Thirukkural is an important literary work. The work has endured for nearly 2000 years, and is a celebration of righteousness.

On behalf of the Government of Ontario, I wish you the best of luck for a rewarding and memorable event.

Sincerely,

Isabel Bassett
Minister



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Marilyn Mushinski

**MPP for Scarborough-Ellesmere**

## Thirukkural Conference
## September 5th & 6th, 1998

**It is with great pleasure that I extend greetings to everyone taking part in the Thirukkural conference**

Eminent Scholars, and enthusiastic participants grow in number ever year to praise and thank Thiruvalluvar; the greatest poet of Classical Tamil Literature.

Today's gathering is also a unique opportunity for the many believers to reflect on the three supreme aims of life; Virtue, Wealth, and Love, prescribed by the Tamilian tradition.

Congratulations to the organizers and the volunteers who have helped to make today's events a great success.

Please accept my very best wishes for a rewarding day.

Sincerely,

Marilyn Mushinski

Marilyn Mushinski, MPP
Scarborough-Ellesmere

2100 Ellesmere Road, Suite 205, Scarborough, Ontario M1H 3B7 (416) 438-1242
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TORONTO

**Mel Lastman**
Mayor

**Metro Hall**
55 John Street
Stn. 1070, 7th Floor
Toronto, Ontario
Canada M5V 3C6
Tel: 416-395-6464
Fax: 416-395-6440

A message from Mayor Mel Lastman

As Mayor, I am delighted to send greetings, on behalf of Toronto City Council and the people of this great city, to all those attending the Conference on Thirukkural taking place on September 5th and 6th, 1998.

Toronto is a city of people from 169 lands speaking over 100 languages. Throughout its history, our people have learned from each other by celebrating their diverse cultures. We are the most culturally diverse city in the world. The people of Toronto share their cultural legacies and this adds much to the growth and prosperity of our great city.

The Tamil-Canadian community is an integral part of our city's success and adds to its unique diversity. This Conference provides an opportunity for community leaders to recognize the positive contribution Thiruvalluvar's literary work has made to the lives of so many citizens.

Congratulations to the organizers of this event, and to all those attending I offer my very best wishes for an enjoyable and memorable Conference.

Cordially,

Mel Lastman

Mel Lastman
Mayor

September 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் வழியில் அரசியல்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்

நனிசிறந்த உலக இலக்கியங்களில் ஒன்றாகத் திருக்குறளும் போற்றப்படுகிறது. திருக்குறள் கூறும் தத்துவங்கள், அறிவுரைகள், வாழ்க்கை வழிமுறைகள் முதலியன எல்லோராலும் போற்றி ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருத்தலே இந்த மேம்பாட்டிற்குக் காரணமாகும். தமிழ் நாட்டிலே, தமிழர் பண்பாட்டிலே உருவாகிய அரசியல், பொருளியல், கல்வியியல், வாழ்வியல் முதலான பல்வேறு துறைகளின் பழுத்த ஞானப்பனுவலாகத் திருக்குறள் திகழ்கிறது. இன்று வழக்கிலுள்ள இலக்கிய வளஞ்செறிந்த பல்வேறு மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு, அதன் பொருள் வளம் உலகோரால் அறியப்பட்டு வருகின்றதெனின் வள்ளுவர் மூலம் தமிழ்மொழியின், தமிழ்ப்பண்பாட்டின், தமிழ் இனத்தின் பெருமையே போற்றப்படுகிறது எனின் மிகையாகாது.

இலக்கியங்கள் தோன்றும்போது அவற்றுக்கு மதம், இனம், அரசியல், பொருளியல், அறிவியல் முதலான பின்னணிகள் இருக்கவே செய்கின்றன. இவ்வகையில் திருக்குறள் அறவியல் தளத்தில் தோற்றம் பெற்றதொரு நூல் என்பதை முதலிற் கருத்திற் கொள்ளும் அதேவேளையில், திருக்குறளில் அறிவியலோடு உலகியலும் மிக உறுதியாகவும் விளக்கமாகவும் பேசப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலாக அமைந்துள்ள இந்நூலிலே உலகியல் பற்றிய விளக்கங்கள் முழுமையாகவே ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. திருக்குறள் எம் மதத்தவருக்கும் பொதுவான நூலெனக் கருதப்படுகிறது. ஆனால், சமண சமயத்தவர்களின் ஆதிக்கம் தமிழ் நாட்டில் நிலையூன்றிருந்த கி. பி. 3ஆம் நூற்றாண்டிலேயே திருக்குறள் தோற்றம் பெற்றதென அறிஞர் சிலர் கருதுவர். எனினும் தமிழர்களாகிய நாம் திருக்குறளை முதன்மைப்படுத்தித் திருவள்ளுவர் காலத்தைக் கணிப்பிட்டு, 1998ஆம் ஆண்டை 2029வது திருவள்ளுவர் ஆண்டாகக் கருதிவருவதும் குறிப்பிடத்தக்கது. எனவே, கி. பி. முதலாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தோற்றம் பெற்ற திருக்குறள், எக் காலத்திற்கும் பொருத்தமாகவே அமைந்திருத்தல் அதன் சிறப்புக்குரிய காரணிகளில் ஒன்றாகும்.

" வள்ளுவர் வழியில் அரசியல் " என்ற இக் கட்டுரையில் " **அரசியல்** " பற்றி வள்ளுவர் எத்தகைய கருத்தினைக் கொண்டிருந்தார்? அக் கருத்துக்கள் உலக அரசியல் அரங்கிற்கும், இன்றைய எமது தாய்நாட்டு அரசியல் சிந்தனைகளுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டு வனவாக அமைகின்றனவா என்பதைக் குறித்தும் இங்கு ஆராயப்படுகின்றன.

திருக்குறளின் பொருட்பாலிலே ' அரசு ' பற்றிய ஆய்வு 39 தொடக்கம் 64 வரையிலுள்ள அதிகாரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. " அரசு " எனப்படுவது இறை, நாடு, அமைச்சு, அரண், கூழ், படை ஆகிய உறுப்புக்களைக் கொண்டமைந்திருக்கும் இயல்பு விளக்கப்படுகிறது. **ஆட்சித் தலைவன் (அரசு– இறை)** எனப்படுபவன் குடி ஓம்புவனாக இருக்க வேண்டும் என்பதே திருவள்ளுவர் வாய்மொழி. இதனை அவர் காலத்தில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் ஔவையார், " குடி உயரக் கோன் உயரும் " என்று பாடினார். தன்னாட்டிலே குடிமக்கள் அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு சிறந்து விளங்குவதற்குரிய பொருளியல், அறிவியல் வழிவகைகளை அரசன் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் நாடும் மக்களும் சிறப்படைகின்றனர். அதன்வழி இறைமாட்சியும் சிறப்படைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கழகு செங்கோன்மை. எவரிடத்தும் நடுநிலைமை பேணவேண்டியது ஆட்சித் தலைவனின் கடமையாகும். வான்மழை உயிரினம் அனைத்தையும் வாழ வைப்பதுபோல, மன்னனின் செங்கோல் நாட்டு மக்கள் அனைவரையும் வாழவைக்கின்றது. நாட்டிலுள்ள " கொலையிற் கொடியாரை" இனங்கண்டு களைபிடுங்க வேண்டிய பொறுப்பும் நாட்டுத் தலைவனையே சார்கிறது. ஆட்சித் தலைவனின் நல்வழிகாட்டலிலே நாட்டின் வளமும் பெருமையும் உலகால் அறியப்படுகின்றது என்பது வள்ளுவர் வாதம்.

ஓர் இனம் தனது மொழி, பண்பாடு, அரசியல், கலைகள் முதலானவற்றைச் சுதந்திரமான முறையில் பேணிக்காக்கவும் அதன்வழி வாழவும் தனக்கென்று தனிநாடு உடையதாக இருக்க வேண்டும். நாடென்பதற்கு எல்லை வரையறைகள் மிகவும் முக்கியமானவை.

" தமக்கென்ற பாரம்பரியமான எல்லைகளையுடைய ஒரு நாட்டின் மக்களால் காலம் காலமாகத் தங்களுக்காக உருவாக்கப்பட்ட தன்னாட்சி அமைப்பினை உடைய நிலப்பரப்பினைக் கொண்டதே நாடு" ஆகும். வள்ளுவரின் இக் கோட்பாடு மார்க்சிய சித்தாந்தவாதிகளுக்கும் ஏற்புடையதாகும். ஈழத்தமிழர்கள் தமிழீழம் என்ற தனிநாட்டுக்குக் கூறும் எல்லைகளும் அதன் தனியாட்சிப் பாரம்பரியமும் வள்ளுவர்வழி வரைவிலக்கணம் பெறுகின்றன. அரசியல் என்ற பகுதியிலே " நாடு "(73) பற்றிய அரசியல் சார்பான விளக்கம் தரப்படுகின்றது,

அரண் (75 ) என்ற அதிகாரத்திலே் ஒரு நாட்டுக்குரிய எல்லைப்புறம், எல்லைப்புறக் காப்பரண் ஆகியன பற்றிய சிந்தனைகள் கூறப்படுகின்றன. எல்லைப்புறக் காப்பரண்களில் நீர்நிலைகள், காடுகள், மலைகள் என்பன அமைந்திருப்பதன் சிறப்பும் அவற்றின் முக்கியத்துவமும் திருக்குறளிலே பேசப்படுகின்றன. வள்ளுவர் கூறுவது போன்று மிகப் பெரும்பாலான நாடுகளின் எல்லைகளை ஆறு, கடல், மலை, மற்றும் நீர்நிலைகள் கூறுபோட்டுப் பிரித்திருப்பதையே பொதுவாகக் காண்கின்றோம்.

நாட்டிற்குரிய காப்பரண்களும் உறுதியான பாதுகாப்பும் வரையறையான எல்லைகளும் உடையதாகவே நாடு அமைந்திருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். நாட்டின் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இன்று உலக நாடுகளிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் போர்களும் எல்லைப் போட்டியின் காரணமாகவே ஆரம்பித்தன என்பதை உலகறியும். நாடு பெரிதாக இருந்த போதிலும் அந்நாட்டின் எல்லைக் கடவைகள் (Passing Boarders) சிறிய அளவினைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டுக்குள் ஏற்படக்கூடிய ஊடுருவல்களைத் தடுத்துத் தம் நாட்டைப் பாதுகாக்கலாம் என்ற கோட்பாட்டைத் திருவள்ளுவர் கொண்டிருந்தார். கனடாவையும் அமெரிக்காவையும் உதாரணமாக எடுத்துக் கொண்டால், இந் நாடுகளின் எல்லைகள் வாவிகளாலும் மலைகளினாலும் காடுகளாலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்விரு நாடுகளும் பரப்பால் மிகப் பெரியவையாகும். ஆனால் இவ்விரு நாடுகளின் எல்லைக் கடவைகள் மிகச் சிறியனவாகவும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான எல்லைக்கடவைளை உடையனவாகவும் இருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறே நாட்டின் எல்லை அரண்கள் அமைய வேண்டும் என்பது வள்ளுவரின் அரசியல் அறிவு தரும் பாடமாகும். இதனைப் பின்வரும் குறள் விளக்குகின்றது.:

" சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்." (744).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் முதுகெலும்பு எனப்படுவது அந் நாட்டின் **பொருண்மியம்** ஆகும். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" (247) என்பது திருவள்ளுவர் வாக்கு. பொருள் வளமும் கல்விச் செல்வமும் ஒரு நாட்டின் இரு கண்கள் போன்றவை. எனவே பொருள், கல்வி, பாதுகாப்பு என்ற முப்பெருந் துறைகளிலும் முழுமை பெற்றிருப்பதே நாடாகும்.

அரசியலில் சட்டவாக்கம், நீதி, ஆட்சியியல், அரசியல், திட்டமிடல் முதலான விடயங்கள் மிக முக்கியமானவையாகும். ஆட்சித் தலைவன் தன் ஆட்சிக்குப் பக்க பலமாக சிறந்த ஆடசிச் சுற்றத்தினரைக் கொண்டிருக்க வேண்டும். தர்க்க அடிப்படையில் வாதிட்டுச் சரியான விடயங்களைச் செயல் திட்டமாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற அமைச்சரவை உடையவனாக ஆட்சித் தலைவன் விளங்க வேண்டும். நாட்டின் தலைவன் நெறிதவறிச் செல்லும் வேளைகளில் பிழைகளைச் சுட்டிக் காட்டி, அவற்றை இடித்துரைத்து, நன்னெறிப்படுத்தக் கூடிய சுற்றத்தினர் எப்போதும் ஆட்சித் தலைவனைச் சூழ்ந்திருக்க வேண்டும். இவ்வாறான சுற்றம் இல்லாத ஆட்சித் தலைவனின் பெருமையும் அவனது நாட்டின் சிறப்பும் தானாகவே அழிந்துவிடும் என்கிறார் வள்ளுவர்:

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இல்லானுங் கெடும்.". (448)

ஆட்சித் தலைவன் நாட்டின் கடமைகளைச் செய்விப்பதற்குப் பொருத்தமான அலுவலர்களை அவரவர் தகுதியும் திறனும் ஆராய்ந்து நியமித்தல் வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார் என்பதை கீழ்வரும் குறள் விளக்குகின்றது:

" இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (517)

இன்றைய அரசியலில் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு மிக முக்கியமானதாகும். அரசியலை நடத்தும் கட்சி உறுப்பினர்கள் ஆட்சிக்கு அச்சாணி போன்றவர்கள். ஆட்சித் தலைவன் தனக்கும் நாட்டுக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களையே கட்சியின் முக்கிய உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, மற்றும் முதன்மைநிலை ஆட்சிப் பொறுப்பாளர்களாக வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது சதித் திட்டங்களும், அழிவுவேலைகளும் உருவாதல் தவிர்க்க முடியாததாகின்றது. தன் ஆட்சிச் சுற்றத்தவரோடு இணைந்திருந்து பின்னர் கருத்து முரண்பாடு காரணமாகப் பிரிந்து சென்ற ஒருவர் மீண்டும் வந்து இணைய வரும்போது மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என வள்ளுவர் எச்சரிக்கின்றமையைப் பின்வரும் குறள் விளக்குகின்றது:

"உளப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திரிந்து எண்ணிக் கொளல்". (530)

ஆட்சித் தலைவன் மதிநுட்பத்தைப் பயன்படுத்திச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வள்ளுவர் அரசியல் (59-72) என்ற பகுதியில் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார். அரசியலில் காலம் அறிதல், இடம் அறிதல், வலி அறிதல் முதலான விடயங்கள் மிக முக்கியமானவை யாகும். ஒரு நாட்டில் பொருண்மியத் திட்டங்களை அறிமுகப்படுத்து வதானாலும்சரி அல்லது வேற்று நாடுகளுடன் எத்துறைத் தொடர்பு கொள்வதாயினுஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம், இடம், வலிமை என்பனவற்றை அறிந்து கொண்டே செயற்பட வேண்டும் என்பதை மிகவும் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார். காலம் அறிதல் (48), இடம் அறிதல் (49), ஒற்றாடல் (58) முதலான அதிகாரங்களில் வள்ளுவர் கூறும் விடயங்கள் இன்றைய அரசியல் நடவடிக்கைகளுக்கும் பொருந்துவனவாகும். மேலும் வள்ளுவர் கூறும் படை மாட்சி (76), படைச் செருக்கு (77) என்ற விடயங்களும் இன்றைய படை எடுப்பாளர்கள் படித்தறிய வேண்டிய பகுதிகளாகும்.

காலம் அறிதலின் இன்றியமையாமையை வள்ளுவர் ஓர் எடுத்துக்காட்டு மூலம் மேல்வரும் குறளில் விளக்குகிறார். கூகை மிகப் பலம்வாய்ந்த பறவை. ஆனால் கூகைக்குப் பகலில் பார்வை தெரிவதில்லை. கூகை பகலில் தன் எதிரியாம் காக்கைக்கு முன்னே சென்றால் காகம் மிக எளிதாக கூகையை வென்றுவிடும். இதுபோன்றே வெற்றியை நாடும் பிரிவினர் காலம் பார்த்துச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை பின்வரும் குறள் விளக்குகின்றது:

" பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தற்கு வேண்டும் பொழுது." (481)

பகை மன்னர்களின்மீது படையெடுப்புக்கள் நடத்தத் தொடங்கும்போது தாம் செல்லவுள்ள இடம்பற்றி முதலில் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் இடத்தின் தன்மையால் எடுத்துக்கொண்ட விடயத்தில் தோல்வியே தழுவ வேண்டிவரும் என்பதை வள்ளுவர் திடமாகக் கூறியுள்ளார்.

" சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்." (498)

இக் குறளுக்குச் சான்றாக இன்று தமிழீழத்தில் வன்னியில் நடைபெறும் பெரும்போர் நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். சிறிலங்கா அரசு பாரிய வான்படை, கடற்படை, தரைப்படைப் பலத்துடனும் ஆயுத- வாகன பலத்துடனும் வடக்கு நோக்கிய பாதை திறப்புக்காக போர் நடத்திச் சென்றனர். ஒப்பீட்டளவில் சிறு ஆட்பல படையணியுடைய தமிழீழ விடுதலைப் போராட்ட வீரர்களுடன் நீண்ட நாட்களாகப் போரிட்டு வெற்றி அடைய முடியாமல் சிறிலங்காப் படையணி பின்னடைவு பெற்றிருப்பதற்கு இடம் அறிதல் பற்றிய நுட்பத்தினை அறியாமல் செயற்பட்டமையே காரணமாகும். காலம் பார்த்தல் படை எடுப்புக்கு மிக முக்கிய செயலாகும் என்பதை வள்ளுவர் 2000 ஆண்டகளுக்கு முன்பாகவே குறிப்பிட்டிருந்தமை நோக்கத்தக்கதாகும்.

ஒரு நாட்டின் தேசியப்படையணி எத்தகு பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றியும் வள்ளுவர் (76) கூறுகின்றார். கூற்றுவனே சினங்கொண்டு தன்மேல் எதிர்த்து வந்தாலும், எதிர்த்து இறுதிவரை போராடக் கூடிய ஆற்றல் உள்ளவனே போராளி என்ற கருத்தை வள்ளுவர் (765) தருகின்றார். படை வீரர்கள் வெறும் கூலிப் படைகளாக இருக்கக் கூடாது. அவர்கள் வீரம், மானம், சிறந்த நடத்தை, தலைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருத்தல் ஆகிய நான்கு பண்புகளை உடைடையவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பின்வரும் குறளால் விளக்குகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு" (766)

அடுத்ததாக அரசியலில் இடம்பெறும் தூதுவர்கள் பற்றியும் வள்ளுவர் கருத்துக்களைக் கூறியுள்ளார். அரசியலில் தூதுவர்களின் செயற்பாடுகள் பற்றிய செய்திகளை இன்று நேற்றல்ல இதிகாச காலம் முதலாக அறிந்து வைத்திருக்கின்றோம். மகாபாரதத்தில் கிருஷ்ணன் தூது, விதுரன் தூது, இராமாயணத்தில் அங்கதன் தூது முதலியன பண்டைக் கால அரசியலில் தூதின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவனவாகும். பண்டை நாட்களில் பிற நாடுகளுக்குத் தூதுவர்கள் சென்று வந்தார்கள். இந் நாளில் தூதுவர்கள் பிற நாடுகளில் தங்கியிருந்தே தத் தம் நாட்டின் கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அரசியல், பொருளியல் துறைகளில் அறிவும் அநுபவமும் மிக்கவர்களே தூதுவர்களாக நியமிக்கப்படுவர். இன்றைய அரசியலில் அனைத்து உலக நாடுகளும் அரசியல் தூதுவர்களை (High Commissoner, Ambassador) பிற நாடுகளுக்கு அனுப்பிவைத்து அவர்கள் மூலமாகப் பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தூதுவர்களின் பண்பு, அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் என்பன பற்றி வள்ளுவர் அன்று (தூது 68) கூறியவை இன்றும் பொருந்துவனவாகவே உள்ளன.

தூதுவர்களுக்கு ஆய்ந்த கல்வியும், சிறந்த மதிநுட்பமும், விரும்பத்தக்க தோற்றமும் அமைதல் அவசியம் என்பதைப் பின்வரும் குறளிலே வள்ளுவர் விளக்குகிறார்.:

" அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு." (684)

இவர்களைவிட **ஒற்றர்களின்** சேவையும் நாட்டிற்கு அவசியம் என்பதை வள்ளுவர் தம் அரசியல் கோட்பாட்டில் வரித்துக் கொண்டவர். உளவுத்துறையின் இன்றியமையாமை பற்றி ஒற்றாடல் (58) என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் கூர்ந்து நோக்கத்தக்கவை. ஒவ்வொரு நாட்டிலும் அரசமுறையிலான ஒற்றர் பிரிவினர் செயற்படுகின்றனர். இவ்வகையில் RAW, KGB, CIA முதலான நன்கு சீரமைக்கப்பட்ட உளவுச்சேவையினர் தத்தம் நாடுகளின் நலன் கருதிச் செயற்படுவதைக் குறிப்பிடலாம். ஒற்றர் சேவைகளின் மூலமே அரசியல் சாணக்கியங்கள் வெற்றியளிக்கின்றன. தன் நாட்டின் நலன் பேணும் அரசு, . நாட்டின் உள்ளும் புறமும் நிகழும் அத்தனை விடயங்களையும் ஒற்றர்களால் முன்கூட்டியே அறிந்து அதற்கேற்பச் செயற்படுவதன் மூலமே வெற்றிகரமாக அரசியலை நடத்தலாம் என்பதும் வள்ளுவர் கருத்தாகும். நாட்டின் தலைவன் தன்னைச் சூழ்ந்திருப்போரைப் பற்றியும் ஒற்றின் மூலம் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்றும் வள்ளுவர் (584) கூறுகின்றார். அதேவேளையில் ஒற்றர்கள் தரும் செய்திகளையும் வேறு ஒற்றர்களின் மூலம் ஆராய்ந்து தெளிந்து செயற்பட வேண்டியதையும் பின்வரும் குறளிலே வற்புறுத்துகின்றார்:

" ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்'. (588).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக வள்ளுவர் தூது பற்றியும் ஒற்றாடல் (58) பற்றியும் கூறும் விடயங்கள் இன்றைய அரசியலுக்கு மிகவும் இன்றியமையாதவை என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாடு பற்றிய புதிய அரசியல் கோட்பாடுகளுக்கும் பொருந்தும் வகையில் ஏதிலிகள் ( Refugees ) பற்றிய முக்கியமான கருத்தும் பின்வரும் குறளில் கூறப்படுகின்றது.:

" பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு." (733)

பிற நாட்டு மக்கள் குடியேறுவதால் ஏற்படும் சுமை ஒருசேரத் தன்மேல் வரும்போது அவர்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய பொருள் வளம் முழுவதையும் தரவல்லது நாடு - என இக் குறளுக்கு விளக்கம் கூறுகிறார் மு. வரதராசனார். அகதிகள் பிரச்சினை இன்று உலகின் அனைத்து நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. நாடெனப்படுவது தம் மக்களையும் தஞ்சம் வேண்டி வருபவர்களையும் வரவேற்று விருந்தோம்பும் தன்மையுடையதாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவரின் அரசியற் கோட்பாடு. உலகின் ஆதிக்கப் போட்டிகளினாலும் உள்நாட்டுக் கொடிய போர்களினாலும் உறைவிடங்களை, உற்றார் உறவினர்களை, குடும்ப உறுப்பினர்களை இழந்து, தம் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள பிற நாடுகளுக்கு ஏதிலிகளாக அலையும் மக்களை வரவேற்றுப் பாதுகாப்பும் புகலிடமும் வழங்கி அரவணைக்கும் நாடுகளில் முதல் இடத்தைப் பெருமையுடன் பெற்றுக் கொண்ட நாடாகக் கனடா விளங்குகின்றது. ஏதிலிகளை ஏற்றுக் கொள்ளும் நாடுகளாகக் கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்சு, ஸ்காந்திநேவிய நாடுகள், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி முதலிய நாடுகளை ஐக்கிய நாடுகள் சபை இனங்கண்டுள்ளது. ஏதிலிகளையும் தன்னாட்டிற்கு வரவழைத்து அவர்களையும் வாழவைக்கும் நாடுகளே வள்ளுவர் கண்ட இலட்சிய நாடுகளாகும்.

வள்ளுவர் கண்ட அரசியல் இன்றைய அரசியல் கோட்பாடுகளுக்கு விளக்கம் கூறுவதோடு மட்டுமன்றி அன்று வள்ளுவர் கூறிய அரசியல் கோட்பாடுகள் இன்றும் நடைமுறைப்படுத்தக் கூடடியனவாகவே உள்ளன. இவை பற்றி மேலும் மேலும் ஆராய்ந்தறிய வாய்ப்புக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத சுரங்கம்

**கவிஞர்.வி.கந்தவனம்.**

திருவள்ளுவ நாயனாரின் திருக்குறள் ஒரு தங்கச் சுரங்கம். தங்கச் சுரங்கம் என்று சொல்வதும் பொருத்த மாக இருக்காது. ஏனெனில் தங்கச் சுரங்கத்தைத் தோண்டினால் தங்கந்தான் கிடைக்கும். தங்கம் ஒன்றை மட்டும் வைத்துகொண்டு வாழ்க்கை நடத்த முடியுமா? வெள்ளிக்கு எங்கே போவது. அல்லது நிலக்கரிக்குத்தான் எங்கே சொல்வது? வெள்ளி வேண்டு மெனின் வெள்ளி இருக்கும் இடத்தை நாடவேண்டும். நிலக்கரி வேண்டுமெனின் வேறிடம் பார்க்க வேண்டும்.

திருக்குறட் சுரங்கம் அவ்விதம் அன்று. தேவையான அனைத்தையும் தன்னகத்தே உள்ளடக்கி இருக்கும் ஓர் அமுத சுரங்கம்.

நூல் முழுவதுமே அமுதசுரங்கம் போன்று அமையிலும் ஒவ்வொரு குறளுங்கூட ஒவ்வொரு சுரங்கம்போன்று திகழ்வதைக் காண்கின்றோம். ஒவ்வொன்றையும் எவ்வள வுக்கு அகழ்கின்றோமோ அவ்வளவுக்குப் பொருட்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

அகழ்கின்றோம் என்றதும் நினைவுக்கு வருகின்றது இந்தக் குறள்:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 16:1

திருக்குறளுக்கு இடைக்காலத்தில் உரை கண்டவர் பதின்மர் என்பர். எனின், அவர்களில் நால்வர் உரைகளே கிடைத்துள்ளன. இக்குறளுக்கு அந்நால்வர் தந்த உரைப் பொழிப்புகள் பின்வருமாறு:

பரிமேலழகர்: தன்னை அகழ்வாரை வீழாமல் தங்கும் நிலம்போலத் தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறம் என்றவாறு.

மணக்குடவர்: தன்னை அகழ்வாரைத் தரிக்கின்ற நிலம்போலத் தம்மை இகழுமவர்களைப் பொறுத்தல் தலைமையாம் என்றவாறு.

பரிதியார்: பூமி வெட்டுகிற பேரையுஞ் சுமக்கும்: அதுபோலத் தம்மை இகழ்வாரைத் தாங்குதல் தலைமையான காரியம் என்றவாறு.

காலிங்கர்: தமது உருவினைப் பண்புபட அகழ்வாரைத் தான் தாங்கிப் பாதுகாக்கின்ற நிலத்தைப் போலத் தமது உள்ளம் புண்படத் தம்மை வெஞ்சொல்லினால் கூறி அவமதிப்பாரையும் தாம் அதை நெஞ்சில் கருதாது பொறுத்து ஒழுகுதல், தமக்குத் தலைமைப்பாடாவது என்றவாறு.

நால்வரும் 'பொறையுடைமையாவது பிறர்செய்யும் குற்றம் பொறுத்தல்' என்னும் அடிப்படையிலேயே பொருள் கூறியிருப்பதைக் காண்கிறோம். இவர்களுக்குப் பின்வந்தோரும் பொறுத்தல் தலையாய கடன் என்றே

வள்ளுவர் வலியுறுத்துகிறார் என்று பொருள் கூறியுள்ள னர்.

அதுமட்டுமன்று. உரைகளை நுணுகி நோக்குகையில் குற்றமாவது சொல்லளவினதாய குற்றம் என்னும் பொருள்படவே உரை கூறியுமுள்ளனர்.

ஆனால், பொறையுடைமை அதிகாரத்தால் தீமை செய்பவர் இருவகைப்படுவர் என்பது தெளிவாகின்றது. செயலாற் செய்பவர் ஒரு வகை. சொல்லளவோடு நிற்பவர் இன்னொரு வகை. செய்கையால் தீங்கு இழைப்பவரை 'திறனல்ல' செய்பவர் என்றும் 'மிகுதியான் மிக்கவை' செய்பவர் என்றும் சொல்லால் குற்றம் இழைப்பவரை 'இன்னாச்சொல்' சொல்பவர் என்றும் பொறையுடைமை அதிகாரம் குறிப்பிட்டுக் காட்டும்.

தீமை சொல்லளவினதாயின் எந்த அளவுக்கும் பொறுத் துக்கொள்ளலாம். தீயினாற் சுட்ட புண் ஆறினும் நாவினாற் சுட்ட வடு ஆறாதாயினும் பரவாயில்லை பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் செயலாற் செய்யப்படும் தீங்கு எல்லை மீறும் போது பொறுமைக் கும் எல்லை வகுக்கவேண்டியுள்ளது.

காகம் ஒன்றும் தலையிலே கூடுகட்டப் பார்த்துக்கொண் டிருக்கலாம். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் வரைக்கும் பொறுத்துக்கொண்டிருக்கலாம். தலையையே அது கொத்தித் தின்னுகின்ற பொழுது?

பதில் தருகின்றது இக்காலத்துப் புதுக் கவிதை ஒன்று:

கண்டவற்றுக்கு எல்லாம்
கையை
கட்டுவதும்
ஏந்துவதும்
நீட்டுவதும்
ஓங்குவதும்
கூடாதுதான்!

ஆனால்

தலையிலே கூடுகட்டி
குஞ்சு பொரித்ததும் போதாதென்று
தலையையே கொத்திப் புண்ணாக்கும்
காகத்தைக் துரத்த
ஓங்காத கை
ஒட்டி இருந்தாலும் என்ன?
ஒட்ட முறிந்தாலும் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் பெருமான் எதையும் அளந்து சொல்பவர் பொறுமைக்கும் எல்லை உண்டு

என்பதை அவர் அறியாதவர் அல்லர். குணம் என்னும் குன்றேறி நிற்பாருக்கும்

வெகுளி வரும் என்று சொன்னவர் அவர்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்னும் குறள் பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் முதற் குறள். இந்த முதற் குறளிலேயே ஒருவரின் பொறுமைக்கு எல்லை உண்டு என்னும் கருத்தை வள்ளுவனார் குறிப்பால் உணர்த்தியிருக்கும் பாங்கைக் கவனிப்பாம்.

பொறுத்தலுக்கு அவர் உவமானமாக எடுத்துக்காட்டும் பொருள் நிலம் - அகழ்வாரைத் தாங்கும் நிலம். அகழ்வாரை நிலம் எவ்விதம் தாங்கிக்கொள்கிறது?

விழவிடாது தாங்கிக்கொள்கிறது. பொதுவான இந்தக் கருத்திலேயே உரையாசிரியர்கள் பொருள் கூறியிருப்பதை மேலே கண்டோம். இதற்கு அப்பால் இந்தக் குறளைத் தோண்டிப் பார்க்கின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்னும் பொருள் புதைந்து கிடப்பதைக் காணலாம். அவ்விதம் காண்பதற்குப் புவியியல் அறிவு சற்று அவசியமாகின்றது.

நிலம் அமைப்பால் மேற்படை (mantle), வெளிப்படை (outer core), உட்படை (inner core) என மூவகைப் படைகளைக் கொண்டுள்ளது. மேற்படையின் வெளிப் பாகம் ஓடு (crust) எனப்படும். இந்த ஓடுதான் கண்டங்களையும் சமுத்திரங்களையும் தாங்கியுள்ளது. மனித வாழ்க்கைக்கும் இன்றியமையாத பகுதி இதுவேயாகும்.

கண்டங்கள் பாறைகளாலானவை. பாறைப் படையின் மேற்புறம் காலநிலை மாற்றங்களாற் சிதைவுற்று மணலாகியுள்ளது. எனவே, மண்ணரிப்பால் பாதிக்கப் படாத நிலத்தின் மேற்பரப்பில் நாம் முதலிற் காண்பது மண் படையேயாகும். அதன்கீழ் சிதைவுறாத அல்லது சிதைவு முறைக்கு உட்பட்ட பாறைப் படை இருக்கும். மழை நீர் மண்படையின் அடியிலும் பாஷைகளின் துளைவுகள், வெடிப்புகள் வழியாகச் சென்றது பாறைப் படையிலும் தங்கி நிற்கும்.

இந்தக் குறளை விளங்கிக் கொள்வதற்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றுமொரு முக்கியமான விடயம் என்ன வென்றால் நிலத்தைத் தோண்டுகின்ற பொழுது வெப்ப நிலை கூடிக்கொண்டு செல்லும் என்பது. புவியின் உட்புறம் நோக்கி ஒவ்வொரு 64 அடிக்கும் ஒரு பாகை சென்ரிகிரேட் வீதம் வெப்பம் அதிகரிக்கின்றது.

இனி, நில அமைப்பும் பற்றி இந்த அறிவுடன் அகழ்வாரைத் தாங்கும் நிலத்தை நோக்குவாம்.

மண்படையைத் தோண்டுகின்றபொழுது நிலம் பொறுத்துக்கொண்டும் தோண்டுகின்றவரைத் தாங்கிக் கொண்டும் இருக்கின்றது. பொதுவாக நாம் நிலத்தைத் தோண்டுவது நீருக்காகவே. அதனால் நிலம் பொறுத்துக்கொண்டு தோண்டுகின்றவரைத் தாங்கும் அதே வேளை, அவர்களுக்கு நீரைக் கொடுத்தலாகிய மேலதிக நன்மையையும் செய்கின்றது. இவ்விதமே எண்ணெய், கனிப்பொருள் முதலியனவற்றை நாடித் தோண்டுகின்றவர்களும் நிலம் நன்மையே செய்யும் இயல்புடையது.

எனின், மண்படையை அடுத்து இருப்பது பாறைப்படை என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பாறைப்படை தொடர்ந்து தோண்டுவதைத் தடுக்கின்றது. 'இத்துடன் நிறுத்திக்கொள்! இதற்குமேல் தோண்டாதே!' என்று நிலம் தடுப்பது போல நாமும் எம்மை இகழ்பவர்க்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்பது பொருள்.

இந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வெடிவைத்துப் பாறைகளைத் தகர்த்து, தோண்டுதல் முயற்சி எல்லை யைக் கடக்கும்பொழுது, பாறைப்படைக்குள் தேங்கி நின்ற நீர் பீறிட்டு வெளிவருகின்றது. நிலம் அகழ்வைத் தாங்காது அழுகின்றது என்று அர்த்தம். அதனையும் மீறி அகழ்வு தொடரும்போது, பொறுக்கமுடியாத சந்தர்ப்பங் களில் நிலம்

பொறிந்து விழுந்து சுரங்கக்காரர்களைச் சாகடித்து விடுகின்றது. இதற்குப் பல சுரங்க விபத்துக்களை உதாரணங்களாகக் காட்டலாம்.

மேலும் தொடர்ந்து தோண்டினால் வெப்பச் சுவாலையால நிலம் தோண்டுபவர்களைத் தண்டிக்கும் பந்தி. ஆக அகழ்வாரைத் தாங்கும் நிலத்தின் இயல்பு இவ்வாறா தலால் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதனை வள்ளுவனார் குறிப்பால் உணர்த்தி இருக்கின்றார் என்பது தெளிவு.

இவ்விதம், திருக்குறள் ஒவ்வொன்றையும் ஆழமாக அகழ்ந்து நோக்கின் புதுப்புதுப் பொருள்கள் வெளிப்படு மாதலால் அவற்றை அமுத சுரங்கம் என்பது சாலப் பொருந்தும்.

எனின், மின்னுவதெல்லாம் பொன்னாக இருப்பதில்லை. நிலத்தைத் தோண்டிச் சில மினுங்கும் கற்களை எடுத்து வைத்துக்கொண்டு அவை நவமணிகளென மயங்கும் அறிவிலார்போன்று, திருக்குறளை அகழ்வார் சிலர் புதுமை என்னும் பெயரிலே பொருந்தாப் பொருள்களை வலிந்து கொண்டு திருவள்ளுவருக்குத் துரோகஞ் செய்து வருகின்றனர்.

திருக்குறளில் இல்லாத பொருளை எடுக்க முயல்வது அண்மைக் காலத்தில் தங்கம் இல்லாத இடத்தில் தங்க த்தை எடுக்க முயன்று பலரை ஏமாற்றி முறிந்துபோன கம்பனியின் பரிதாபக் கதைக்குச் சரியானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் கல்வியாளர்களின் கருத்துக்கள்

பண்டிதர் ம.செ.அலெக்ஸாந்தர்
**BA Dip. in.Ed,Eng sp Trd, Teachers' counsellor. Lecturer.**

தமிழன் என்ற இனம் தரணியில் உண்டு, தமிழனுக்கு கலாச்சாரம் பண்பாடு உண்டு, தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிறான் என்றால் அதற்குக் காரணமும் உண்டு. எதற்கும் ஆதாரம் கேட்கும் உலகம் இது. அசைக்கமுடியாத ஆதாரம் உண்டு என்றால் எல்லோரும் ஒருமித்து எதுவெனக் கேட்பர். தமிழரின் இன்றைய பெருமை, உரிமை, தைரியம் அனைத்துமே ''திருக்குறள்'' என்றால் ஆதாரம் கேட்பவர் அமைதியாவர். தமிழன் இன்று உலகெங்கும் பரந்துபட்டு வாழ்கின்றான். பரந்துபட்டிருக்கும் உலகத்தமிழ் இனத்தை ''நீவிர் எல்லாம் ஒன்று, ஒரே இனம் ஒரே பண்பு'' என்று உறவுமுறை கூறிப் பிணைக்கும் பாசவிலங்கு திருக்குறள் என்றால் அதுவே உண்மை என்று உலகமே ஒருமித்துக் கூறும். இன்று தமிழ் நாட்டிலே தமிழரின் தேசிய நூலாகத் திருக்குறளை ஆக்கத் திட்டமிடும் வேளையிலே கனடாவில் திருக்குறளுக்கு விழா எடுப்பது மிக உகந்தது எனில் அதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இத்த கைய திருக்குறளை நவில்தொறும் நல்ல பல்வேறு வாழும் கருத்துக்கள் பொலிந்தாலும், பொலியும் வழி யிலே திருக்குறள் கூறும் கல்விக் கருத்துக்களோடு பொருத்திப் பார்ப்பது இக்கட்டுரையில் மலரும் குறிக்கோளாகும்.

மனித வாழ்க்கை முழுவதுமே தத்துவத்தின் ஆராய்சிப் பொருளாகும். கல்விக்கும் வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமையும் பல்வேறு பிரச்சினைக ளிலும் தத்துவம் கவனம் செலுத்துகின்றது. தத்துவம் என்றால் உண்மை, கல்வித்தத்துவம் இன்று பரந்து பட்டு நிற்கிறது,. ''கற்று முடித்துவிட்டோம் என்று மனநிறைவு அடையாமல் மேலும் மேலும் கற்பதில் அயராத அவா ஏற்படுவதே தத்துவத்தின் அடிப்படை'' என்று கல்வியாளர் பிளாட்டோ கூறுகிறார். இந்த அடிப்படையில் நோக்கில் திருக்குறளைக் கற்குந் தோறும் புதுப்புதுக் கருத்துக்கள் பொங்கிவரும். ஆதலின் திருக்குறள் தத்துவத்தின் வித்தாக அமை கிறது. பிளாட்டோவின் கருத்துப்படி ''கல்வி முடிந்த முடிவல்ல அது ஒரு யாத்திரை'' என்று கூறப்படுகின்றது. ஆகவே திருக்குறள் கல்வியைத் தரிசனமாக்கி என்றும் வழிகாட்டி வழங்கும் அகராதி ஆகின்றது.

உலகத்திலே இன்றும் உயர்நிலையிலே மதிக்கப்படுகின்ற கல்வியாளர்களான சாக்கிரட்டீஸ், பிளாட்டோ, அரிஸ்ரோட்டல் போன்றோர் சமூக இசைவாக்கத்தைக் கூறி, சிறந்த நற்பிரஜையாவதே கல்வியின் நோக்கம் என எடுத்தியம்புகின்றனர். மேலும் நல்ல குடிமகனாகுவதை இங்கிலாந்து, அமரிக்கா, கனடா போன்ற நாடுகளும் கல்வியின் நோக்கங்களில் முக்கியமானதொன்றாகக் கூறுகின்றன. கல்வியானது குழந்தை நான் என்பதிலிருந்து நாம் என்ற உணர்வை குடும்பம், கிராமம், மாவட்டம், தேசியம் சர்வதேசியம் என்ற ரீதியிலே வளர்க்க வேண்டும் என விரிவாக்கம் பெறும் கல்விக் கருத்துக் கூறி, சமூக இசைவே கல்வியின் கருத்து என உறு திப்படுத்துகிறது.

அரம்போலும் கூர்மையர் ஏனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லாதவர்
(97-100 பண்புடமை)

திருக்குறள் மக்கட்பண்புதான் கல்விப் பண்பு என அறிவோடு பொருத்திக் கூறிய மாண்பு இன்று எம்மெல்லோரையும் வியக்கவைக்கின்றது. அரம் போன்று கூர்மையான அறிவுபடைத்தவராக இருந்தாலும் மக்களோடு சேர்ந்து விட்டுக்கொடுத்து அங்கீகரித்துப் பழகும் மக்கட்பண்பில்லாதவர் மரம்போல்வார் என்று எளிமையாகத் தன்கருத்தை எல்லோருக்கும் விளங்கவைத்த திருக்குறளின் மாண்பு உலகவியப்பு.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் (குறள்399)

கற்றறிந்தவன் யார் என்றால் உலகம் இன் புறக்கண்டு மகிழ்பவன் எனக் குறள் கூறுகின்றது. ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதும் திருக்குறள் தரும் கருத்தில் இருந்தே வந்தது. கற்றறிந்தவரின் இன்பம் உலகை இன்புறுவதாகக் காண்பதுதான் என்றும் மனிதர் மட்டில் மக்கட்பண்பு வேண்டுமென்றும் என்றோ கல்விக் கருத்தைக் கூறிய குறளின் பெருமை தமிழனின் பெருமையாகும். குறளின் கருத்திலிருந்தே இன்று முகாமைத்துவக் கல்வியில் (Education in Management) மனித நேய அணுகுமுறை சிறப்பிடம் பெற்றுக் குறள் கூறும் கல்விக் கருத்தை மிளிரவைக்கின்றது.

கல்வியில் இன்று விஞ்ஞான அணுகுமுறை பற்றிப் பேசப்படுகிறது. மெய்ஞ்ஞானம் கூறும் திருக்குறள் விஞ்ஞானம் பற்றிக் கூறுமா, எனச் சிந்திப் பாருமுண்டு. திருக்குறள் கூறும் விஞ்ஞான ஆதாரக் கருத்து சிந்தனையைத் தூண்டி திருக்குறளை மேலும் மேலும் ஆய வழிவகுக்கும். கல்வி என்பது மனிதனுக்கும் அவனுடைய சூழலுக்கும் ஏற்படும் இடைத்தாக்கம் எனப்படுகிறது. மனிதனுக்கு பௌதிகச் சூழல் சமூகச் சூழல் என இரண்டு சூழல்கள் உண்டு எனலாம். சூழலை மனிதன் மேற்கொண்டு பாயும் நீரிலிருந்து சக்தி பெற்று ஒளியூட்டினான். ஆற்றை மறித்து அணை கட்டி, நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்தான். சூழலை அவதானித்து மேற்கொண்டு மனித நலத்தை மேம்படுத்தினான். விஞ்ஞானம் என்பது அறிந்து கொள், ஒப்பிட்டறிந்து கொள், ஆதாரத்தோடு தெரிந்துகொள், நீயேதான் அறிந்து ஓர்ந்துக்கொள் போல்வனவற்றைக் காட்டி நிற்கிறது.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 428)

எப்பொருள் எத்தன்மை ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள் 355)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் சொன்னால் என்ன எப்படிப்பட்ட பொருளாயிருந்தாலும் சரி அதனுடைய மெய்ப் பொருளை நீயே அறி என்கிறது குறள். ஏன்? என்று எப்போ கேட்க மனிதன் முனைந்தானோ அன்றே விஞ்ஞான விடையை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டான். அதனால் காரணம் கேட்டு சிந்தித்து தனது மனதிற்கு ஏற்புடையதாயின் ஏற்றுக்கொண்டான். கம்பன் சொன்னால் என்ன திருக்குறளில் இருந்தாலென்ன, விவிலியம் மொழிந்தாலென்ன, அன்றேல் வேறெந்தப் பெரியார் சொன்னாலென்ன, இவற்றை யெல்லாம் நீயே பொருத்திப் பார்த்து, அவதானித்து விசாரித்தும் வாசித்தும் பெற்ற தகவல்களை பகுத்தும் தொகுத்தும் பார்த்து, தேர்ந்து கொள் என இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கூறிய குறள் தமிழனின் வழிகாட்டும் ஒளிவிளக்காகும். இதனால் போலும் யூனஸ்கோ தரும் கல்வி கற்றல் கற்பித்தல் உத்திகளிலே சுயமாகக் கற்பதே சிறப்பு எனவும் வகுப்புக் கற்பித்தலுக்கு தேவையானது என்றும் கூறப்படுகிறது.

நான் கேட்கிறேன், மறந்து விடுகிறேன்,
நான் பார்க்கிறேன், ஞாபகமிருக்கிறது,

நான் செய்கிறேன், விளங்கிக்கொள்கிறேன்.
(சீனப்பழமொழி)

நான்கண்டுபிடிக்கின்றேன், அகமகிழ்கின்றேன்.
(யூனெஸ்கோ)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் குறள் கூறிய கருத்து ''யூனெஸ்கோ'' கூறிய கற்பித்தல் உத்தியைத்தான் அமெரிக்க கல்வி உளவியல் தத்துவ ஞானியாகிய ஜோண் டியூகி உடைய செயல் மூலம் கற்றலைத் தழுவிநிற்கிறது.

''மனவெழுச்சிகள் மனிதனின் உண்மை வெளிப்பாடு'' ரூசோ, ''மனத்தின் உயர் பயிற்சியால் மேனிலை அடைதல்'' அரவிந்தர், ''உள்ளகத்தே தோன்றும் இயல்பான மலர்ச்சியே கல்வி'' பிரோபல், இவர்களோடு மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந் தர் போன்றோர் உடல் உளம் ஆன்மா ஆகிய வற்றின் சிறப்புள்ள பண்புகளை வெளிக்கொணர்வது கல்வி என்கின்றார்கள். கல்வியியலில் உளவிரு த்திக்கு முக்கிய இடமளிக்கப்படுகிறது குழந்தையின் விருப்பு வெறுப்புகளை வைத்தே குழந்தை மையக் கல்வி ஏற்பட்டுள்ளது. (child centered education)

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற் பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு (190)

கிரேக்க தத்துவஞானியான சாக்கிரட்டீஸின் கூற்றான ''உன்னையே நீ அறிவாய்'' என்பதும், பௌத்தம் கூறும் "கல்வி என்பது வேறொன்றும் இல்லை தன்னைத்தான் அறிதல்'' என்பதோடு மிகப் பொருந்துகிறது. "Education is nothing but self realization." உனக்கு நீ உண்மையுள் ளவனாய் இரு என்ற வள்ளுவனின் குறள் காட்டிவிடும். மேலும் மற்றவனுடைய குற்றத்தைக் காண்பது போல் தமது குற்றங்களைக் காணவல்லவரானால் வாழ்விலே துன்பம் இல்லை என்கிறது. கல்வி உளவியலை ஆசிரியர்கள் படிப்பது ஏனெனில் தம்மைத்தாம் அறிய, மாணவர்களை அறிய, மாணவர்களின் உள உடல் சமூக முதிர்ச்சிக்கேற்க தமது கற்றல் கற்பித்தல் உத்திகளை அமைத்து, ஏற்றபடி வழிப்படுத்துவதற்காகும். தமிழ் கூறும் நல்லுலகம் மனத்தின் மாண்பு பற்றிக் கூறுவதையும் ஒப்பிட்டுக் குறளின் விளக்கத்தையும் பார்க்கில், குறளின் என்றுமுள எளிதான நோக்கு விளங்கும். ''மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை''- திருமந்திரம், ''மனத்திலே தூய்மை உள்ளவர்கள் பாக்கிய வான்கள்'' - விவிலியம், ''நினைவு நல்லது வேண்டும்''- பாரதியார், ''மனத்துக்கள் மாசிலன்

**ஆதல் அனைத்து அறன்**
**ஆகுல நீர பிற'' (குற 34)**

மனத்தூய்மையுடையவன் எச்செயலைச் செய்தாலும் அதுவே அறம் என்று வள்ளுவன் கூறுவது அறிவு, மனப்பாங்கு, செயற்றிறன் ஆகிய அனைத்தும் ஒருமித்து வழங்கும் ஒன்றிணைந்த கல்வி விழுமியக் கூற்றாகும். இதைவிடச்சிறந்த விவரணம் அறத்திற்குச் சுருங்கக் கூறி விளங்கவைப்பது இல்லை என்றால் மிகையாகாது. சாக்கிரட்டீஸ் ஆசிரியர்கள் பற்றிக் கூறும்போது அவர்கள் ஞான விளக்கு என்கிறார். அவர் வழிநின்று ரூசோ ஆசிரியர்கள் அன்பினால் மாணவரிடத்துத் தூய உள்ளத்தை ஏற்படுத்தும் நல்ல முன்மாதிரிகையாளர் என்கின்றார்.

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன் (குறள்294)**

குறள் கூறும் வாசகம் ஆசிரியர் மாணவர் நல்லுறவை (rapport) ஏற்படுத்துவது மட்டுமல்லாத சாக்கிரட்டீஸ் கூறும் ஆசிரியன் சால்பையே காட்டுகிறது, எமக்கு என்றோ கல்வி கற்பித்த இத்தகைய ஆசிரியர்களை எண்ணுந்தோறும் எம் கண்கள் கண்ணீர் மல்கும். கற்றற் கொள்கையிலே தூண்டல், துலங்கல், கொள்கை (S.R. Theory). கற்றல் கற்பித்தலில் முக்கியமானது ''தூண்டலுக் கேற்ற துலங்கலை ஏற்படுத்துவதே கல்வி இத்தோடு தூண்டல் (Stimulus) துலங்கல் (Response) மீள்வலியுறுத்தல் (Re-inforcement). எதிரிடை மீள வலியுறுத்தல் (Negative Re-enforcement ) வாழ்க்கையிற் பின்னடைவை ஏற்படுத்தும். கல்வியிலே நேரான நிறை விழுமியங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. எதிரிடை விழுமியங்கள் கல்விவளர்ச்சிக்குப் பெருந்தடை. கற்றல் கற்பித்தலில் எதிரிடை மீள வலியுறுத்தலை மடைமாற்றம் (Sublimation) செய்து நேரான மீளவலியுறுத்தலைக் கல்வி வேண்டி நிற்கிறது. இதனையே திருக்குறள்

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து (குறள்596)**

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது. எண்ணம் என்றும் உயர்வாத எண்ணப் படவேண்டும் என்பதை என்றோ கூறிய குறள் கல்வி உளவியல் இன்று கூறும் சிலகோட்பாடுகளை அன்றே தந்த மூல வளம் என்றால் நாமெல்லாம் ஆச்சரியப் படாமல் இருக்கமுடி யாது.

கல்விகற்பது நமது வாழ்க்கையை நன்றாக வளம்பட வாழ்வதற்கே ஆகும். அதனை ஜோண்டியூஇ "வாழ்க்கை மையக்கல்விக் கோட்பாடு என்கிறார். இதனையே கில்பாற்றிக் மகாத்மா காந்தி கேவாட்ஸ பென்சர் போன்றோர் முக்கியப்படு த்துகிறார்கள். இன்று எல்லா நாடுகளுமே கல்வி வாழ்க்கைக்கு என்பதை ஏற்று கல்விச்செயற்பாடுகள் செயற்றிட்டக்கல்வி சனத்தொகைக் கல்வி என்றெல் லாம் வாழ்க்கையை மையமாக வைத்தே வழங்குகின்றன. கல்விக்கருத்துக்கள் எந்த ரூபத்தில் எந்தளவில் வந்தாலும் மனித வாழ்க்கைக்குப் பயன்படும் பொழுதே அது விழுமியமாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (குறள் 391).

வள்ளுவன் வாய்மொழிப்படி நன்றாகப்படி படித்த பின் அதன்படி வாழ்வில் ஒழுகு என்று சுருங்கக் கூறிப் பரந்த கல்விப்பொருளை விளக்கியது மிகச்சிறப்பு. அதனால் திருக்குறள் தமிழராகிய எமக்கு என்றுமுள "திரு" ஆகிவிட்டது. கல்வியில் தீர்மானம் இன்று முகாமைத்துவக் கல்வியில் முக்கியமான ஒன்று. இதனைத்திருக்குறள்

**எண்ணித் துணிவது கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு குறள் 467**

எண்ணி என்பது பல்வேறு தகவல்களையும் சேர்த்து ஒழுங்கு படுத்தி பகுத்தும் தொகுத்தும் பார்த்து தேவையற்றவைகளை நீக்கி மற்றவற்றை ஏற்று அதன்வழித்துணிக என்கிறது. அதனைச் செயற்றிட்டக் கல்வி என்றோ வழிகாட்டற் கல்வி என்றோ எப்படிககூறினும் நெகிழ்ந்து பேருண்மைதரும் திருக்குறளின் மாண்பைக் காட்டுகிறது.

வாழ்நாள் கல்வி (Life Long Education) என்று இன்று எல்லா நாடுகளிலும் செயற்பட்டு வருகிறது. இதனை அன்றே குறள் கூறி எம்மை யெல்லாம் வியப்புக்கொள்ளவைக்கிறது

**யாதானு நாடாமல் ஊராமல என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு குறள்397**

சாந்துணையும் கல்வி என்று வாழ்நாட்கல்வியை உறுதிப்படுத்தி என்றும் கல், எப்போதும் கல், நிறைவு பெற்றுப் பெருவாழ்வு வாழ் என்று கூறிநிற்கிறது.

திருக்குறளின் பெருமை நவில்தொறும் நயம் தரும் கருத்துக்கள் பொங்கி மலிவதிலே தங்கியிருக்கின்றது. எண்ணும் எழுத்தும் கண்கள் போன்றவை என்பர். எண்ணமே எதற்கும் முதலாகும். எண்ணத்திலிருந்தே செயலாகிய எழுத்து ஏற்படுகிறது. எண்ணம் முன்னையது எழுத்து பின்னையது. இன்று எண்ணமே முதலாக வேண்டுமென்ற சனநாயக நாடுகளும் கிரிகையாம் உற்பத்தியால் வரும் பொருளே வேண்டுமென்ற கமயூனிஸ சோஷலிஸ நாடுகளும் தத்தம் இலக்குகளாய் எண்ணம் கிரிகையாம் எழுத்து என்பனவற்றைப் பிரிது பிறிதாகக் கருதுகின்றன. இதனாலே சிவன் என்பதை எண்ணம் என்றும் சக்தி என்பதை பெண் பார்வதி என்றும் கொள்கின்றனர். (எண்ணத்திலிருந்து எழுத்து வருவது போல) அவற்றிலும் சமத்துவம் பேணி அர்த்த நாரீஸ்வரர் உருவம் சமத்துவம் பேணுவது போல் அமைகிறது. எண்ணத்திற்கும் எண்ண விரிவாக்கத்திற்கும் தகுதி நிலையாகப் பின்வரும் குறளை எண்ணலாமா!

**``எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" குறள்392**

பல்லின நாடாகிய கனடாவின் கல்விக்கொள்கை யிலே (sharing)பகுத்து வழங்கல் மிகமுக்கியமாகக் கொள்ளப்படுகின்றது. கலாச்சாரப் பரிவர்த்தனை பல்வேறு இன உடை நடை பாவனைகளை நயத் தலும் மதித்தலும் போன்ற மனப்பாங்குகளை வளர்த்து உலகை ஒன்றாகக் காணும் (Globalization) கல்வி கனடாவின் கல்விக் கொள்கைகளிலே பரிணமிக்கிறது.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை
குறள் 322**

பகுத்துண்டு வாழ்தலே சோஷலிஷம். ஆதிக்கி றிஸ்தவ மரபும் பகுத்துண்டு வாழ்தலே சிறந்த கோட்பாடென்கிறது. இதன் வழியே இன்றுள்ள கல்விக்கொள்கைகளும் உத்திகளும் பலவாகும். கூட்டுறவுக் கற்றல் கோட்டி முறைக்கற்பித்தல் (Team Teaching) போன்ற கற்றல் கற்பித்தல் உத்திகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்குறள்தந்த கருத்திலிருந்தே உதித்தது என்று எண்ணும்போது குறளின் பெருமை வாழும் பெருமையாகிறது. பகுத்துண்டு வாழ் பகுத்துப் பரவசமாக்கு கல்வியில் பகுத்துப் பரிவர்த்தனை செய்தபடியாலேயே மறுமலர்ச்சி ஏற்பட்டது. குறள் கூறும் தத்துவம் யாம்பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும் என்பதாகும். பணிவுடமை இன் சொல் இவ்விரண்டும் வாழ்வில் வழங்கி எவ்வூரும் நம்மூராக்கி இந்தப் பல்லின மக்கள் மத்தியிலும் தமிழராகிய எம்மைப் பாங்காய் பழகி பகுத்துப் பரவசமாய் வாழ மற்றோரை வாழ வைக்கத் திருக்குறள் வழிகாட்டும்.

இன்று கல்விப்பொருள் மிகமிகப் பரந்து பட்டது போல் இருப்பினும் திருக்குறள் தனது "ஓரடி முக்கால்" என்ற அடிகளால் அடிப்படை உண்மைகளை எதற்கும் பொருந்தும் வண்ணம் கூறியிருக்கின்றது. ஜோண்டியூஇ என்ற கல்வியாளர் விழுமியங்கள் மாறக்கூடியன என்று கூறினும், காலத்தைக் கடந்து நிற்கும் குறளடிகள் அதனை விஞ்சி எப்பொருளையும் அண்மைநிலை தகுதிநிலை அவாநிலை வழிகளில் எஞ்ஞான்றும் வழங்குகின்றது. கற்று முடித்து விட்டோம் என்று மனநிறைவு அடையாமல் மேலும் மேலும் கற்பதில் அவா ஏற்படுத்துவது தத்துவத்தின் அடிப்படை ஆகும், என்று கல்வியாளர் பிளாட்டோ கூறியிருக்கிறார். அவருடைய விழுமியக் கூற்றான கல்வி முடிந்த முடிபல்ல அது ஒரு யாத்திரை என்பதைக் கூறி, திருக்குறள் தரும் தத்துவப் பொருளில் யாத்திரை செய்யுங்கள். மேலும் மேலும் கற்கவேண்டும் என்ற அவாவை ஏற்படுத்தும் திருக்குறளை நெகிழ்ச் சியுடைய தத்துவப் பொருளாய்க் காண்பீர்கள். அப்பொருள் இன்று எப்பொருளுக்கும் உகந்த விவரணம் தந்து நவில் தொறும் நயம் தரும் கல்விப்பொருளாகி, உலகத்தமிழினத்தின் பாசவி லங்காகி எம்மெல்லாரையும் விளக்கி விளங்கவைத்து அனைத்துலகத் தமிழினமே விழித்தெழு வியந்தெழு என்றும் பழமை போற்றி புதுமையில்வாழ் என வாழ்த்தும் . வாழ்க திருக்குறள் வளர்க அதன் மாண்பு

## குறள் உலகத் தமிழினத்தின் பொன் விலங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொரன்ரோவில் முதன்முதலில்
புடவை வியாபாரத்தை
ஆரம்பித்த முன்னோடிகள்

# 6 Kumars

றொறன்ரோவில் முதல்முதலில் புடவை
வியாபாரத்தை ஆரம்பித்த முன்னோடிகள்

Silk House

▼என்றும் புதிய வெளியீடுகள்

▼உயர் தர தூய காஞ்சிபுரம் , திருமண கூறைப் புடவைகள்

▼பட்டுப் புடவை கூறைகள்

Scotch Guard பனாரஸ் சற்றின் புடவைகள் (குங்சம் கட்டியபடி)

▼கோலம், ரங்கோலி, அபூர்வா, அனுராகா, தேவதாவின் புதிய வெளியீடுகள்: Golden Tasue, Centre Brocade, Turning Border சாறிகள்

▼கௌரி, காயத்திரி, மைசூர்சில்க், காஸ்மீர் சில்க் சாறிகள்


▼மாப்பிள்ளைக்குத் தேவையான சர்வாணிசூட், தலைப்பாகை, உத்தரயம் வாடகைக்கும் விற்பனைக்கும் (சகல அளவுகளிலும்)

▼Gold Covered பரதநாட்டிய நகைகள், ஆடைகள், பஞ்சாபி உடுப்பு வகைகள், நக்மாசூட், ரம்பாசூட், சிறுவர் சிறுமியருக்கான ஆடைகள்

அனைத்து வகையான எவர்சில்வர் பொருட்கள், பித்தளைப் பொருட்கள்

▼அனைத்து வகையான பிளவுஸ் துணிகள்(Cotton), Polystor, Pure Silk) ரெடிமேற் சாறி பிளவுஸ்கள், முத்துமணி வேலைப்பாட்டுடன் கூடிய பிளவுஸ்கள் (10000க்கு மேற்பட்ட தெரிவுகள்)

▼ஆண்களுக்கான Deniam Trousers, Shirts, T. Shirts, Underwear, Kurtha With Pajama, Kibs Lungies தூய சேலம் பட்டுவேட்டி சால்வை, மாறுகரை பட்டுவேட்டி சால்வைகள்



நகரின் மத்தியில் உங்கள்
குடும்பத்திற்குத் தேவையான
அனைத்து புடைவைத்
தேவைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாட
வேண்டிய ஒரே இடம்

**1394 Gerrard St. E.,**
**Toronto, Ont**
**M4L 1Z4**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUKKURAL- A HOLY BOOK OF ALL TIMES AND ALL PEOPLE

**E. SANGARA PILLAI (E.S.P.GODSON)**
**UNIVERSAL TEACHER & INTERNATIONAL POET.**

In the words of Sir Francis Bacon, some books are to be tasted ; some to be chewed; some to be digested . May we go a step further and say that any didactic book like Thirukkural must not only be digested but also be treated as a life-sustaining source of pleasure and profit. Else the readers cannot do full justice to its author.

It is universally admitted fact that Thiruvalluvar the author of the sacred thirukkural has been an enigma. Teachers claim Thiruvalluva Nayanar as a great teacher . Philosophers claim him as a great Philosopher. Moralist call him a great moralist. Married men and women claim him as a chaste husband with an exemplary character. Sages call him a great sage. Judges accept him as an upright judge. Logicians look upon as a great logician. Strategists call him an ingenious strategist. And different religions claim him as their religious teacher. But the ultimate truth is that Thiruvalluvar is all in one and therefore those who claim him as only theirs , are like the seven blind men of Gotham who went to have an idea of what an elephant was by touching only certain parts of its body .

Thiruvalluvar was a god-sent redeemer of mankind. Thirukkural his master piece of Tamil poetical work is one of the highest and purest expressions of human thought . He addressed himself without regard to castes, peoples and beliefs to the entire community of mankind .

Valluvar formulated sovereign morality and absolute reasons and dealt with virtue and truth as the highest laws of domestic, social, economic and political life. He was equally perfect in thought ,in language and in poetry and in the austere metaphysical contemplation of the great mysteries of divine nature as in the easy and graceful analysis of the tenderest emotions of the heart. Brevity and not verbosity was his style . His two thousand six hundred and sixty lines of divine Thirukkural were written in compressed , compact and analytical form. His was an effective style and never a style of affectation. And he was never accused of poetic bombast. He believed in education for life and by life .Thirukkural is a book of precepts that deals with the do`s and don'ts of life.

Let us now concentrate on the following twenty seven couplets (kurals)and try to understand the lofty thoughts they contain :

(1) Chapter 1 - THE PRAISE OF GOD- KURAL 2: -
What is the use of one's education if one doesn't worship the omniscient god ?

(2) Chapter 4 - THE STRENGTH OF VIRTUE - KURAL 4: -
Real virtue (dharma) consists in the purity of mind and in nothing else.

(3) Chapter 5 - MARRIED LIFE - KURAL 10: -
He who lives a perfect life in this world will have a place in heaven.

(4) Chapter 6 - THE WIFE - KURAL 4:
For married man , there cannot be any wealth greater than his wife provided she preserves her chastitv.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) Chapter 7 - THE BEARING OF CHILDREN - KURAL 9 : -
The happiness a mother derives from the oceanic erudition of her son is far greater than the joy she felt at his birth.

(6) Chapter 11 - GRATITUDE - KURAL 10 : -
Whatever sin a person commits , he may have salvation but he is doomed to destruction when he is guilty of ingratitude.

(7) Chapter 12 - IMPARTIAL JUSTICE -KURAL 8 : -
Impartiality or moral rectitude is the most essential characteristic of the learned.

(8) Chapter 14 - THE POSSESSION OF DECOROUS CONDUCT- KURAL 1: -
Good conduct is considered more precious than even one's life because of its inherent merits.

(9) Chapter 16 - FORBEARANCE -KURAL 6 : -
The joy one derives by punishing an evil - doer is only short - lived , where as his forbearance earns him fame until the end of the world.

(10) Chapter 24 - FAME - KURAL 6:
It is better for a person not to come into this world unless he is born with such qualities that can earn him fame.

(11) Chapter 25- Benevolence- KURAL 7 : -
In the way the poor cannot enjoy this worldly life , those who are not benevolent cannot enjoy their life after death.

(12) Chapter 26 -ABSTINENCE FROM ANIMAL FOOD -KURAL 10 : -
All creatures will worship those people who neither kill any creature nor eat it's flesh.

(13) Chapter 27 - PENITENCE -KURAL 9 : -
Those who attain great power from penitence can even conquer death.

(14) Chapter 34 - INSTABILITY OF WORLDLY THINGS - KURAL 1 : -
It is ignominious if those who have renounced this world believe that things that are not lasting , are eternal.

(15)Chapter 38 - DESTINY - KURAL 7 : -
Even if one has billions of dollars , one cannot enjoy it unless one is destined by god to do so.

(16) Chapter 40 - LEARNING - KURAL 1 : -
Let one learn thoroughly well useful books and then live in accordance with his learning.

(17) Chapter 43 - WISDOM - KURAL 3 : -
True wisdom consists in the finding of truth from whichever source one gathers information.

(18) Chapter 55 - RIGHTEOUSNESS - KURAL 7 : -
The king protects his subjects and his righteous sceptre protects him.

(19) Chapter 62 - PERSEVERANCE - KURAL 6 : -
Those who are persevering will be rich and those who are indolent will be poor.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20) Chapter 64 -THE MINISTER-KURAL 6 :-

No plot can ever cause any harm to those who have natural intelligence coupled with acquired knowledge from books.

(21) Chapter 65 - THE POWER OF TONGUE KURAL 7 : -

None can overpower a person who has the power of tongue, tenacity of purpose and strength of courage.

(22) Chapter 66 - PURITY OF DEEDS- KURAL 6 : -

One shouldn't go to do anything that the righteous consider shameful even when one feels the need for satisfying ones mothers hunger.

(23) Chapter 79 - FRIENDSHIP - KURAL 8 : -

True friendship is like the hand that rushes to hold the loosening dress from the waist of the wearer and save him from nakedness.

(24) Chapter 91 - UXORIOUSNESS - KURAL 5 : -

A hen -pecked husband will always hesitate to do good even to good persons.

(25) Chapter 97- HONOR - KURAL 4 : -

When those who hail from respectable families descend to low levels to do mean things, they will be treated as fallen hairs from the head.

(26) Chapter 99- PERFECT EXCELLENCE- KURAL 4: -

Penance lies in the non-killing of creatures and perfect-excellence lies in not speaking ill of others.

(27) Chapter 100- CULTURE- KURAL 1

The world will always remember with gratitude those who live a life of justice and dharma which will benefit them as well as their fellowmen.

These are only a few life-giving drops from the mighty Thirukkural ocean of ambrosia. Readers are advised to dive deep into this ocean and collect any amount of nectar they want. They are fully assured that there isn't anything in the holy book of Thirukkural which can be treated as irrelevant because thiruvalluvar never touched anything which he could not adorn. Thiruvalluva Nayanar wrote his Thirukkural in Tamil his mother-tongue more than two thousand years ago and today it has been translated into illimitable languages of the world because of its unique characteristics. Thirukkural touches life on all its points. Thiruvalluvar dealt with everything from politics to pottery ; from A to Z in his Thirukkural and that too extensively as well as intensively in an extremely precise manner. As a unique universal teacher he has explained everything forcefully and effectively as well.

Various scholars like Dr. G.U. Pope have written very useful commentaries on Thirukkural. From the time Parimelalakar wrote his own commentary, many scholars have written their commentaries. Some have written objectively and at least a few have written subjectively. There cannot be a greater sin than the sin of distorting the work of the great well meaning Saint who wrote his wonderful immortal book of precepts with a crystal clear mind hungering to see a perfect world.

Thirukkural doesn't belong to any particular religion since it doesn't make mention of any particular God. Therefore all the religions in the world will do well to incorporate the one thousand three hundred and thirty coplets of Thirukkural into their respective systems without forgetting that mere rituals are not so important as these God-inspired precepts of Thirukkural.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Daily readings of Thirukkural no doubt, is good. But living a life in consonance with the rules laid down by Valluvar in his Code of ethics is certainly better. And it is best to erect a fitting memorial for him and his chaste wife Vasuki in the form of a small beautiful temple. Toronto is the most ideal location for such a temple because of its most multicultural nature. Surely unreserved financial help and moral support can be expected from all other non-Tamil speaking communities toward this noble cause if they are made to understand Thirukkural in a clear perspective.

Dr. Sarvapalli Radhakrishnan the most eminent Indian Philosopher never believed in the externalities of any religion. Rituals are a part of such externalities. Tamil people will do well if they don't place too much faith in too many rituals which are a time consuming process and a time consuming process and a money making device. Building a temple for Thiruvalluva Nayanar is certainly a good and thankful act as building a temple for any deity. Now, that we have too many temples in Toronto for Gods and Goddesses, let us build one for Thiruvalluvar who is already deified by our ancestors and worshipfully called "Theiva Pulavar" meaning Divine Poet.


**SP Importers Furniture**

உங்களுக்குத் தேவையான காரியாலய வீட்டுத் தளபாடங்களை நாகரீக வடிவங்களில் திறமையாக செய்து பெற்றுக் கொள்வதற்கும், அத்துடன் Montreal, Ottawa ஆகிய இடங்களுக்கான வான ஒழுங்குகளும் செய்து தரப்படும்

2861 Lawrence Ave. East,
Scarborough, Ont
(Lawrence & Brimley)
Tel: (416) 266-3077

*Sofa, Dining Set, Wall Unit, bedroom Set, Coffee Tables, Compute desks & Office Furniture*

**அத்துடன் யாழ்ப்பாணத்துக்கான நேரடி துரித பணமாற்றுச் சேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOGAN



வாகனம் என்றதும் நினைவுக்கு

வரும் பெயர் ரட்ணம் கணேஷ்




புதிய, பழைய வாகனங்களை
உத்தரவாதத்துடன் குறைந்த வட்டி வீதத்தில்
பெற்று தொடர்ந்தும் நம்பிக்கையான பராமரிப்புச்
சேவைக்கு நாடுங்கள்

## RATNAM GANESH

## Hogan Chev Olds Ltd

5000 Sheppard Av. East

Scarborough, Ont. M1S 4L9

**Phone (416) 291-5054**

**Cellular: (416) 937-5985**

For Great Savings and Personal Satisfaction




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் பெண்மைக்குத் தந்த கருத்துக்கள் அனைத்தும் ஆண்களுக்குக் கூறும் அறிவுரைகளே!


## திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

(முன்னாள் உளவியல் விரிவுரையாளர் அழுத்கம, கோப்பாய் ஆசிரியர் கல்லூரி)


திருக்குறள் சமுதாய மேம்பாட்டுக்காக எழுதப்பட்ட ஒரு பொது நீதிநூல். சகல மக்களாலும் நல்லதொரு முறையான வாழ்வை அமைப்பதற்கானதும் அற நெறி சார்ந்த வாழ்வுக்குமானதுமான உயர் கருத்துக் களைக் கொண்டு வகுக்கப்பட்ட ஒரு நூலாகும். ஆண் பெண் என்னும் பேதமின்றி அனைத்து மக்களுக்கும் உரியதாக மனிதன் எனும் சொல்லைப் பொதுப்பாற் சொல்லாக்கி விளித்துக்கூறும் நூலெனவே குறிப்பால் உணரவேண்டும். சிற்சில இடங்களில் பெண்களை விளித்த குறட்பாக்கள் காணப்பட்டாலும் அவையும் யாவருக்கும் உரியனவாகக் கருதப்படல் வேண்டும். கால கட்டம் நோக்கி அத்தகைய சமூக தர்மமே தற்காலத் துக்குகந்ததாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திருக்குறள் தோன்றிய காலந்தொட்டுக் காலத்துக்குக் காலம் உரை நூல்கள் பல வெளிவந் துள்ளன. அவற்றிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட ஒரு விழிப்புணர்ச்சி பலரையும் உரை எழுத வைத்தது. அவற்றுள் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்ததெனச்சான்றோர் மதித்தனர். ஏனெனில் பலரது உரையும் தாம் வாழுங்காலத்துக் கருத்துக்களையும் உதாரணங்களையும் கொண்டிருக்கப் பரிமேலழகரோ வள்ளுவன் வாழ்ந்த காலத்துக்கு முற்பட்ட பிற்பட்ட சங்கத் தமிழ் நூல்களை ஆராய்ந்து மரபுமுறைகள் தவறாது கவனமாக உரையெழுதி உதாரணங்களையும் தந்துள்ளார். ஆனால் தமிழன் தமிழனாக வாழ்ந்த வள்ளுவர் காலத்துக்கும் வடமொழிச் செல்வாக்கு மிகுந்த பரிமேலழகர் காலமான பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு மிடையே ஆயிரக்கணக் சிவ நீண்ட காலம் ஒன்றிருந்துள்ளது. இதிலிருந்து சிற்சில இடங்களில் அவரால் தப்பிக்க முடியவில்லை. இப்போதும் புதிய கருத்துக்கள் புதிய பார்வைகள் பழைய உரைகாரருக்குக் கண்டனங்கள் என எழுந்தவண்ணமாகவே இருக்கின்றன.

பெண்கள் சம்பந்தமான குறள்கள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று தளங்களிலும் பரவிக் கிடக்கின்றன. இடைக்கிடை வரும் சில குறள்களைத் தவிர்த்து அதிகாரங்களாகப் பார்க்குமிடத்து வாழ்க்கைத் துணை நலம், பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர் முதலிய அதிகாரங்களிலும் காமத்துப் பாலின் பல அதிகாரங்களிலும் பெண்மைக் கருத்துக்கள் உள்ளடங்கி இருக்கின்றன. இவற்றிலும் வாழ்க்கைத் துணைநலம் எனும் அதிகாரமே முக்கிய இடம் பெறுகின்றது.

வாழ்க்கைத்துணை, இல்லறதர்மத்தை இனிதே நிகழ்த்த ஒருவனுக்கு வாய்க்கவேண்டிய துணை, அல்லது இணை, எவ்வாறு அமைந்து நலனை விளைவிக்க வேண்டும் என்பதைக் கூறுவது. எனவே தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொல் காக்க வேண்டியவள் ஒரு மனைவியாவாள் எனும்போது தன்னைக் காப்பது எவ்வாறு? கணவனுக்கு உணவு, மருந்து, பொருள் முதலியவற்றில் உதவி செய்வது எவ்வாறு? தகை சான்ற சொற்கள் எவை? எனும் வினாக்கள் எழுகின்றன. மற்றைய அதிகாரங்கள் பெண்ணுக்கு உரியன அல்லாவாயின் அந்த அறிவு ரைகளை அவள் எங்கே பெறுவது? இல்வாழ்க்கை, புதல்வரைப் பெறுதல், இனியவை கூறல், அடக்க முடைமை பொறையுடைமை, கல்வி கேள்வி போன்ற அதிகாரங்கள் பெண்களுக்கு அல்ல என்றாகிவிட்டால் அவள் ஒரு இல்வாழ்வின் பங்காளராக இருக்கமுடியுமா? ஒரு பயந்தாங்கொள்ளியாக அல்லது அடங்காப் பிடாரியாகவேதான் இருக்கமுடியும்.

சாதி, இனம், மதம், மொழி, பால், வயது வேறுபாடுகள் அற்ற நிலையில் ஒரு சமுதாயத்தின் அத்தனை மக்களுக்கும் சொல்லப்பட்ட கருத்துக்களே திருக்குறள். சமுதாயம் இயங்கும்போது ஆண்கள் தம் உடல்வலுவால் ஏற்படுத்திக்கொண்ட மேலாதிக்கம் அவர்தம்மை முதன்மைப் படுத்தியபோதும் கஞ்சிக்குப் பயறு போட்டது போலக் காலத்துக்குக் காலம் பெண்களும் மேலெழுந்து தமது தகைமைகளை நிலை நாட்டியுள்ளனர். அரச பாரத்தைச் சுமந்துள்ளனர் செங் கோலோச்சிய அரசிகளாக கல்வி, கேள்வி, புலமை களில் உயர்ந்து சிறந்து எந்தவொரு ஆடவனாலும் எட்டமுடியாத ஔவைத்தனம் அடைந்திருந்தனர். போர்க கோலம் பூண்டு பகைமேற்சென்று வெற்றிவாகை சூடியுள ளனர். அனுபவஸ்தனான வள்ளுவனுக்கு இதெல்லாம் தெரியாதா? காலத்தால் அழியாத திருக் குறளைத்தந்த வள்ளுவன் முக்காலத்துக்கும் ஏற்றவாறல் லவா நூல் தந்திருக்கின்றான். மதுரை மீனாட்சியிலிருந்து எத்தனை அரசிகளை, ஔவை, உப்பை, உறுவை, வள்ளி போன்ற புலவர்களைக் கண்டிருக்கின்றான். இவை கருதியே அரசியலறத்தையும் கற்றுணர்ந்தனர் பெண்கள்.

வள்ளுவனாரின் திருக்குறள் கூறும் அறத்து இயல், அரசியல், களவியல், கற்பியல் அனைத்தும் கற்றே அவர்கள் உயர்ந்து நின்றார்கள். அரசியலில் காணப்படும் அரசை ஆள்பவருக்குக் கொடுக்கப்பட்ட அத்தனை அறிவுரைகளும் ஆளப்பிறந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் அவசியம் தேவையானவை. எனவே தொகை நோக்கி அவன் எனும் ஆண்பால் கூற்றை உபயோகித்துள்ளானே தவிர அவையெல்லாம் இரு பாலாருக்கும் உரியவை என்பதனை புத்திபூர்வமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை உள்வாங்கிய தெளிவோடு சாதாரண மனிதரைப் போலவே வள்ளுவனும் பெண்களை அடிமையாகவே கண்டுள்ளான் எனுங்கூற்றை ஆராய் வோம்.

## பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை யுண்டாகப் பெறின்

எனுங் குறளில் பெண்களை ஆண்களின் உடைமை அல்லது சொத்து எனக் கருதுகிறான் வள்ளுவன். அதனால்தான் யாவுள? என அஃறிணையில் கேட்கிறான் என்கிறார்கள். வள்ளுவன்மீது மேலுங் குற்றஞ் சுமத்தக்கூடியதாக அமைந்தது பரிமேலழகர் உரை. ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவை உள, எனக்கூறி உயர்ந்த சொத்து ஆக்கிவிட்டார்.

இல்வாழ்க்கையில் வாழ்க்கைத்துணையாக வந்த வளுக்கு கற்பு எனும் கலங்காத்தன்மை இருக்குமானால் அந்த வீட்டில் இருக்கும் எதுவும் அதாவது கணவன் கூடப் பெரியது ஆகாது என்பதே அதன் பொருள் என்பது திட்டவட்டமான முடிவு ஆகும். இந்தக் கருத்தும் மிகப் பொருத்தமானது இல்லையா? ஏனெனில் கணவன் ஒரு ஆணாக இருப்பதால் அவன் ஒரு பூரணமான மனிதன் என நாம் தப்பாக எண்ணக்கூடாது. அதனால் நாம் உரையாசிரியர்களால் திசைதிருப்பப்படத் தேவையு மில்லை. இதனை ஒட்டி

**''வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''**

எனும் குறளை நோக்கின் வாழ்வாங்கு வாழ்பவன் வைக்கப்படும் என அஃறிணை முடிவே கூறப்பட்டுள்ளமை முந்தைய குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதே. வள்ளுவன் இங்கே தான் ஒரு பூரண மனிதனைக் காட்டுகின்றான். அறநெறிகளுக்கமைந்து வாழவேண்டிய முறைப்படி வாழ்பவனே தெய்வங்களின் தரத்தில் வைத்து எண்ணப்படத் தக்கவனாவான் என்பது பொருள். அவனை மனைவி மாத்திரமல்ல யாரும் வணங்கலாமல்லவா?. அத்துடன் பொதுப்பால் என வைத்துக்கொண்டால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் எனப் பார்க்கும் போது ஒரு பெண்ணோ அல்லது ஆணோ வாழ்வாங்கு வாழ்ந்தால் அவர் தெய்வங்களுள் ஒன்றாக வைத்தெண்ணப்படுவார். இதில் இன்னுமொரு விடயமும் அவதானிக்கலாம். வானிலே உறைகின்ற தெய்வங்கள் அனைத்தும் ஆண்தெய்வங்களல்லா். பெண்தெய்வங்களும் உளராயின் வாழ்வாங்கு வாழ்பவர் தனியே ஆணாக இருக்கமுடியாது, பெண்ணாகவும் இருக்கலாம்.

கற்பு என்பது என்ன? கற்பிக்கப்பட்டவை. ஔவையார் கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்றார். சொல் என்பது கணவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு என விளக்கம் தரப்படுகிறது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு என்ன? உனக்கு உண்மையுடையவளாய் நடப்பேன் என்பது. அதாவது அவன் கல்லெனினும் புல்லெனினும் ஒன்றும் அறியாப் பதராயினும் அவனையன்றி வேறொருவனைத் திரும்பிப பாரேன் என்பது. அப்படியாயின் அப்பெண் பிறரைப் பொறுத்தவரை அதாவது தாய், தந்தை, சுற்றம், விருந்தினர் போன்றோருக்கு பொய் வஞ்சகம் சூது வாக்குவாதம் முதலிய இழிந்த செயல்களைச் செய்து கொண்டு வாழலாமா?

கற்பு என்பது என்ன என இனிப்பார்ப்போம். ஆன்றோரா லும், அளிஞர்களாலும் எவையெவை போற்றத்தக்க விடயங்கள் எனக் கணிக்கப்படுவனவோ அவையவை மக்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. அந்தச் சொற்கள் நீர்மேல் எழுத்துப் போல அழிந்து போகாமல் அல்லது வழுக்கிப் போகாமல் சிலையாக நின்று அனுஷ்ட் டிக்கப்பட வேண்டியவை. எனவே அத்தகைய அறிவுறுத தல் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானவை யாகக் கருதப்படவேண்டும்.

வள்ளுவன் உடல் ரீதியான கற்பை மாத்திரம் கருதியிருப்பானானால், அவன் காலத்துப் பெண்களைப் பற்றி எமக்கு என்ன எண்ணத் தோன்றுகிறது? கற்காலத் தில்கூட அதாவது சுதந்திரம் பலருடனான பழக்கம் இருக்கக்கூடிய இக்காலத்தில் நாம் அறிந்தவகையில் ஒருவனுக்கு ஒருத்திதான். கன்னிக்காலில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ ஒருசிலர் தாம் பிரபலமாய் வந்துள்ளார்கள் அதனால்தாம் செய்த தப்புக்களையெல்லாம் சொல்வதால் தமது மதிப்பு கெட்டுவிடாது என்ற தலைவீக்கத்தில் பாவமன்னிப்பு மாதிரித் தமது இழிந்த செயல்களை விண்டுவிண்டு வைக்கிறார்கள். இத்தனை திறமான எழுத்தாளனே இப்படி நடந்திருப்பானேயானால் முச்சமுதாயமுமே இப்படித்தான் நடந்திருக்கும் என மக்கள் தப்புக்கணக்குப் போடுகிறார்கள். ஆனால் உண்மையென்னவோ பெண்க ளில் பெரும்பான்மையோர் விவாகம் வரை சுத்தமானவர் களாக இருந்திருக்கிறார்கள். இது உள்ளன்புடன் நேசித்த பலரது இரகசியங்களைப் பகிர்ந்து கொண்டபோதும் அனுபவரீதியாகவும் கண்ட உண்மை.

அடுத்ததாக உடல்ரீதியான கற்பைத்தான் வள்ளுவன் குறிப்பிட்டானேயானால் அதில் இன்னோரு ஆடவனும் சம்பந்தப்பட்டவனாயிருப்பான். ஆகவே எல்லா முணர்ந்த வள்ளுவன் அந்த ஆணுக்கும் ஏதாவது சொல்லியே இருப்பான். அதைத்தனியே ''பிறனில் விழையாமை'' யில் மாத்திரம் சொன்னாற் போதுமா? கண்ட கண்ட கன்னிப்பெண்களையெல்லாம் ஆண்டனு பவிக்கலாமா?. இவையெல்லாம் சிந்தனைக்குரிய கேள்விகள். பெண்ணினால் மட்டும் உடற் கற்பைக்காக்க முடியாது. அதற்குத் துணை செய்யக்கூடிய ஆணுக்கும் தான் இக்குறள் மறைமுகமாக அறிவுரை கூறுகின்றது. கூடாநட்பு எனும் அதிகாரத்தில் 822ம் குறளில் ''மனம் ஒன்றாத புறம் ஒன்றிய நட்பு மகளிர் மனம்போல் அடிக்கடி வேறுபடும்'' என்றார். இதில் மகளிர் என்பது யாரை? வேறுபடும் என்பது மகளிரின் சின்னச்சின்ன ஆசைகளையா? அல்லது வாசுகியை மனைவியாக அடைந்த வள்ளுவர் பெரியவிடயங்களில் பெண்கள் தடுமாற்றம் கொள்வார்கள் என நினைப்பாரா? சில வேளைகளில் சீதை பொன்மானுக்கு ஆசைப்பட்டது மாதிரி சிறு சிறு விடயங்களில் தம்மனதை மாற்றிக் கொள்கிற பெண்கள் எங்கும் உள்ளார்கள். போவோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாது விடுவோமா? இதனை உடுப்போமா? அதனை உடுப்போமா போன்றவை. அவற்றால் ஏற்படக்கூடிய பலாபலன்களை எடைபோட்டு வரும் சிறு சம்பவங்கள். இவற்றை வள்ளுவர் குறிப்பிட்டாரா அல்லது ஆண்களைக் கண்டு தடுமாறும் பெண்கள் என அவர்களின் கற்பினைச் சந்தேகித்தாரா? அல்லது மகளிர் எனும் பதத்தால் வரைவின் மகளிர் எனப்படும் பரத்தையரைச் சுட்டினாரா?

செங்கோன்மை பற்றி விளக்க வந்த வள்ளுவன் பெண்களைப்பற்றி எதுவும் கூறாா இடத்தும் பரிமேலழகர் ''மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவலன நித்தம் காவலால் ஆகலின்'' என எடுத்தாள்கின்றார் (மணிமேகலை). இவ்வுதாரணத்தில் உள்ளத்தின் கற்புத தான் சொல்லப்பட்டிருக்கின்றது. உடலின் கற்பு வன்முறை யால் அனுபவிக்கப்படும்போது பெண்ணால் ஒன்றும் செய்யமுடியாதல்லவா? சிலசமயம் அவரது காலத்தில் பாலியல் வல்லுறவு இருந்ததில்லையோ அல்லது அது ஏற்கப்பட்டதோ அறியோம்.

''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை''

இக்குறளிலும்கூட ஒரு கணவன் தன் வாழ்க்கைத் துணையை எப்படி மதிக்க வேண்டும் என்பதையே வள்ளுவன் கூறுகின்றான். நீ சந்தேகப்பிராணியாகி அவளை வீட்டுள் வைத்துப் பூட்டிப் பாதுகாத்தாலுங்கூட அவள் உன் சந்தேகத்தால் பாதிக்கப்படுவதோடு உனது அன்பிலுங்கூடச் சந்தேகம் வந்து மனதளவில் உனைவிட்டு நெடுந்தூரம் செல்கிறாள். அவள் உன்னை விட்டு நீங்குவதெனில் பூட்டும் திறப்பும் தடை செய்யுங் காரியமல்ல. ஆகவே உன் அன்பை முழுமையாகக் கொடு. அவள்மீது அசையாநம்பிக்கைவை. அவளது ஆராதனைக்கு உரியவனாகு. அப்போது அவளது விசுவாசமான அன்பே அவள் உள்ளத்தைப் பாதுகாக்கும் என நாம் விரித்து உணரலாம்.

அறன் எனப்பட்ட இல்வாழ்க்கையில் வாழ் வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் வைக்கக்கூடிய நிலைக்கு நீ உயரும்போது அவளும் உன்னையே தெய்வமென மதிப்பாள். ஆகவே ஆடவனே நீயும் பூஜிக்கப்படத்தக்க நிலைக்கு உயர்ந்து செல்வாயாக! அதனால் தகுதிவாய்ந்த மனைவியைப் பெறமுடியும். சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழவும் முடியும்.

அடுத்ததாக நாம் பெண்வழிச் சேறல் என்னும் அதிகாரத்தை எடுத்துக்கொள்வோம். பெண் எனும் போது இங்கே மனைவியைத்தான் வள்ளுவர் குறிப்பிடு கிறார் எனக் காண்கின்றோம். ஆனால் கலவியின்பம் துய்க்கும் எப்பெண்ணிடமும் கட்டுண்டுபோகும் கயமையை இலக்கியங்கள் சரித்திரங்கள் கூறும். பெண்ணுடைய புத்தியைக் கேட்டு நடவாதே எனப் பொருள்படுகிறதாகச் சொல்லலாமா?

காமம் கண்ணை மயக்கும் இயல்புடையது. காமம் மீதூர்ந்த ஆடவர் அதை அனுபவிக்கும் பெண்ணிடம் கட்டுண்டு கிடப்பர். அவளைத் திருப்திப்படுத துவதே அவரது ஒரே நோக்காக இருக்கும். அத்தருணங் களில் அவள் வாக்கே வேதவாக்காகவும் படும். பெண் கல்வி கேள்விகளில் வல்லவளாயிருந்தால் சரியான தடத்தில் வழிநடத்திச் செல்வாள். அல்லது தனது பிடிவாதங்களை நிறைவேற்றும் கருவியாகப் பயன் படுத்துவாள். அதீத காமம் அறிவைக் கெடுக்கும் அல்லவா? ஊடலைத்தீர்க்க ஓடிச்சென்ற பாண்டியனால் மதுரை அழிந்தது. இன்னும் உலக அறிவு, அனுபவ, அறிவு கல்வியறிவு குறைந்த சில பெண்களிடம் முறை யான புத்திமதிகளைப் பெறமுடியுமா? அதனால் அழிவு அல்லவா ஏற்படும்.

முடிவெடுத்தலில் அதாவது சில விடயங்களைத் தீர்மானிப்பதில் தன்னிடம் சக்திபோதாது என நினைப் பவன் இரண்டாம் அபிப்பிராயத்தை மனைவியிடம் இருந்து எதிர்பார்க்கிறான். இது நாளடைவில் அவளுக் குத் தன்நம்பிக்கையை ஊட்டுவதோடு ஆணவத்தையும் உண்டாக்குகின்றது. அதனால் அவள் தன்சொல்லையே கணவன் கேட்டு ஒழுகவேண்டும் என எதிர்பார்க்கிறாள். ஆனால் ''காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்'' என்றார் ஔவைப்பிராட்டி. ஒத்தநலனும் ஒத்தகுணமும் ஒத்த கல்வியும் அறிவுமுள்ள இல்லறங்கள் கருத்தில் ஒத்து அமைதியான வாழ்வை மேற்கொள்கின்றன. ஆனால் தன்னிலும் மேலான பெண்ணைக் கொள்பவனும் தன்னிலும் கீழான பெண்ணைக் கொள்பவனும் இத்தகைய குற்றத்திற்கு ஆளாகியே தீருகிறான். அறிவிற் குறைந்த பெண்ணைத் திருப்திப்படுத்துவதற்கு அவள்பின்னே வழிமொழிந்து செல்ல வேண்டும். எனவே அதீத காமமும் கூடாது அரைகுறை அறிவுங் கூடாது என்பதையே வள்ளுவர் மொழிகிறார்.

வள்ளுவன் பொதுமறை காலத்தால் அழியாதது. அதனைப் பெண்களாகிய நாம் உரைநடையை வைத்தோ ஒருசில குறள்களை வைத்தோ எடுத்தெறிய முடியாது.

''ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு''

எனும் குறளில் பெருமை என்பது செயற்கரிய செய்தலால் தருக்கு எனும் செருக்கு (தற்பெருமை) இன்மையால் பிறர் குற்றங்கூறாமையால் இன்னும் பல நற்குண நற்செய்கைகளால் வருவது. இந்தப் பெருமைக்குணம் உடைய ஒருவன் நிறையின் வழுவாது ஒழுகுவானாயின் அவன் ஒருமை மகளிரே போலக் கணிக்கப்படுவான் என்கிறார். சபல சித்தமில்லாத ஒரே மனத்தையுடைய நிறைகாத்த கற்புடைய பெண்ணுக்குச் சமானமாவான் எனும்போது ஆணையும் பெண்ணையும் சமமாக நோக்குகின்றதன்மையை நாம் காண்கின்றோம்.

குறளைத் தந்தான் வள்ளுவன். காலத்துக்கேற்ற விளக்கத்தை வடிப்பது அறிஞர்களின் கடன். இக்கட்டுரை மூலம் வள்ளுவர் கண்ட ஆண் பெண் சமத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

*நன்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.K. Gold House

ஆபரணங்கள் அணிவகுக்கும் அழகு தேசம்



- 22K Gold Jewellery
- Silver Jewellery
- Diamonds & Pearls
- Lucky Stones
- Citizen & Seiko Watches
- Ear Piercing
- All kinds of Repairs

**A.K. Gold House**

1602 Gerrard St. East, Toronto, Ont. M4L 4A8

**Tel: (416) 466-0830**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவையூர்மகனின்தரமான ஸ்தாபனம

# ஞானம்ஸ்
# ஸ்ரூடியோ

உங்களின் தேவை தரமாகவும் இன்றைய தொழில் நுட்பம்
தெரிந்தவர்களினாலும்
நிறைவேற்றப்படுவதற்கு எம்மை நாடுங்கள்

எமது மற்றையசேவைகள்

Studio Portraits
(Single, Family & Children)
(Black & White or Colour)
Passport,
Citizenship Photographs
Albums, Frames, Filmrolls
Copy Works
(Black & White or colour)





INTRODUCING
ONE HOUR PHOTO LAB
Using Latest Computer Technology for
Colour Separation & Density Correction
we offer
(3"X5") to (8"X12") Prints on location

Gnanams Studios

2425 Eglinton Ave. EAST Unit 3
Scarborough, Ont.
(Near Shankar &Co)
Tel:(416) 750 8118



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறட் பாடபேதங்கள்

நாவற்குழியூர் நடராசா

தமிழ் மறையென நாம் போற்றிப் புகழும் திருக்குறள் நூல் தோன்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. இதில் இறுதி இருநூறு ஆண்டுகளை விட எனைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் வரை அது ஏட்டுப் பிரதிகளாகவே இருந் திருக்கிறது. அத்தனை காலம் ஏடுகளிலே பிரதி செய்யப்பட்டுப் பரவிவந்த நூலில் எத்தனை பிரதி பேதங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால், திருக்குறட் பதிப்பு களிலே குறட்பாக்களின் பாடபேதங்களைக் காட்டி வெளிவந்துள்ளவற்றைக் காணமுடியவில்லை. ஏனைய பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தோர் அவற்றின் செய்யுட் பிரதிபேதங்களையெல்லாம் அடிக்குறிப்பாகக் காட்டியிருக்கையில், எமக்குக் கிடைத்துள்ள திருக்குறள் அச்சுப் பதிப்புகளில் மட்டும் குறட்பா பேறுபாடுகளை எடுத்துக் காட்டிப் பதிக்க முடியாமற் போனது ஏன்?

திருக்குறள் ஏட்டுப் பிரதிகள் அனைத்தும் 1800 ஆண்டு காலமாக வழுக்கள், மாற்றங்கள், பேதங்க ளின்றியே பிரதி செய்யப்பட்டு வந்திருக்குமென்று எண்ணிவிட முடியாது. எனவே, எமக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் அச்சேறிய திருக்குறளுக்கும், திருவள்ளுவர் செய்த குறட்பாக்களும் சிற்சில அடிகள் அல்லது சொற்களிலாவது வேறுபாடுகள் இருக்கலாம். ஏடுகளைப் பிரதி செய்தோரும், உரையெழுதியோரும், தத்தம் கருத்துக்களுக்கு ஒத்த மாற்றங்களைச் செய்திருத்தலுங் கூடும். அதனாற்றான், பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து பாட பேதங்களைக் காட்டிச் செய்யப்படும் பதிப்பு அவசியமாகிறது. அத்தகைய ஒரு பதிப்பே உண்மையான திருவள்ளுவர் உள்ளத்தைக் காட்டி நிற்கும். ஏட்டுக்கேடு, பிரதிக்குப் பிரதி காணத்தக்க வேறுபாடுகளைக் குறிக்காத பதிப்புக்கள் ஆய்வுக்கு உகந்தனவல்ல.

திருக்குறள் நூல் மூலத்தை முதலில் அம்பலவாணக் கவிராயர் 1811ம் ஆண்டு பதிப்பித்தார். அது அச்சிலே வரத் தொடங்கி நூற்றெண்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆறுமுகநாவலர் 1861ம் ஆண்டு பரிமேலழகர் உரையுடன் முதலில் வெளியிட்ட பதிப்பினைத் தொடர்ந்து எத்தனையோ அச்சுப்பதிப்புகள் வெளிவந்துவிட்டன. இப்போது எல்லோர் கையிலும் இருப்பன அச்சுப் பிரதிகளே. திருக்குறள் ஏட்டுப் பிரதிகளை நூதனசாலைகளிலும், பழஞ்சுவடிக் கூடங்களிலுமே இக்காலத்தில் காணலாம். அதனால், வருங்காலத்திலே பாடபேதங்களை எடுத்துக் காட்டும் பதிப்பினை மேற்கொள்வது ஒரு பெரும் சாதனையாகவேயிருக்கும். தாம் தக்கனவெனக் கண்ட பாடங்களை அம்பலவாணக் கவிராயரும், நாவலரும் முதலில் பதிப்பித்தனர். அவற்றைத் தொடர்ந்து திருக்குறளைப் பதிப்பித்தோர், பிற பிரதிகளோடு ஒப்புநோக்காது, நாவலர் பதிப்பினையே பின்பற்றினர் போலும்.

பழைய திருக்குறள் ஏடுகளிலே பிரதி பேதங்கள் இல்லாமலில்லை என்பதற்கான உதாரணம் ஒன்றினை இங்கு எடுத்துக் காட்டுதல் பொருத்தமாயிருக்கும். ஒல்லாந்தர் எம்மை ஆண்ட காலத்திலே தமிழகத் திலிருந்து எடுத்துச் சென்ற ஏட்டுப் பிரதிகளுள்ளே திருக்குறட் பிரதிகளும் இடம்பெற்றன. அவற்றுள் ஒன்று ஒல்லாந்திலுள்ள லெய்டன் பல்கலைக்கழக நூல்நிலையத்தில் இடம்பெற்றிருக்கிறது. பனை யோலைச் சட்டங்களால் அமைந்துள்ள அவ்வெட்டிலே பக்கத்துக்கொன்றாகத் திருக்குறட்பாக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவ் வேட்டினைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கையிற் பண்புடைமை என்ற அதிகாரத்திலே ஒரு குறள் சற்று வித்தியாசமாக புலப்பட்டது. அதனை அச்சுப் பிரதிகளிலுள்ள குறளோடு ஒத்துப் பார்த்தபோது, அவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடு துலக்கமாகத் தெரிந்தது. நாவலர் பதிப்பு முதல் எனைய பதிப்புகளிலெல்லாம் காணப்படும்.

> பண்புடையார்ப்பட்டுண் டுலக மதுவின்றேன்
> மண்புக்கு மாய்வது மன்

என்ற குறட்பா மேற்குறித்த ஏட்டுப் பிரதியிலே

> பண்புடையார்ப் பட்டுலக மதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மெனல்

என்றிருக்கக் காணப்பட்டது. இத்தகைய பாட பேதங்கள் அச்சான பதிப்புகளிலே குறிப்பிட்டுக் காட்டப்பட வில்லை. செய்யுள் இலக்கண

(தொடர்ச்சி .... ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( .... ம் பக்கத் தொடர்ச்சி)

### திருக்குறட் பாட......

அமைப்பைப் பொறுத்த வரையில் இரு குறட பாக்களும் ஏற்புடையனவாகவே அமைந்திருக் கின்றன. பொருளைப் பொறுத்த அளவில் ஏட்டு சுவடியிற் காணப்பட்ட புதிய குறட்பாவடிவம் புதிய கருத்துக்கு இடமளித்து நிற்கிறது. அச்சுப் பிரதிகளிற் காணப்படும் முன்னைய குறட்பாவுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரையாவது,

பண்புடையார் கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றும் உண்டாய்வாரா நின்றது. அண்டுப் பதல் இல்லையாயின் அது மண்ணின் கண் புக்கு மாய்ந்து போவதாம் என்பதாம். அது என்பது இங்கு உலகியல் என்பதைச் சுட்டி நிற்கிறது. எனவே, பண்புடைமை இல்லையாயின் உலகியல் மண்ணிற் புக்கு மாய்ந்து போகும் என்பது அதன் பொருளாகிறது. மண்ணிலே உள்ள உலகியல் மண்ணிற் புக்கு மாய்ந்து போகும் என்பது அதன் பொருளாகிறது. மண்ணிலே உள்ள உலகியல் மண்ணிற்புக்கு மாய்ந்து போகும் என்பது எவ்வளவு பொருத்தமானதாகக் கொள்ளத்தக்க உரை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

புதிய வடிவிலுள்ள குறட்பா மாற்றிரு பொருளுக்கிடமளிக்கிறது. பண்புடையார் இருப்பத னாலேதான் இவ்வுலகம் பண்புடையதாக இயங்குகிறது. பண்புடமை இல்லாவிட்டால் உலகியல் பண்பின் மையின் கண்ணெ புகுந்து சிதைந்து விடும் என்பது ஒன்று, மற்றது பண்புடையாரைக் கொண்டே உலகம் தலைப்படுகிறது. அத்தன்மை இல்லையாயின், அத்தகைய பண்பற்ற உலகினை ஆளும் அரசன் எங்காவது சென்ற மாய்ந்து விடுவன் என்று சபதமிட்டு மாய்வது மேல் என்பது இக்கருத்திலே, பண்புடையாரை உருவாக்குவது அரசன் பொறுப்பு என்ற பொருள் பொதிந்திருத்தல் காணலாம். இப்புதுவடிவக் குறட்பாவுக்கு இயைய ஏற்ற பொருள் என்பதனை சாதிப்பதற்காக இக் கருத்துக்கள் இங்கு கூறப்பட வில்லை. வேறு கருத்தினையும் காணுதல் கூடும். ஆனால், இவ்வாறு வேறு கருத்துக்கு இடமளிக்கத் தக்க வகையிலமைந்த குறட்பா வடிவமும் உண்டு என்பதனை வலியுறுத்தவே இதனை இங்கு எடுத்துக் காட்டினோம்.

உரையாசிரியர்கள் உரை எழுதிய குறட்பாப் பிரதிகளைப் பார்த்துப் பாட பேதங்களைக் கண்டு கொள்ளுதல் இயலாத காரியமாகும். ஏனெனில், அவர்கள் தாம் கொண்ட கொள்கைக்கேற்ற வகையிலே குறட்பாக்களின் சீர்தளைகளை வகுத்துத் திரித்து வைத்திருப்பார்கள். உதாரணமாக, மேற்காட்டிய குறட்பாவிலே பண்புடையார் என்பதை ஒரு சீராக, அதாவது காய்ச்சீராகக் கொண்டாற்றான் வெண்சீர் வெண்டளை அமையும் என்று கருதுவோர் அடுத்த சீருக்கு உண்டு. என்ற சொல்லைச் சேர்த்துப் பட்டுண்(டு) என்று நேரசை மாச்சீரை ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இயற்சீர் வெண்டளையும் குறட்பாவுக்கமையும் என்ற கருத்துடையோர், பண்புடை என்பதை ஒரு சீராகவும், யார்ப்பட் என்பதை இரண்டாவது சீராகவும் அமைத்துக் கொண்டு, உண்டு என்ற ஒரு சொல்லை வருவிக்க வேண்டிய அவசியமில்லை என்று காண்பர். பட்டு என்ற பதத்திலே உண்டு என்ற பொருளும் செறிந்திருப்பதனால் உண்டு என்று மேலும் எடுத்தோத வேண்டிய தேவையுமல்லை. வெண்சீர் வெண்டளையே குறள் வெண்பாவுக்குச் சிறப்புடையது என்றால், அதே அதிகாரத்தில் வரும் நாலாவது குறட்பாவின் முதலடியாக நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் என்பதனை எடுத்துக் காட்டி அதிலே காணப்படும் தளைகள் ஒவ்வொன்றும் இயற்சீர் வெண்டளைகளாய் அமைந்திருப்பதால் அது வள்ளுவர் கருத்தன்று என மறுக்கலாம். எனவே குறட்பாவின் வேறுபாடபேதங்கள் பொருளற்றனவென ஒதுக்கி விடுதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் மாநாடு சிறப்புற எமது மனமாரந்த வாழ்த்துக்கள்

# GASA RESTAURANT

## Take out & Catering

தாயகத்தை நினைவிற்கும், அறுசுவை உணவுகளை உங்கள் சகல வைபவங்களுக்கும் அத்துடன் வேண்டிய நேரத்தில் சுடச்சுடப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

**Tel: (416) 321-1219**

**2950 Kennedy Road, Unit #3**
**Scarborough, Ont. M1V 1T1**

# SINGHAPORE JEWELLERS

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட் புதிய தங்க நகைகளை உடனுக்குடன் காலத்தின் மாற்றத்திற்கேற்ப பெற்றுக் கொள்ள நாடவேண்டிய நகைமாடம் சிங்கப்பூர் நகைமாடம்

✳ நம்பிக்கை ✳ நாணயம் ✳ உத்தரவாதம்
✳ நியாயமான விலை ✳ மாற்றுக் குன்றாத சிங்கப்பூர் தங்கம்

அனைத்திற்கும் நாடுங்கள் சிங்கப்பூர் நகைமாடம்

அதி துரித பணமாற்றுச் சேவை

*கொழும்பு *யாழ்ப்பாணம் *வவுனியா *திருச்சி *சென்னை
*சுவிஸ் *ஜேர்மனி *இங்கிலாந்து *பிரான்ஸ் *சிங்கப்பூர்

2387 Eglinton Ave. E., (Kennedy & Eglinton)

**Tel: (416) 752 (GOLD) 4653**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரின் கடவுட் கொள்கையைப் பிரபஞ்சத்தோடு நோக்கலாம்.!

*வேல் வேலுப்பிள்ளை*

பழைய தமிழகத்தில், ஆண்டவனின் நம்பிக்கையும், இவ் ஆண்டவனைக் கடவுள் என்னும் பதத்தால் வழங்கி வரும் தமிழ் சமுதாயத்தினரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் திருவள் ளுவர். இந்துமத தெய்வங்கள் வழிபடுகின்ற பெற்றோரின் பிள்ளை. இவர் இந்துவாகப் பிறந்தவர். திருவள்ளுவர் இந்துவாக கடவுள் என்னும் பதத்திற்கு இன்று உள்ள எல்லாச் சமயங்களும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த வண்ணம், ஒரு பக்கம் சாராமல், அன்றே பொதுவாக எல்லா மதத்திற்கும் ஏற்கத்தக்கதாக தமது குறளை இயற்றியுள்ளார் எனக் கூறக் கூடும். ஏறத்தாழ 2029 வருடங்களுக்கு முன் அவரின் தீர்க்க தரிசனத்தை எண்ணிப்பார்க்கையில் மிகவும் வியப்பாக உள்ளது.

இப்பிரபஞ்சத்தில் கணக்கற்ற அண்டங்கள் உள்ளன. இவ்வண்டங்களிலும் எண்ண முடியாத அளவு சூரியன்கள் உள்ளன. ஒவ்வொரு சூரியனையும் பல கோள்கள் சுற்றிக்கொண்டு இருக்கின்றன. ஒளி செல்லும் வேகத்தில், அதாவது ஒரு செக்கனுக்கு 299,000 கிலோமீற்றர் வேகத்தில் சென்றுகொண்டிருந் தாலும் பல கோடி ஒளி வருடங்கள், சென்றாலும் எல்லையை தாண்டமுடியாத அளவுக்கு இப்பிரபஞ் சம் நீண்டுகொண்டே செல்கின்றது என்று தற்பொ ழுது விஞ்ஞானிகள் திகைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பிரபஞ்சத்தை இயக்குகின்ற சக்தியை நாம் கடவுள், தெய்வம், ஆண்டவன், இயற்கை, நியதி, விதி என்று ஆண், பெண்பால், சொல்லா முடியாத சொற்களைப் பாவிக்கின்றோம். வள்ளுவன் இப்படித்தான் பாவித்துள்ளான். முதல் முதலில் இப்பதங்களைப் பாவித்தவர் வள்ளுவர் ஆவர். இவ் அண்ட வெளியை ஆராய்ந்த் எவருக்கும் ஒரு பயம் வருவது உண்டு. இப்பயத்தால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் ஒரு சக்தி உண்டு என்று சொல்வதற்கு விருப்பப்படாத போதிலும், ஒப்புக்கொள்வதை எதிர்க்கவில்லை.

வர்க்க விருத்தியில் உண்டான மனித குரங்குகளில் இருந்து கூர்ப்பு எய்தி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், வாழ்க்கைத் திறன், ஆராய்ச்சியில் முன்னேறிக் கொண்டிருக்கும் தற்பொழுது வாழ்கின்ற மானிடன், அளப்பரிய இயற்கையின் சக்தியை பல்வேறு வகைகளாக வணங்கிக் கொண்டிருக்கின்றான். இவற்றிக்கும் தம் தேவைக்கும், அறிவுக்கும், நாட்டு வழப்பத்திற்கும் ஏற்றபடி உருவங்களும் அமைத்து கோயில் கட்டி பெயர் சூட்டி வாழ்த்தி கொண்டாடி வணங்குகின்றான்.

எக்கருமத்தைத் தொடங்குமுன் அக்கருமம் சிறந்து சித்தியடைய வேண்டுமென்று எல்லோரும் எண்ணு வது இயல்பு. இதை நாம எண்ணாமலே, சொல்லா மலே சித்தியாகிய சித்தியை எண்ணுகின்றோம். இவை ஆரம்பக்கடவுள் வணக்கமாக நடைமுறையில் வந்திருக்கின்றது. இதைத்தான் வள்ளுவர், தமது அரும்பெரிய குறள்களை எழுதும் முன்பும் கட வுளை, ஆண்டவனை, நினைத்து பத்துக்குறள்களை யும் அவருக்கு அர்ப்பணித்துள்ளார். ஆகையால்தான் இக்குறள் ஆண்டுகள் பல சென்றாலும், அளிவற்ற நிலையை எய்தியதற்கு காரணமாகியுள்ளது.

" அகர முதல " தொடக்கம் "பிறவிப் பெருங்கடல்" வரையும் உள்ள இப்பத்துக்குறளும் கடவுளை நினைத்து, துதி பாடி வணக்கம் செய்து அதனால் வரும் நன்மைகளையும் எமக்கு எடுத்துத்தந்துள்ளன. ஆதியும், அந்தமும் இல்லானின் தாழைப் பிடித்தால் தான், இந்த ஆதியும் அந்தமும் இல்லாத பிரபஞ் சத்தில் சிறப்புடன் வாழ்ந்து பின் தெய்வத்துள் உறையலாம் என்பதைக் காட்டுகின்றது. நினைக்க முடியாத அளவு உள்ளத்திற்கு அடங்காத, அப்பால் பட்டுள்ள, அதாவது, சாதாரண மனிதருக்கும், இச்சா தரண மனிதனை விட அறிவு கூர்மையுள்ள விஞ்ஞானிகளுக்கும், இவ்விஞ்ஞானிகளை விட மேலறிவுள்ள பக்குவ நிலை எய்திய ஞானிகளுக்கும் அப்பால் பட்டுள்ள உள்ளங்களைக் கடந்த சக்தியை " கட + உள்" - உள்ளத்திற்குப்பால் கடந்த சொல்லாக கடவுள்" என்று வள்ளுவர் வைத்திருக்கின்றார்.

இக்கடவுளையும், சாதாரண மனிதனால் அடைய முடியும் என்பதனை 5ம் அதிகாரத்தில் இல்வாழ்க் கையில் தந்துள்ளார். `வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

***He is a man of divine worth who lives in ideal home on earth.***

வாணத்திலும், ஏன் அண்டங்களிலும் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்திற்கு மனிதன் ஒத்தவனாக இருக்கின்றான். எப்படிப்பட்டவன் இப்பூமியில் வாழவேண்டிய அறநெறியில் நின்று, நிலைத்து, கடைப்பிடித்து, வாழ்கின்றவன், அறத்தைப்பின்பற்றி வாழ்கின்றவன், தெய்வமாகின்றான்.

இப்பிரபஞ்சத்தில் உள்ள சக்தியை வெளியிடும் பொழுது எவ்வளவு சக்தி எங்களின் மூளைக்கே எட்டாமல், அப்பால் இருக்கின்றதை அறிய வியப்பாக இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'A gamma ray burst 12 billion light years distant, released in one second almost as much energy as all the stars of the universe'* ***By : Doctor Shrinivas Kulkarni (professor of astronomy, California, Institute of Technology)***

12 கோடி ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ள இடத்தில் ஒரு பிரமாண்டமான அதிர் வெடிச்சத்தம் நடந்திருக்கின்றது. இவ்வதிர் வெடியில் ஒரு விநாடிக்கு வெளியிடப்பட்ட சக்தி, இவ்வண்டங்களில் உள்ள நட்சத்திரங்கள் எல்லாவற்றின் தொகுப் புக்குச் சக்தியை விட மேலானது என்று வியக்குகின் றார்கள். தற்பொழுது உள்ள விஞ்ஞானிகள். இந் நிகழ்ச்சி நடந்தது கிட்டத்தட்ட 1997ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதி என்கின்றார்கள்

***(about 10 billion trillion stars in the universe, is so far known to the scientist. A light year is about 9.7 trillion kilometers in distance)***

இதனால்தான் இறைவனை வள்ளுவர்.

தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால், மனக்கவலை மாற றல் அரிது.

இறைவனுக்கு உவமை இல்லை என்று ள்ளார். இவ்வகையான தகமைகொண்ட தெய்வத்தையும் தொழாது, தனது கணவனைத் தொழுதவள் மழைபெய்யென்றால் பருவகாலம் மாறி முகில் தோன்றி, மழை பெய்யுமாம் என்றார்.

தெய்வகுணமுள்ள குடும்பம், அதாவது திருவள்ளு வரின் பார்வையில் ஒரு கணவனும், ஒரு மணைவியும், தெய்வத்திற்கு ஒத்தவர்கள் என்று நம்புகின்றார். இருவரும், (கணவன், மணைவி) - பொய் களவு, கொலை, சூது, வாது, வஞ்சகம், பொறாமை, கோழ், அழித்தல், அடக்கல் இந்தப்பத்தும் இல்லாமல் உள்ளத்தில் தூய்மை, சொல்லிற் தூய்மை, செயலிற் தூய்மை கொண்டு வாழ்கின்ற குடும்பத்தில் உள்ள கணவனை மணைவி வணங்குகின்றாள, மணைவியைக் கணவன் வாழ்த்துகின்றான். பிள்ளைகள் பெற் றோரை வணங்குகின்றார்கள்.

இப்படி வாழ்கின்ற குடும்பம் எல்லா உயிர்களுக்கும் உதவியும் செய்து, ஊண்டு கொடுத்துதம் வாழ்கின்றார்கள். இத்தகைய வாழ்க்கையை வளமாக்கி வாழ்கின்ற குடும்பத் தலைவி, மழை பெய்யென்றால் பெய்யும் என்றும் உள்ளார்.

தெய்வம் தொழாஅள் கொழுநன்தொழு தெழுவாள், பெய்எனப் பெய்யும் மழை.

இப்படியான குடும்பம் தெய்வத்தகமை யுள்ள குடும்பம் என்பார்கள். பிள்ளைகளும் தெய்வ குணம் உள்ளவர்களாக அமைவார்கள். சமுதாயம் நல்ல நிலையை அடைய இத்தெய்வக் குடும்பம் அயராது உழைக்கும்.

தெய்வத்தை மனிதனுக்குள் வைத்து, மனிதனைத் தெய்வத்திற்குள் வைத்தார் திருவள்ளுவர்.

***There are more than 100,000 million galaxies in the universe. Our planet earth is in a galaxy called Milky way. To cross our milky way at the speed of sound, it will take more than 100,000 years. All stars are suns. Our sun is a medium sun. There are millions of suns bigger than our sun.***

இது தான் எமது பிரபஞ்சத்திலுள்ள ஒரு பங்கு ஆகும். உள்ளத்திற்கு அற்பாற்பட்டது அல்லவா? இதைத்தான் கடவுள் என்கின்றோம். இவற்றை நன்கு அறிந்துதான் தெய்வத்தை முதலில் வைத்தார் திருவள்ளுவர். முதல் பத்துக்குறள்களை இப்பெரும் சக்தியாகிய தெய்வத்தைத்துக்கு அர்ப்பணித்துள்ளார். இதனால்தான் தெய்வத்திருக்குறள் என்று எண்ணத்தகும்போல் உள்ளதோ. கடவுளை நாமும் வாழ்த்துவோம். தெய்வத்தை நாமும் தொழுவோம், வழிபடுவோம் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தில் வளம்பட நாம வாழ்வோம், மற்றவரும் வாழ வணங்குவோம். உலகம் வாழக் காண்பதைவிட உயர்ந்த அறம் எங்கும் இல்லை.

## வாழ்க குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EBONY FINE FURNITURE

# EBONY FASHION

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
நடாத்தும்

திருக்குறள் மாநாட்டுக்கு

எமது வாழ்த்துக்கள்

***904 MARKHAM ROAD, SCARBOROUGH,***
***ONTARIO, M1H 2Y2***
***TEL (416) 289 9345***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கள இசை
2. தமிழ்த் தாய் வாழ்த்து
   கனேடிய தேசிய கீதம் - கலைக்கோவில் மாணவர்கள்
3. மௌன அஞ்சலி
4. குத்துவிளக்கேற்றல் - பிரதம விருந்தினர்
5. ஆசி உரை - கவிநாயகம் கந்தவனம்
6. ஆசி உரை - ஈழத்துப் பூராடனார்
7. திருக்குறள் ஓதுதல் - கலைக்கோவில் மாணவர்கள்
8. தலைவர் வரவேற்புரை
9. பிரதம விருந்தினர் உரை
10. மாநாட்டு மலர் வெளியீடு - திரு ச.சபாநாடேசன் ( உப தலைவர் உ.த.ப.இ)
11. திருக்குறட் போட்டியில் மழலைப்பிரிவில் முதலாம் இடம் பெற்ற
    செல்வி சகானா பத்மநாதன் திருக்குறள் ஓதுதல்
12. சொற்பொழிவு - பெருங் கவிக்கோ வ.மு.சேதுராமன் (தமிழ் நாடு)
13. திருக்குறட் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் பெற்ற
    செல்வி மதுரா ஆனந்தராசா திருக்குறள் ஓதுதல்
14. சொற்பொழிவு - திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்
    **வள்ளுவமும் காலமாற்றமும்**
15. திருக்குறட் போட்டிகளில் மழலை, கீழ்ப் பிரிவுகளில் பங்குபற்றிய
    சிறுவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்குதல்.

## இடைவேளை (பி.ப 1.00 - பி.ப 2.00)

15. திருக்குறட் போட்டியில் மேற்பிரிவில் முதலாம் இடம் பெற்ற
    செல்வன் பிரபாகரன் திருநாவுக்கரசு திருக்குறள் ஓதுதல்
16. சொற்பொழிவு - டாக்டர் ராம் மோகன்
    **காலத்தை வென்று நிற்கும் குறள்**
17. சொற்பொழிவு - திரு. எஸ். பத்மநாதன்
    **திருக்குறள் தரும் இல்வாழ்க்கைப் பண்பாடு**
18. **இன்னிசையில் திருக்குறள்** - கலைமணி திரு. எஸ் யோகேஸ்வரன்
19. திருக்குறள் கதிர் இசைத்தட்டு (C.D) வெளியீடு
    திரு. மனுவேல் யேசுதாசன் (சட்டத்தரனி)
20. கவிஞர் அனலை இராசேந்திரம் அவர்களைக் கௌரவித்தல்
21. சொற்பொழிவு - திருமதி லீலா சிவானந்தன்
    **திருக்குறள் காட்டும் கடவுட் கொள்கை**
22. சொற்பொழிவு - டாக்டர் விக்டர் ஜோன் பிகராடோ
23. திருக்குறட் போட்டி நடுப்பிரிவில் முதலாம் பரிசு பெற்ற செல்வி கஜந்தி
    செல்வநாயகமூர்த்தி திருக்குறள் ஓதுதல்
24. சொற்பொழிவு - திரு. யோகராஜா சட்டத்தரணி (London, UK)
25. சொற்பொழிவு - பேராசிரியர் இரா ஆண்டி (தமிழ் நாடு)
    **திருக்குறள் காட்டும் நீதி நெறி**
26. சொற்பொழிவு - டாக்டர் நாக கணேஸன் (NASA, U.S.A)
    **குறளில் விஞ்ஞானம்**
27. நன்றியுரை
28. திருக்குறட் போட்டிகளில் நடு, மேற், உயர்ப் பிரிவுகளில் பங்கு பற்றியவர்களுக்கு பரிசில்களும்
    சான்றிதள்களும் வழங்குதல்
29. மாநாட்டுத் தீர்மானங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்ச்சிகள்

ஆரம்பம்: பி.ப. 6.00 மணி (மாலை)

வரவேற்பு நடனம் (சலங்கோதயமாணவர்)
தலைவர் வரவேற்புரை

***பட்டி மன்றம்***

தலைப்பு: திருக்குறள் தமிழர்க்குரியதா? தரணிக்குரியதா?
தலைமை: கவிஞர் உதய கரன் துரைராஜா பொறியிளாளர்)

தமிழர்க்குரியது: (1) திரு ந. முல்லை திகலன் (தமிழ் எழில் முன்னாள் ஆசிரியர்)
(2) கலாநிதி குலமோகன் (முன்னாள் பல்கலைக் கழகவிரிவுரையாளர்)
(3) திருமதி. வனிதா. ராயேந்திரம் (ஆசிரியை, பேச்சாளர்)

தரணிக்குரியது (1) திரு ரூபன் இரட்ணம் கவிஞர் (பிரபல பேச்சாளர்)
(2) திருமதி ராஜ் மீரா இராசையா (ஆசிரியை, எழுத்தாளர், பேச்சாளர்)
(3) செல்வி. இராஜி சுப்பிரமணியம் (நுண் உயிரியல் தொழிப்பவியலாளர், ஆசிரியை)

***குறள் நெறி கூறும் நாட்டிய நாடகம் (சலங்கோதய மாணவர்)***

# இடைவேளை

நன்றியுரை:- பாலசுப்பிரமணியம்

பின்னணிப்பாடகர்கள்:- S.P. பாலசுப்பிரமணியம், சித்ரா ஆகியோர் பாடிய திருக்குறள் வெள்ளித்திரையில் காண்பிக்கப்படும்

விடுதலைக்கீதங்கள்
அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு
சிவபார்வதி நடனம் (சலங்கோதய மாணவர்)
திரு.கே. எஸ் பாலச்சந்திரனின் நெறியாள்கையில் உருவான திருக்குறளின் வாழ்கை நெறி கூறும் நாடகம்.

***கிராமிய நடனம்***

இன்னிசைக்கச்சேரி:- கலை மாமணி யோகேஸ்வரன்

குறிப்பு 6வது உ.த.ப.இயக்க மாநாட்டின் ஒளி நாடா (வீடியோ) பிரதிகள் பெறவிரும்பவோர் தங்கள் பெயர்களை பதிவ செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. C.P. Giri D.D.S

**Dental Surgeon**

டாக்டர். கிரி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு
இயக்கம் (கனடா)
நடாத்தும்
திருக்குறள் மாநாடு சிறப்பாக
நடைபெற எமது வாழ்துக்கள்.

# Dr. C.P. Giri & Associates

**3480 Lawrence Ave. E.,**
**Scarobrough. Ont. M1H 1A9**

(Markham & Lawrence))

**Tel: (416) 439-5252 Pager (416) 390-7800**
**Fax: (416) 439-0627**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவின் முன்னணி முத்தமிழ் ஏடு

**தமிழர் செந்தாமரை**

**THAMILAR SENTHAMARAI**

பிரதம ஆசிரியர்
திரு கனக அரசரத்தினம்

**Tel: (416) 439-0747 / 804-9438**
**Fax: (416) 439-5720**

---

UTHAYAN

**உதயன்**

பிரதம ஆசிரியர்:
திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம்

**Tel: (416) 412-3092 Fax: (416) 412-3119**

---

**நம்நாடு**

பிரதம ஆசிரியர்
திரு. தீவகம் வே. இராஜலிங்கம்

**Tel: (416) 429-6524**
**Fax: (416) 429-6455**

---

**ஈழநாடு**

பிரதம ஆசிரியர்:
திரு ரி. கே. பரமேஸ்வரன்

**Tel: (416) 654- 9825**
**Fax: (416) 652-7493**

---

கனடாவின் முத்த முத்தமிழ் ஏடு

**செந்தாமரை**

**SENTHAMARAI**

EDITOR: SATCHI ARUMUGAM

**Tel: (416) 755-5231 Fax: (416) 755-5629**
**2390 Eglinton Ave. East, Suite 293**
**(Kennedy & Eglinton)**

---

**TVT**

**TV TAMIL Inc.**

**Tel: 416-298-1911 Fax: 416-298-9407**
**5637 Finch Ave. East, Unit #5,**
**Scarborough, ON M1B 5K9 Canada**
Email: prog@tvtamil.com / Toll Free: 1-800-906-0555

---

தமிழ் உணர்வு கொண்ட உள்ளங்களின் வானொலி

**கீதவாணி**

**1430AM / 88.9FM**

தொடர்புகளுக்கு:
திரு. நடா இ. ராஜ்குமார்

**Tel: (416) 751-9077 (416) 588-2472**
**Fax: (416) 751-8646 (416) 293-8556**

---

RAC

**RADIO ASIA CANADA**

24 மணி நேர ஒலிபரப்பு

**INTERNATIONAL SERVICE**

**Tel: (416) 289-1522**
**Fax: (416) 289-1840**

---

**தமிழ் ஒலி**
**வானொலி**

**AM530**

திருமதி வசந்தா நடராசா

**Tel: (416) 746-5092**
**Fax: (416) 746-3226**

---

**KALLAPAM**
**T.V. CEYLON**

**Tel: (416) 499-3303 Fax: (416) 499-4741**
**1920 Ellesmere Rd., Suite 104**
**P.O. Box. 188, Scarborough, ON M1H 3G1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. RON FULLER

(Chiropractor)

## Treatment of Pains In:

- ☐ Neck
- ☐ Spine
- ☐ Shoulders, elbows, knees, feet
- ☐ Headaches
- ☐ with special interest in car accident injuries

**1920 Ellesmere Road Suite # 303**
**Scarborough, ON. M1H 2V6**

**Tel: (416) 439-3613 Fax: (416) 439-7325**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Way Driving School

* தன்னம்பிக்கையுள்ள கார் ஓட்டுனராக விரும்புகிறீர்களா?

* வாகனம் ஓட்ட அச்சமா?

* முன் அனுபவம் இல்லை என்பதா?

* குறைந்த செலவில் சிறந்த ஓட்டுனராக விரும்புகிறீர்களா?

ஏற்கனவே பலமுறை வீதிப் பரீட்சையில் தோன்றி சலித்தவர்களை எல்லாம் வெகு விரைவில் சித்தியடையச் செய்யும் திறமையும், பொறுமையும், பல தமிழ் மக்களின் பாராட்டையும் பெற்ற பயிற்சியாளரை இன்றே நாடுங்கள்



**PARAM SELVA B,Sc., OSL**

**Professional Driving Instructor**

**Licensed by th Ministry of Transportation**

**Tel: (416) 431-3763**

**(416) 289-6339**

**Pager**

**(416) 374-9724**

* Defensive Driving Techniques
* G1 G2 Drivers Training According to the new Laws
* Car for your Road Test, with special lesson on the same day
* Free Home and Office pick-up
* Early Road Test Arrangements
* Save up to 41% on Insurance
* Special Classes Available for G2 Road Test
* Affordable Rates
* Late Model Car

## Income Tax Return (Computerized)

### வருமானவரி தயாரிப்பு

மேலுள்ள தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PORTELLO

ஊற்று நீரில் தயாரிக்கப்படுவது

Coffeine தன்மை அற்றது

Non Alcoholic Beverage

Chill the Portello bottle to see a secret Message apear on the

***COLD - O - METER !***




போர்ட்டலோ

இது மட்டுமா? போர்ட்டலோ சொல்லுகின்றது 'குளிரூட்டிப் பாருங்கள்' வர்ணத்திற்கு ஒரு சுவையாக ஏழு நிறங்களுக்கும் ஏழு சுவைகள்

**Bay Hil Impex Ltd.**
**70 Waybright Court, Suite #6**
**Scarborough, Ont. M1S 4E4**
**Tel: (416) 293-6555**
**Fax: (416) 293-6459**

Internet:e-mail info@portello.com
Web Page: www.@portello.com
Get Linked Free@
www.portello.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளின் காலம்.

எஸ்.பி.கனக்ஸ் பி.ஏ.(சிறப்பு)

உலகம் போற்றும் உத்தம நூல்களுள் தமிழகத்தின் தனிச் செல்வமாக விளங்குகின்ற திருக்குறள் தலைமை பெற்று மிளிர்கின்றது. சாதி, சமய, நீதி, நிற, நாட்டு வேறுபாடுகளற்றதாய் எல்லா உலகும் போற்றும் வண்ணமாய்த் திருக்குறள் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களின் மூலம் மக்கள் வாழ்வாங்கு வாழ வழி முறையை இந்நூல் எடுத்தோதுகின்றது. முத்துக்குளிக்கும் மக்கள் கடலில் மூழ்கித் தங்கள் மூச்சுவலிமைக்கேற்ற முத்துக்களை அகழ்ந்து வருவதுபோல், திருக்குறளில் மூழ்கும் மக்களும் தங்கள் அறிவு வலிமைக்கேற்ற அளவு செல்வங்களை அள்ளி மகிழலாம். உலகமே திருக்குறளில் அடங்கியிருக்கிறது. உலக இலக்கியங்களில் திருக் குறள் மட்டுமே மிகவும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது.

வையத்துள் மக்கள் வாழ்வாங்கு வாழும் முறையை வளமாக வர்ணிக்கும் திருக்குறளின் தன்மையை உன்னி எண்ணும் போதிலே வள்ளுவரின் சக்தியைப் பற்றி வாழ்நாள் முழுவதும் வியந்து புகழ்ந்துகொண்டே இருக்கவேண்டும்போல் தோன்றுகின்றது. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற ஒப்பற்ற உண்மையினை வாழ்ந்து காட்டிய ஒரு பேரறிஞராக விளங்கும் வள்ளுவப் பெருந்தகையே உலகுக்குத் தெய்வ வாக்காகத் திவ்விய நூல் வடிவில் தந்திருப்பது பொதுவாக எல்லா நாடுகளும், சிறப்பாகத் தமிழ் நாடும் செய்த மாதவம் என்றே கொள்ளவேண்டும். தெய்வப் புலவர் எனப் பெயர் பெற்ற வள்ளுவனார் அறத்துப் பாலில் சிறந்த ஒரு அறநூலா சிரியராகவும், பொருட் பாலில் முதிர்ந்த ஒரு அரசியலறி ஞராகவும், இன்பத்துப்பாலில் ஒரு சிறந்த கவிஞராகவும் காட்சி தருகின்றார். உலக கவிகளுக்குள் இவர் தலை சிறந்த கவியாக விளங்குகிறார். தமிழணங்கு பெற்ற தவப் புதல்வரான திருவள்ளுவரின் உலகப் பொதுமறையான திருக்குறள் நவில் தொறும் நவில் தொறும் நயத்தினை நல்குகின்றது.

திருக்குறளின் காலத்தைப்பற்றியும் திருவள்ளுவரைப் பற்றியும் அவரது காலத்தைப் பற்றியும் அறிஞர் பெருமக்க ளிடையே பல்வேறுவிதமான அபிப்பிராய பேதங்கள் நிகழ்கின்றன. திருக்குறளின் உண்மைக்காலத் தையோ திருவள்ளுவரின் உண்மைக்காலத்தையோ நிச்சயப்படுத்திக் கூற முடியாத நிலை இன்று அதிகங் காணப்படுகின்றது. திருவள்ளுவர் கி.மு.மூன்றாம் நூற்றா ண்டிலே வாழ்ந்து இக்காலப் பகுதியிலேயே திருக்குறளை யும் இயற்றியிருக்கவேண்டுமென்று சில தமிழிலக்கிய வரலாற்றை ஆராயப் புகுந்த அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆலத்தூர்க்கிழார் என்னும் குளமுற்றத்தஞ்சிய கிள்ளி வளவ வேந்தனை விழித்து தாம் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்றினில் 'எந்நன்றி கொன்றார்க்கும், என்ற குறளை ஏற்றவாறு அழகுற அமைத்து:

**நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றார்க்குய்தியில்லென**

அறம் பாடிற்றே ஆயிழை கனவு' என்று பாடியதோடமையாது திருக்குறளை 'அறம்' என்று (அறநூல்)ம் கூறியிருக்கிறார். இவ்வாறு புறநானூற்றுப் பாலில் திருக்குறள் இடம்பெறுவதாயின் புறநானூற்றுக்கு மிக முற்பட்ட காலத் திலேயே திருக்குறள் இயற்றப் பட்டிருத்தல் கூடுமெனக் கருதுவாருமுளர். இதுபோலவே திருவள்ளுவரின் காலம் இன்னதென உணர்த்தும் வகையில் காக்கை பாடினியார் என்ற புலவர் பாடிய புற நானூற்றுச் செய்யுளொன்றில் "ஈன்ற பொழுதிற் பெரிது வக்கும்" என்ற குறளடியை அமைத்து மிக அழகுற

" ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனனே" என்று பாடுகின்றார். கிள்ளி வளவ மன்னனின் காலம் கி.பி.2ம நூற்றாண்டின் முற்பகுதியெனவும், காக்கை பாடினியார் காலம் கி. பி. 1ம் நூற்றாண்டில் பிற்பகுதியெனவும் ஆராய்ச்சியாளர் கள் கருதுகிறார்கள். ஆதலால் திருக் குறள் இக்காலங் களுக்கு மிக முற்பட்ட காலத்தே தோன்றியிருக்கக்கூடும் என நம்புகின்றார்கள். கௌதம புத்தரின் கொள்கைகளைத் திருவள்ளுவர் கண்டிக்கிறார். ஆதலினால் புத்தர் காலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிக் காக்கை பாடினியார் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்த வரென்று அறிஞர் சிலர், கருதுவதுடன் திருவள்ளுவரின தும் திருக்குறளினது காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு எனவும் கொள்கிறார்கள். சங்க இலக்கிய நூல்களுள் அகநானூறு, புறநானூறு நற்றிணை, குறுந்தொகை என் பன போன்றவற்றில் திருக்குறள் வரிகள் சில காணப் படுகின்றன. ஈரடிகளால் ஆன திருக்குறள் வேறு பெரிய நூல்களிலுள்ள சொற்களையோ வாக்கியங்களையோ பெற்றி ருத்தல் முடியாது. ஆகவேதான் இந்நூற்காலங் களுக்கு மிக முற்பட்ட காலத்திலேயே திருக்குறள் இயற்றப்பட்டிருக்க வேண்டு மெனக் கருதுகிறார்கள்.

தமிழிலக்கிய வரலாற்றறிஞர்கள் சங்கம் மருவிய கால ஆரம்பப் பகுதியிலேயே திருக்குறள் இயற்றப்பட்டிருக்க வேண்டுமெனக் காட்டுகின்றார்கள். சங்ககால இறுதியில் எழுந்த புகழ்பெற்ற சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையி லும் திருக்குறள் அதிக இடங்களில் மிளிர்கின்றதைக் காணலாம். சாத்தனார் தம் மணிமேகலையிலே வள்ளுவரின்:

"தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை என்ற குறளை அப்படியே
முழுமையாக எடுத்தாண்டு .

"தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" என்று

பாடியதோடு இறுதியில் திருவள்ளுவரைப் புகழ்வதையும் காண இயலுகின்றது. ஆகவே திருவள்ளுவர் இக்காலத் திற்கு மிக முற்பட்ட காலத்தில் தோன்றியிருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அத்தோடு திருக்குறளில் பல இடங்களில் சமண நூல் கருத்துகள் (பீலி) காணப்படுவ தால் அது சமணக் கருத்துக்கள் தமிழ் நாட்டில் பரவிய காலத்திலேயே இயற்றப் பட்டிருக்கவேண்டுமென்று கொள்கிறார்கள். சங்கத் தமிழுக்கும் திருக்குறள் எழுந்த காலத் தமிழிற்கும் வேறுபாடிருக்கிறது. திருக்குறள் தோன்றிய கால அரசியல் சிறப்புடையதாக விளங்கியிருக் கின்றது. எனவேதான் திருக் குறள் சங்கம் மருவிய கால ஆரம்பத்தில் எழுந்திருக்கவேண்டும் என்று கருதிகிறார் கள். ஆகவே திருக் குறளினதும் வள்ளுவரினதும் காலங் களை நிச்சயமாகக் கூறமுடியாதிருக்கிறது.

இத்தகைய தொன்மை விளங்கிக் தொல்லை மறந்திடச் செய்யும் திருக்குறளானது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பொருட்களையும் மத்தியாகக் கொண்டு மிகவும் உன்னத நடையில் இனிய நயத்துடன் சுவை மிகுந்த அணிகளுடன், உருக்கும் உருவங்களுடன் வையம் வாழ்வாங்கு வாழும் நெறியை வளமுற எடுத்துச் சொரிகின்றது. வாழ்க குறள்: வளர்க குறள் நெறி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JYOTHI

## CATERING SERVICE

### CATERING

* திருமண பிறந்தநாள் வைபவங்கள் மற்றும்....
* ஸ்பெஷல் சைவச் சாப்பாடு வகைகள்
* வெஜிட்டபிள் புரியாணி
* சிக்கன் புரியாணி, மட்டன் புரியாணி
* இடியப்ப புரியாணி
* வெஜிட்டபிள் பிரைட் ரைஸ்

### SNACKS & SWEETS

* ஜோதி மிக்ஸர்
* பூந்திலட்டு
* தோதல்
* வடை
* மைசூர் பாகு

## ஜோதி கேட்டறிங் சேர்விஸ்

**Spectrum Foods Inc.**

**60 Venture Drive, Units 9-10, Scarborough, Ont, M1B 2S4**

Tel: 416-283-5196

Web site: www.jothi.com/cater/


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் மாநாடு 98 மனனப் போட்டி / கட்டுரைப்போட்டி

மழலையர் பிரிவு



செல்வி சகானா பத்மநாதன்



செல்வி வினுசா ராஜ்குமார்



செல்வி பூரம்யா அமுதன்

கீழ்ப்பிரிவு



செல்வி மதுரா ஆனந்தராசா



செல்வன் செந்தூரன் ஜெயராசலிங்கம்



செல்வி சிந்துஜா

நடுப்பிரிவு



செல்வி கஜந்தி செல்வவினாயகமூர்த்தி




செல்வி பிரியங்கா ஜீவகுமார்



செல்வி சுவர்ணா ஆனந்தராசா

மேற்பிரிவு



செல்வன் பிரபாகரன் திருநாவுக்கரசு



செல்வி சுகிதா மகேஸ்வரன்



செல்வி மேகலா சண்முகரட்ணம்

உயர்பிரிவு



திருமதி கோதை அமுதன்



திருமதி இராஜம்மா இராசையா



திருமதி பாக்கியலட்சுமி வாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்- கனடா

## செயற்குழு உறுப்பினர்கள்

காப்பாளர்
கவிஞர் வி. கந்தவனம்
தலைவர்
திரு. சி. செல்லையா
உப தலைவர்
திரு. ச. சபா நடேசன்
செயலாளர்
திரு. ஆர். ஆர். ராஜ்குமார்
உதவிச் செயலாளர்
திரு. சிவா. கணபதிப்பிள்ளை
பொருளாளர்
திரு. க. விக்னேஸ்வரன்
உதவிப் பொருளாளர்
திரு. சி. சிவசோதி

திரு. அ. சௌந்தரராஜன்
திரு. அ. அருந்தவராஜா
திரு. ம. யேசுதாசன்
திரு.சி. பாலசுப்பிரமணியம்
திரு. நந்தி
திரு. டேவிட் தோமஸ்
திரு. சி. செகராஜசிங்கம்

திரு. எஸ். பத்மநாதன்
திரு. அ. துரைராஜா
திரு.கே.எஸ். பாலச்சந்திரன்
திரு.செ. செல்வா
திரு.ந. நந்தகுமார்
திரு.சு.மோகன்
திரு.ஆ. வேலுப்பிள்ளை

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

திருக்குறள்: 114



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவா
# நகை மாளிகை

**22K GOLD**

தங்கத்தை மலிவுக்கு எதிர்பார்ப்பவர்களின் தரம் ஒரு ரகம்.
தங்கத்தை மலிவாக தருபவர்களின் தரம் ஒரு வகைத் தரம்.
தங்கத்தை தரமாகத் தரவேண்டும் என்பவர்கள் ஒரு திறமான ரகம்.
தங்கத்தை தரமாகவும், தூய்மையாகவும் தருபவர்கள் தான் சிறந்த ரகம்.
இந்த வகையில் '<u>ஸ்ரீ சிவா</u>' உயர்ந்த ரகம்

# SRI SIVA JEWELLERY

**TEL: (416) 531-4867**

**721 BLOOR ST. W. TORONTO, ONT.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

ஈழத்துப் பூராடனார்

இலக்கியங்களை சங்க கால இலக்கியங்கள் பிற்கால இலக்கியங்கள் என்று இரு பெரும் கட்டங்களாக நிரைப்படுத்துவர். இவற்றுள் சங்க இலக்கியம் ஆரியப் பண்புகள் எதுவும் கலக்காத பண்டைத் தமிழ் நெறிகளுக்கு இலக்கணமாகத் திகழ்பவை.

இலக்கிய நூல்களில் பல திரு என்னும் முன்னடை மொழிபெற்று பயின்று வருகின்றன. நூல்களின் தரத்துக்கும் நோக்குக்கும் ஏற்ப திரு என்ற சொல் புதுப் புதுக் கருத்துகளால் துலங்கும் பிற்காலப் பக்தி இலக்கியங்களிற் பல திரு என்ற அடைமொழியினால் சிறப்புறும் திருப் பள்ளியெழுச்சி, திருப் புராணம், திருவாசகம், திருப்பாடல், என்பன அதன்பாற்படும். சில புராணங்களும் திருவிளையாடற் புராணம் திருவானைக்கா புராணம் போன்றவையும் இந்தச் சிறப்புக்குரிதாகின்றன.

ஆனால் சங்க நூல்களுள் இரண்டே இரண்டு நூல்கள்தான் திரு என்னும் அடைமொழியைப் பெறும் தகுதிக்குடையனவாயின. திருமுருகாற்றுப்படை. திருக்குறள் என்பவைதாம் அந்த இரண்டும். திருக்குறள் ஒரு மறை நூல், வாழ்க்கை நெறியின் முப்பரிமாணமும் கொண்ட நூல். திருமுருகாற்றுப் படையை ஒருசாரார் பக்தி நூல் என்பர். இன்னும் ஒரு சாரார் குறிஞ்சி (மலை) நிலத்தின் அழகைச் சொல்லும் நூல் என்பர். இது பரிசு பெற்ற ஒரு புலவன் வழியிற் சிந்திக்கும் புலவர்களைப் பார்த்து புரவலனின் புகழ் சொல்லி, அங்கு சென்று நீவிரும் நான் பெற்ற நலன் பெறுக என வழிப்படுத்தும் வகை நூல்.

தமிழ்ப் பாவகைளான குறள். அகவல். சிந்து. வெண்பா, துறை, விருத்தம் முதலிய யாப்புகளுள் குறள் என்பதும் ஒரு வகை. `திருக் குறள்` எனும் சிறப்புப் பெயர் தாங்கி நிற்பது. திரு எனும் முன்னடை மொழிச் சிறப்புப் பெற்றது. திரு என்றால் நாம் வழக்கில் மிஸ்டர் என்று செல்வோம். அப்பிடியானால் ``மிஸ்டர் குறள்'' என்று இதனை அழைக்கலாமா? அல்லது ஹொனரபிள் குறள் என்று சொல்லலாமா?

திருக்குறள் ஒரு பூக்கும் தருணத்துக் கரும்பை யொத்த சுவை தரும் நூல். கரும்பு பூக்கும் நிலையில் பூக்குடலையைத் தன்நெஞ்சுள் அடைத்திருக்கும்போது அந்தக் கரும்பின் சாறு அடி தொட்டு நுனிவரை ஏகமாய் சமமாய்ப் பரந்து நிற்கும். அப்போது எப்பக்கம் இருந்து சுவைத்தாலும் அதன் சுவை ஒரே அளவினதாக இருக்குமென்பர். ஆனால் குடலை வெளித் தள்ளி பூத்ததும் அதன் சுவை பழையபடி அடிக்கு இறங்கிவிடுமாம் உட்குடற் சக்கை தளர்ந்து உக்கத் தொடங்குமாம்.

பூப்பூக்கும் நிலையில் உள்ள கரும்பு போன்றதே திருக்குறளும். அடியிலிருந்து அறத்தைப் படித்துப் பொருளைத் தேடிய பின்னர் அவற்றை அனுபவித்து நுகரும் இன்பத்தைக் காமத்துப் பாலில் வைத்திருக்கிறார். அடியிலிருந்து சுவைத்தாலும் எங்கும் ஒரே சுவை தரும். ஒருவன் காமத்துப் பாலில் இருந்து படித்தாலும் அதன் பின்னர் காமத்தை ஆறுதலாக முழுமையாக அனுபவிக்க வேண்டிய வழிகளைப் பொருளிற் காண்பான் பொருள் தேடும் அறவாழ்க்கையை அறத்தில் காண்பான். அடியிலிருந்தோ முடியிருந்தோ எப்பக்கம் நுகர்ந்தாலும் ஒரே மாறாத சுவைப் பயனைத் தருவது திருக்குறள். திருக்குறள் ஒரு அற நூல் சட்ட நூல் என்பர். இவ்வித நூல்கள் எதுவும் பாலுணர்வுக்குப் பாதை வகுப்பதில்லை. மாறாக அதனை இருட்டடிப்பும் செய்யும் தருணம் காணும்போது தண்டிக்கும் வழிவகைகளையும் கட்டளையிடும். காமம் சமூகவியல் சார்ந்த குற்றம் மட்டுமல்ல ஆத்ம ஆதாயத்தின் வேரறுக்கும் விசவித்து என்றும் தடுக்கும்.

ஆனால் அந்தக் கட்டுப்பாட்டைத் தகர்த்து நிற்பதும் மானுடத்தின் முழுமையை பிரதிபலித்துக் காட்டுவதும் திருக்குறள். பாலியற் கலை நூல்கள் தமிழில் போதியளவு இல்லை என்பர். ஆனால் திருக்குறளின் காமத்துப்பாலிலும். திருப்புகழில் ஆங்காங்கு (வெறுப்புணர்வுடன்) அருணகிரிநாதர் சொல்லியுள்ள பாலியல் நுணுக்கக் கருத்துரைக்கின்ற சந்தப்பாக்களிலும் காணப்படும் பாலுணர்வு நுட்பங்களும் எத்தவொரு பாலியல் நூல்களிலும் சொல்லப்படாதன. அதி வீரராமனின் கொக்கோகமமும் மாம்பழக் கவிராயரின் சந்தி விலாசமும் கூட இவற்றிற்குத் தோற்றுப் போகும் இத்தகைய துணிவு திருவள்ளுவர்க்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. வாழ்க்கையில் செய்யாதே என்று சொல்லிக் கொண்டு யாவரும் விரும்பிச் செய்து நுகர்வது. இது தீமையான காரியம் என்று போதித்துக் கொண்டே அதை ஏதோ ஒருவழியில் வடிகால் செய்து வாழ்வது என்ற போலி மானுடத்தை வள்ளுவர் என்றுமே விரும்பியவர் அல்லர். இவை எல்லாம் திரையிட்டு மறைக்கும் ஒரு செயல் இல்லை என்பதை பொய்யாமொழியார் நன்கு உணர்ந்திருந்தார். எனவே தான் காமத்து உணாவுக்கு இலக்கணமும் இலக்கியமும் நிறைந்த பகுதியாகக் காமத்துப் பாலை விரசமில்லாத விவரணமாகக் குறள்வடிவிற் தறித்தார். இது தமிழ் இலக்கியத்தின் ஒரு துணிவான வழி நடத்துதல் என்பதே பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LAW OFFICE
of

KUMAR SRISKANDA M. INPARAJAH

Barristers and Solicitors
3852 Finch Avenue East, Suite 209
Scarborough, ONT
M1T 3T9


- காப்புறுதி வழக்குகள்
- அகதி – குடிவரவு சட்ட விடயங்கள் அனைத்தும்
- அகதி – மேன்முறையீடு (Refugee Appeal)
- Immigration - Sponsorship Appeals - PDRCC மீளாய்வு விண்ணப்பங்கள்
- குடும்பச் சட்ட பிரச்சனைகள், விவாகரத்து
- ஸ்ரீ லங்காவில் உள்ள விடயங்களை கையாள அற்றோனித் தத்துவம் கொடுத்தல்.

K.V.S. ஸ்ரீஸ்கந்தகுமார் M. இன்பராஜா

கனேடிய வழக்கறிஞர்கள்

தொலைபேசி : 416 - 321 - 9739

(ஸ்காபரோவில் Kennedy - Finch - Birchmount சந்திக்கருகாமையில்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிமேலழகரும் பாரதிதாசனாரும்

கவிஞர் அனலை ஆ. இராசேந்திரம்.

தாழ்வுற்று, அறிவு வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நின்ற தமிழினத்திற்குக் கவிதைகளால் உணர்ச்சி யூட்டியவர் மாகவி பாரதியார். அவரை ஆசானாய்க் கொண்டு தமிழினத்தின் ஏற்றமும் எழுச்சியுமே மூச்சாய்த் தாங்கி வாழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். சாதிப் பிரிவுகளாலும் சமயப் பிணக்குகளாலும் கூறு வீறுகெட்டு நின்ற தமிழினத்திற்குக் கவிதைகள் மூலம் நாடிநரம்புகளில் தன்மானமிடுக்கேற்றியவர் அவர். தமிழர் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை உயிரினும் மேலாக மதித்தவர் பாவேந்தர். மொழி உணர்வின்றி வாழ்ந்தோர்க்கு இனமான உணர்வை உண்டாக்கி அவர் தம் எழுச்சி வரலாற்றின் ஆரம்ப அத்தியாயத்தை எழுதிவைத்ததில் தந்தை பெரியாருக்கு நிகரான பங்கு புரட்சிக் கவிஞருக்குண்டு. வடவர் மதமும் கலையும் தமிழர் மொழி, கலை, பண்பாடு, ஒழுக்க நெறிகளுக்குக் கேடு விளைத்து அவற்றை அழித்துவிடும் தன்மை வாய்ந்தவை என்று எடுத்துக்கூறி, இறுதி மூச்சுவரை அவை தமிழர்பால் ஊடுருவுவதை எதிர்த்து நிற்பதையே அவர் பணியாய்க் கொண்டிருந்தார். இவ்வகையில் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் முதலாம் உரையாசிரியர்கள் பலர் வடவர் சமயக் கருத்தின்வழி நின்று உரை வரைந்ததனால் வள்ளுவர் உண்மைக்கருத்து வெளிக்கொணரப் படவில்லை என்று கருதினார். ஆரியர் கருத்துக்கள் அறிவுக்கும் இயற்கை முறைக்கும் பொருந்தாதவை என்பதால் தமிழர் பண்பாட்டின் வழிநின்று ``வள்ளுவர் உள்ளம்''என்னும் பெயரில் திருக்குறளுக்கு உரை வரையலானார். ``நூல் முழுமைக்கும் அவர் உரை எழுதிமுடித்தாரா? எழுதியிருப்பின் அதற்க என்ன நிகழ்ந்தது?'' என்பன தெளிவற்றனவாகவே இருக்கின்றன. எண்பத்தைந்து குறள்களுக்காக உரைகளும் விளக்கங்களுமே இன்று கிடைத்துள்ளன.

``எந்நாளில் நூல் தோன்றுகிறதோ, அந்நாளில் மக்களிடம் மட்டுமே பரவியிருந்த பண்பாட்டின் அடிப்படையிற்றான் நூற்கருத் துக்களும் அமையும்'' என்று கூறும் பாவேந்தர் திருவள்ளுவர் திருக்குறள் பெரும்பாலும் எண்ணூற் கொள்கையின் அடிப்படையில் உருவானதாக எண்ணுகிறார். அக்கொள்கைகளை அடியொற்றியே அவர் திருக்குறளுக்கான தன்னுரையை அமைத்துள்ளார். ``அக்காலத் தமிழர்கள் இந்த உலகம் என்றைக்கு உண்டானது என்று ஆராய்வது பயனற்ற வேலை என்பர். உலகம் ஆதியினின்று முதன்மையினின்று தோன்றிற்று என்றார், அந்தக் கருத்தின் பண் பாட்டின் அடிப்படையில்தான் அக்கால நூற்களும் அமைந்தன. உலகம் ஒருவனால் உண்டாக்கப் பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு நூல் அமையாது , இதுதான் சாங்கியத்தின் அடிப் படையில் குறள் உண்டாயிற்று எனப்பட்டது. சாங்கியம் மதமன்று. அது எவராலும் உண்டாக்கப்பட்டதும் அன்று. அக்கருத்துக்களின் தொகுதியே எழுதாக்கிளவி எனப்பட்டது. எழுதியபின் எண்ணூல் என்றார்கள். சாங்கியக் கருத்துக்கள் இயற்கையோடு இயைந்தவை. பகுத்தறிவுக்கு ஒத்தவை சாங்கியக் கருத்துக்கள். பண்பாடுகள் எவராலும் எவரைத் தம்பக்கம் இழுக்கவும் படைக்கபபட்டன அல்ல.''

மேற்கண்டவாறாக எண்ணூல் பற்றிக் கூறும் பாவேந்தர் திருக்குறளின் ``கடவுள் வாழ்த்து'' அதிகாரத்தை உலகின் தோற்றம் எனக் குறிப்பிடுகிறார். கடவுள் வாழ்த்து (என்னும் பெயர் சூட்டல்) இடையில் ஏற்பட்ட வேலை என்கிறார்.

முதற்குறளுக்கு அவர் பின்வருமாறு உரை சொல்வார்.

அகர முதல - அகரத்தை முதலாகி உடைய
எழுத்து - எழுத்துக்களும்
எல்லாம் - அவ்வெழுத்துக்களாகிய சொற்களும் அச்சொற்களாற் பெறப்படும் பொருள்களுமாகிய
ஆதி - முதன்மையினின்று தோன்றியவை எல்லாம்
உலகு பகவான் முதற்று - மக்கள் பகவனை முதல்வனாகக் கொள்ளத்தக்கவர்.

``ஆதியாவது எல்லாப் பொருளும் தோன்று தற்கிடமாவது. வடவர் இதை மூலப்பிரகிருதி என்பர். பகல் எனப்பொருள்படும் பகவு அறிவு அல்லது உணர்வு எனப் பொருள்படும். பகவன் என ஆண்பாலாற் சொல்லப்படினும் பகவு (அஃதாவது உணர்வு) என்றே கொள்ள வேண்டும்'' என விளக்கம் தருகிறார் பாவேந்தர்.

முதற்குறளின் கருத்துரையைப் பின்வருமாறு தருகிறார் புரட்சிக்கவிஞர்.

"உலகும் உயிர்களும் மற்றுள்ளவைகளும் ஆதி என்பதினின்று தோன்றியவை. ஆயினும் உலக மக்கள் பெறத்தக்க பேறு மெய்யுணர்வு ஒன்றே''

இவ்வாறே இரண்டாவது குறளுக்கு ``தூய அறிவுடையவனாகிய பகவனுடைய நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியைத் தொழாமற் போவாராயின் படித்ததனால் ஏற்பட்ட பயன் என்ன?" என்ற பொருளுரைக்கிறார்.

மெய்யுணர்வை உண்டாக்காத கல்வியாற் பயனில்லை என்பது இதன் கருத்து ரையாகும்.

"நற்றாள் தொழுதலாவது தத்துவ உணர்வு பெறுவது" என்றும் "அந்நிலையே எண்ணூல் வீடு என்னும்" என்றும், "இது உருவ வழிபாட்டின் போது இடம்பெறும் திருவடி தொழுதலைக் குறிக்காது" என்றும் கூறுவார் அவர்.

"மலர்மிசை ஏகினான் வேண்டுதல் வேண டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந் தணன், எண்குணத்தான் ஆகியன யாவும் மெய்யுணர்வினையே குறிப்பதாகவும். அவை உயர்திணையாகச் சொல்லப்படுவது வழக்கு' என்றும் சொல்கிறார் பாவேந்தர்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்னும் குறளுக்கு மனத்தை ஒருவழிப் படுத்தினார் துன்புறுதல் இல்லை என்று கருத்துரைக்கிறார்.

"ஈண்டும் பிறவி என்பது மாண்டு பிறப்பதை யின்று, நொடிதோறும் மிகப் பலவாக வேறுபட்டு வரும் மனக் குறிப்பையே" என விளக்குகிறார்.

முதல் அதிகாரத்திற்குப் பரிமேலழகரின் கடவுள் நம்பிக்கைக்கும் சமயக் கருத்துக் களுக்கும் மாறாக மெய்யுணர்வை முதன்மைப்படுத்தி பாவேந்தர் தீட்டியுள்ள உரைகள் வலிந்து அமைக்கப்பட்டவாய் விளங்குகின்றன.

வான் சிறப்பு அதிகாரத்தின் இறுதிக் குறளுக்கு ஆன பரிமேலழகர் உரை பொருட்சிறப்பிலது என்று கூறி, அதற்கு மணக்குடவர் உரையே சிறப்பானது என்பார் பாவேந்தர்.

நீரின்றமையாதுலகெனின் யார் யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு

இக்குறளுக்கு "எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறாதொழுகும் ஒழுக்கும் வினையின்றி அமையாது" எனப் பொருளுரைத்தார் பரிமேலழகர்.

இங்கு "வானின்றமையா தொழுக்கு என்பதற்கு 'மழையில்லாவிடில் மழையொழுக்கு இராது" என்றார் என அவர் பொருள் சிறவாமை நோக்கி னார் அல்லர்.

பாரதிதாசன், மணக்குடவரை ஒட்டி ஒழுக்கம்' எனக்கொண்டு பின்வருமாறு பொருள் கூறுவார்.

"உலகம் நீரின்றி நிலைபெற முடியாதென்றால் ஒழுக்கம் எப்படிப்பட்டவர்க்கும் மழையில்லாமல் நிலைபெறாது"

'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரம் நீத்தார் ஆக்கி அருளிய நூல்களின் பெருமை பேசுவது என்பது பாவேந்தர் கருத்தாகும்.

இங்கு நீத்தார் தமிழ்ச்சான்றோரையே குறிக்கும் என்கிறார் அவர்.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி என்னும் குறளுக்கு, "புலன்களின் மேற்செல்ல வோட்டாமல் அடக்கிய தமிழ்த் துறவியினது அறப்பனுவலுக்கு போதிய சான்று அகன்ற விசும்பில் உள்ளவரின் கோமானாகிய இந்திரனாற் செய்யப்பெற்ற தென்னும் ஐந்திர நூலா?, இல்லை" என்றவாறு பொருளுரைக்கிறார்.

இவ்வாறு பொருள் கொண்டதற்கான காரணத்தை இலக்கண சான்றுகளுடன் பின்வருமாறு கூறு கின்றார்.

"ஆற்றல் என்றால் ஆற்றலால் விளைந்த அறனப்பனுவல்" இவ்வாறு ஆனது தொழிலாகு பெயர். இந்திரன் என்றது இந்திரனாற் செய்யப்பெற்றதாய் உரைக்கும் ஐந்திரம் என்னும் நூலை திருவள்ளுவர் படித்தான் என்பதில் அவர் அருளிய திருக்குறளுக்கு ஆனது போல் இவ்வாறு ஆனது ஆக்கியோன் ஆகுபெயர்"

நிறை மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

"உலகின் கண் உண்மை நிறைந்த நூலைச் செய்த தமிழ்ச்சான்றோரின் பெருமையை பொய்மை உடைமையால் மறைந்தொழிந்த மொழிகள் படைகள் எடுத்துக் காட்டிவிடும்"

தமிழ்மொழி இன்றுவரை அழியாதிருப்பதற்குத் தமிழ்ச் சான்றோர் உண்மை நிறைந்த நூல்களை இயற்றியதும் ஆரியம் மறைந்தொழிய அம்மொழி வாணர்களாற் படைக்கப்பட்ட பொய்மை உடைய நூல்களே காரணம் என்றும் கூறுகிறார் பரதிதாசன். அவர் கருத்து ஏற்கத்தக்கது அன்று.

உலக மறையான திருக்குறள் கூறும் நீத்தாரை, தமிழ்ச் சான்றோர் என ஒரு குறுகிய வட்டத்துள் வைத்துப் பொருள் கூறுவது, அன்நூலின் உலகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமைக்குப் பங்கம் செய்வதாகும். இல்வாழ்க்கை அதிகாரத்தில் இடம்பெறும் ''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறை காப்பே தலை''

என்னும் குறளுக்கு பின்வருமாறு பொருளுரைக்கிறார் பாவேந்தர். ''தமிழ் மகளிர்தம் நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்துவதோர் நிறையை காப்பதோர் காவலே உலகில் சிறந்தது. பிற வந்தேறிகள் தம் மனைவியரைச் சிறை வைத்தலால் காக்கும் காப்பு என்ன பயனைச் செய்யும்'' காலம், மதம், மொழி, இனவேறுபாடுகள் கடந்த ஒரு ஒப்பற்ற நூலுக்கு இத்தகைய உரைகள் ஒருபோதும் சிறப்பளிக்கப் போவதில்லை.

**முறைகோடி மன்னவன் செய்யின்**
**உறைகோடி ஒல்லாது வானம் பெயல்**

''மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின், அவனாட்டுப் பருவமழை இன்றாம் வகை மேகம் பொழிதலைச் செய்யாது''

பரிமேலழகர் கூறும் இப்பொருள் வேள்விக்கு மழை கட்டுப்படும் என்று கூறி, மக்களை ஏய்க்கும் ஓரினத்தாரின் கொள்கையை வலியுறுத்துவது. மன்னவன் முறை கோடிச் செய்தால், அதன் காரணமாக மழை பெய்யாது போகுமானால் முகில் அறிவுடைப் பொருளா? அறிவுடைப் பொருள் என்பதற்கு என்ன சான்று? இருக்கமுடியாது ஆகவே, இது பொருந்தாப்பொருள்'' என்னும் பாவேந்தர் அறிவுக்கும் காலத்திற்கும் பொருந்தும் உரையினைப் பின்வருமாறு வரைந்துள்ளார்.

''அரசன் செய்யத்தக்க செயல்களை முறை தவறாகச் செய்வானாயின் (ஏரி, குளம் முதலிய) நீர்த்தேக்கங்கள் சீர்கேடு அடைதலாலே வானம் பெய்தலைத் தேங்குதல் செய்யமாட்டா''

ஏரி குளங்களைத் தூர் எடுத்து ஆழப் படுத்துவது, பெய்யும் மழையைத் தேக்குவதற்கேயாகும்.

தொண்டை நாட்டில் இன்றும் தேணியையும் கிணற்றையும் உறை என்று குறிப்பிடும் வழக்காற்றை ஆதாரமாகக் காட்டுகிறார் பாவேந்தர்.

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்**
**காவலன் காவான் எனின்**

இங்கு 'ஆபயன்- பசுக்களாற்கொள்ளும் பயன்' என்றும் ''அறுதொழில்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்'' எனக் கொண்டு பின்வருமாறு உரை கண்டார் பரிமேலழகர்.

''காத்தற்குரிய அரசன் உரிர்களைக் காவானாயின், அறனில்லாத அவனாட்டமுப் பசுக்களும் பால்குன்றும் அந்தணரும் நூல்களை மறந்து விடுவர்''

அக்காலச் சமயக் கோட்பாடுகளுக்கும் மக்கள் நம்பிக்கைக்கும் பொருந்துமாறு பரிமேலழகர் கண்ட இவ்வுரைக்கு மாறாக அறிவுக்கும் காலத்திற்கும் ஏற்புடைத்தான உரையினை வரைந்துள்ளார் பாரதிதாசனார்.

''அரசன் தான் காத்தற் தொழிலைச் செவ்வனம் செய்யான் எனின் ஆறுதுறையும் நடவா- நாட்டுக்கு ஆகிக்கொண்டு வந்த பயன் ஆகமலே அளவிற் குன்றிவிடும்''

''தமிழர் ஆண்ட நாளில் அரசியலில் ஆறு துறைகளாக வகுத்து, ஆட்சி நடத்தப்பட்டது. அறுதொழிலோர் என்பது உழவு, தொழில், வாணிபம், கல்வி, தச்சு, வரைவு ஆகிய ஆளு தொழிலுக்குரியோர் அவர்தாம் ஆறு அமைச்சர்.

ஆபயன், பசுவினது பயன் எனப்பொருள் கொள்கிறார் பரிமேலழகர். இவ்வாறு ஆறாம் வேற்றுமைத் தொகைப் பொருள் கொள்வதாயின் ஆப்பயன் என மெய்யெழுத்து மிகுந்து வந்திருக்க வேண்டும். ஆதலின் ஆபயன் (ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என விரியும்) வினைத்தொகை'' என்னும் பாரதிதாசனாரின் வாதம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. தமிழ் இலக்கணப்படி ஆபயனுக்குப் பரிமேலழகர் கொண்ட பொருள் தவறானதேயாம்.

கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை என்னும் அதிகாரங்களுக்குப் பாரதிதாசனார் வலிந்து பொருள் கொள்வது தெற்றெனத் தெளிவாகிறது, ஆயினும் சில குறள்களுக்கான உரைகளில் அவர் நுண்மாண்நுழைபுலம் வெளிப்படுகிறது. பரிமேலழகரை நிகர்த்த தமிழிலக்கண இலக்கியப் பெரும்புலமை உடையவரான பாரதிதாசனாரின் நூல் முழுமைக்குமான உரை கிடைத்திருக்குமானால் சில நூறு குறள்களுக்காவது அறிவுக்கும் காலத்திற்கும் பொருந்தும் உரையினைப் பெற்றிருப்போம் என்று நம்பலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயம் ! ஆனால் உண்மை !

# மெட்றாஸ் மஹாலின்

## உணவு வகைகள் அனைத்தும்

*மஹாருசி ! மஹாருசி !*

தமிழகத் தமிழர்களால் நகரில் நடாத்தப்படும் ஒரே உணவகம்

மெட்றாஸ் மஹால்



## *சைவத்தில்*

*மசாலாதோசை. பூரி. வடை அத்துடன்*

*15 கறி வகைகள் கொண்ட சைவ தாளி மற்றும் பல....*

## *அசைவத்தில்*

*தண்டூரி. கறி வகைகள் புரியாணி அசைவ தாளி மற்றும் பல.....*

உங்கள் குடும்ப வைபவங்களுக்கு உணவுத் தேவைகட்கு

**எம்மை அழையுங்கள்**

# *(416) 269-3666*

# Madras Mahal

Eglinton & Markham

**Tel: (416) 269-3666**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்காட்டும் தியான வாழ்வு

சதாசிவம் சேவியர்.

திருக்குறள் உலகப் பொதுமறை நூல். உலகமே இதை ஒப்புக்கொண்டுள்ளது. யாராலும் இதை மறுக்கவோ மறக்கவோ எதிர்க்கவோ முடியாது. உலகில் கிறிஸ்து மத பைபிளும் இந்து மத பகவத்கீதையும் எப்படியோ, அவற்றைப் போன்றே வள்ளுவன் திருக்குறளும் வையகம் எங்கும் மக்களால் விரும்பி ஏற்கப்பட்டு போற்றப்பட்டு வருகின்றது. பல நாடுகளிலும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. இதன் அவசியத்தை உணர்ந்து பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கலா சாலைகளிலும் பாட நூலாய்ப் போதிக்கப்படுகின்றது. அதனாலேயே ``வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் தொண்ட தமிழ் நாடு" என்று போற்றிப் பாடினான் அமரகவி சுப்பிரமணிய பாரதி. திருக்குறளால் தமிழ் நாடு, தமிழ்மொழி, தமிழர் சமுதாயமே பெருமையடைகின்றது, பிறநாட்டவரும் இதனைப் படித்து மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

இன்று ஆங்கிலேயருடைய ஆங்கில மொழி அரசிய லாலும், அதன் அதிகாரத்தினாலும் பொது மொழியாக உலகத்தில் பரவி உள்ளது. ஆனால் ஆழமான அரும்பெரும் கருத்துக்களையும் அத்தியாவசியமான மனித வாழ்க்கைக்குத் தேவையான வாழ்க்கைமுறைக்கு நல்வழிகாட்டியாகவும் அவ்வழிக்கு நல் ஒளி காட்டியாகவும் இரண்டு அடிகளில் (வரிகளில்)முப்பாலில் புகட்டி முழு உலகும் ஏற்கும் மறைநூலாக அரும்பெரும் பொது நூலாக ஏற்கக்கூடிய முறையில் அன்றைக்கே ஆக்கிப் படைத்தவன் வள்ளுவன்.

அந்நிய நாடுகளிலே பல கனிப் பொருட் சுரங்கங்கள் உள்ளன, ஆனால் இவை அரச உடமையாகவும் தனியார் உடமையாகவும் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ளது திருக்குறள் சுரங்கம். இது மாபெரும் அறிவுச்சுரங்கம். அன்றியும் இது உலகின் பொதுச் சுரங்கம். உலக மனிதர்களை சிறந்த மனிதர்களாக்கவும் சிறந்த பழக்கவழக்கம், பண்பாடுகள் உள்ளவர்களாகவும் இறை பக்தியில் உயர்ந்தவர்களாகவும் வாழ வள்ளுவன் வழிகாட்டி உலகிற்கு திருக்குறளை தந்துள்ளான்.

இவ்வரிய அறிவுச் சுரங்கமான திருக்குறளை சங்கப் புலவர்கள் மத்தியில் அரங்கேற்ற முடியாமல் அவர்களின் வாதாட்டத்திற்கும் மறைமுகமான பலவித எதிர்ப்புகளுக்கும் ஆளாகிய வள்ளுவன் மனம் நொந்து கண்கலங்கி இறைவனை வேண்டி தியானித்துக் கொண்டு சங்கப்புலவர் மத்தியில் சென்றான். அவன் வேண்டுகோளை ஏற்ற இறைவன் பொற் தாமரை தடாகத்தில் தாமரை மலரின் மேல் சங்கப் பலகை தானே உயர்ந்து வந்தது. அவன் பாடிய குறள் ஏட்டை ஏற்றுக் கொண்டது. அதே திருக்குறள் இன்று உலகிற்கு பொது மறையானது. அற்புதம், அதிசயம், ஆச்சரியம் இப்பாக்கியம் வள்ளுவனுக்கு கிடைத்தது. எதிரிகளின் வாய் அடைக்கப்பட்டது. இன்று உலகம் போற்றுகிறது.

மனிதன் எவ்வளவோ பண்புள்ள மனிதனானாலும் மெய். வாய். கண். மூக்கு. செவி என்ற ஐம்புலன்களினால் அவற்றின் போக்கால் மனம் கட்டவிழ்ந்து செல்லும்படி விட்டுவிடாமல் மன உறுதியுடன் நல்லானவற்றை நாடிச் சென்று சீரான, செம்மையான வாழ்வு வாழ்வதற்கு அறிவுறுத்தி அதையும் குறள் மூலம் வற்புறுத்தியுள்ளார் வள்ளுவர். எப்படியெனில்

``உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து" என்றும்

``பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்பதும் குறள்.

அதாவது மனித உடலில் பிறந்த உயிரானது அந்தப் பிறப்பையும் இனிமையாக அனுபவித்து அதனிலும் மேலான ஆனந்த வாழ்வையும் அடைவதற்கு முயல வேண்டும் என்றும் அறிவோடும் செறிவோடும் வாழ்ந்து ஆனந்தத்தை அடைவதே அறிவுபெற்ற மனிதர்களின் கடமை என்றும் சொல்லி ``அடக்கம் அமரருள் உய்க்கும்" என இதனையே குறள் வற்புறுத்துகின்றது. இப்படியான நல்ல அடக்கத்தை தர உதவுவது இறை தியானம். இதன் மூலம் ஆழ் மனத்தில் தெய்வீக எண்ணத்தை வலுவாக்கி ஒயிரின் உயிர்ப்பை வலுப்படுத்திக் கொண்டு பலன் காண்பதே மேலானது என்று அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

``சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்கே உலகு" என்று குறள் கூறுகின்றது.

இவற்றின் நன்மை தீமைகளை வகைப்படுத்திக் கொண்டு நன்மையானவற்றைக் கைக்கொண்டு தீமையானவற்றைத் தள்ளி தவிர்த்து வாழவேண்டும். இதை நன்கு தெரிந்து நடப்பவன்தான் உலகில் சிறந்த மனிதனாக வாழ்வான், ஆனால்இப்படி எளிதாக வாழ முடியுமா? மனம்தான் கட்டுப்படுமா? ஆசை அலைக்களிக்காதா? மற்றும் பல மனித உணர்வுகள் அடங்கிப் போகுமா? இப்படியான அநேக கேள்விகள் உள்ளத்தில் முளைவிடக் கூடும். அவற்றுக்கெல்லாம் ஒரே பதில் மனதை ஒரே நிலையில் நறுத்தி தியானிப்பது தான் என்பதையும் திடமாகவே குறள் காட்டுகின்றது.

``தனக்கு உவமை இல்லாதான் தாழ் சேர்ந்தார்க்க அல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது"

இதுவே குறள் தரும் முடிவான கருத்து. உலகில் மனிதன் நல்லவனாகவோ வல்லவனாகவே சிறந்த மனிதனாகவோ வாழ வேண்டுமானால் மன ஒருமைப்பாடு அவசியம் வேண்டும். அதே போன்று உயர்ந்த கெய்வ நிலையை அடைவதற்கும் மன ஒருமைப்பாடு தியானமும் அவசியம் வேண்டும். இவை இல்லாமல் மனித வாழ்வில் உயர்ச்சியே இல்லை.

இந்த ஒருமை நிலையையும் எல்லாம் இறைவன் செயலே என்னும் மெய் உணர்வையும் பெற வேண்டும் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப் புலவர் வள்ளுவர் பல ஒழுக்கங்களையும் நெறி முறைகளையும் வகுத்துச் சொல்லுகின்றார் உலகிற்கு.

அறநெறி என்பது செம்மையான நெறி. இந்த நெறியில் உலக மக்களாகிய நாம் நடப்போமானால் செம்மையான சிறந்த நல்வாழ்வு பெற்று வாழலாம் என்பது உறுதி.

இதற்க மாறானதே தீய நெறி. இதில் மனிதன் செல்வானேயாகில் பல தீமைகளையும் இகழ்ச்சிகளையும் தோல்விகளையும் அடைந்தே தீர வேண்டும். எனவே உலக மக்கள் ஒவ்வொருவரும் தனக்குத்தானே நல்வாழ்வையும் கெட்ட வாழ்வையும் உருவாக்கிக் கொள்ளுகின்றனர் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார் வள்ளுவர். இதற்கும் அவரவர் எண்ணமும் அறியாமை மயக்கங்களுமே காரணம் என்றும் இவற்றை முறைப்படுத்த சிறந்த ஞானமும் தெளிவும் தேவை என்பதையும் சொல்லி அதையும் நிறைவு செய்ய திருக்குறள் முயலுகின்றது என்பதையும் அறிய முடியும்.

"செறிவறிந்து சீரமை பயக்கும் அறிவறிந்து
ஆற்றில் அடங்கப் பெறின்"

என்று குறள் கூறுகின்றது. ஆனால் இவ்வடக்கம் அறியாமையின் நிழல் அல்ல. இது அறிவறிந்து கொள்ளும் அடக்கம் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக நன்றே பண்படுத்திய வயல் நிலத்தில் எவ்வாறு பயிர் செழித்து வளர்ந்து எப்படி நற்பயன் தருகின்றதோ அதைப் போன்று நம்மனதையும் நாம் பண்படுத்த வேண்டும். விலக்கிய மனக் குற்றங்களையும் அக் குற்றங்களுக்குத் தூண்டும் உணர்ச்சிகளையும் மக்கள் அடக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் சிறந்த துணையாக விளங்குவது தியானமே. தன் நலம் என்பது அன்பாக தானாகவே இதழவிழ்ந்து அருளாக மணம்பரப்ப வேண்டும். அருள் உள்ளம் பெரும்பாலும் இறைமை உள்ளத்தின் வெளிப்பாடானதே.

மனம் குவிந்து ஒரே சிந்தனையில் நிறுத்துவதுதான் தவமும் தியானமுக். இப்படி நிறுத்தும் ஆற்றல் மிகுந்தவனுக்க மரண பயமும் இல்லை மரணமும் இல்லை என்பதை

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு"

என்ற குறளால் உணர்த்தி இந்த நிலையை அடைவதற்கு ஒருவனுக்கு எந்த நிலை வேண்டுமோ அதையும் தருவது ஆழ் மனத் தியானமே. இதற்க மனத்தெளிவு வேண்டுமா? காமம், வெகுளி, மயக்கம் இவை நம்மைவிட்டு நீங்க வேண்டும். இது நீங்கினால் மாசற்ற ஞானம் தோன்றும். அப்போது பிறவிப் பிணியும் ஒழியும்.

ஆசை என்பது தீராது. தீராத ஆசை மனித மனதை பேயாய் அலைக்கும், ஒன்றை நாடும். அதை அடைந்ததும் இன்னொன்றை நாடும், அதுவும் முடிய மற்றொன்றை நாடும். உதாரணமாக விறகில் தீ சுவாலை விட்டு எரியும்போது விறகு போடப்போட சுவாலை விட்டே எரியும் அத்தன்மையானதே ஆசை. போதுமென்ற மனத்திருப்தி கொள்ளாது. இந்த ஆசையை அகற்றினால் சாந்தமான அமைதியான அடக்கமான மனநிலையைப் பெற்றுவிடலாம். நிலையான பேரின்ப வாழ்வையும் பெற்றுவிடலாம்.

ஆசையை விடுவது எப்படி? ஆசை அற்றவனாகிய இறைவனை உள்ளத்தில் நிறுத்தி இறுகப்பற்றிக் கொண்டால் ஆசை தானே நீங்கும் என்கின்றார் வள்ளுவர். உயர்ந்தோர் முன்னிலையில் இழிவான செயலை எவரும் செய்வதில்லை. எல்லாம் அவன் செயல் என்று நினைத்து மனதில் அமைதி அடைய பழகவேண்டுமே தவிர எதற்கும் நாங்களும் நீங்களும்தான் என்று வேதமைப்படுவதால் பயனில்லை.
வகுத்தான் ஒருவன் உளன் அவன் வகுத்தபடியேதான் எல்லாமே நிகழ்கின்றது அவனை எப்போதும் தியானியுங்கள் எல்லாம் நலமாகிவிடும் என்கிறார் வள்ளவர்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை இனி
அஞ்ச வருவதும் இல்லை"

என்னும் அப்பர் சுவாமிகளின் மன உறுதியும் தெளிவும் அனைவருக்கும் ஏற்படவேண்டும். இதற்கும் ஈஸ்வரர் தியானமே துணை செய்யும்.
சிறப்பான நல்வாழ்வுக்கு செல்வங்கள் உதவுகின்றன அந்த செல்வங்களுள் சிறந்த செல்வம் உள்ளதில் உள்ள நிறைவான ஊக்கமே என்கிறார் வள்ளுவர் ஊக்கத்தையே உள்ளம் என்றும் குறிப்பிடுகின்றார். "உள்ளம் உடைமை உடமை" என்பது திருக்குறள் கூறும் அறிவுரை.

உள்ளத்தில் ஊக்கம் பெருகவும் அதை ஊக்கமயமாக்கவும் உயிரின் உண்மையான சக்தியை உயர்ந்து அதை ஊக்கப்படுத்தும் சக்தியும் தியானத்திற்தே உண்டு.

"வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கிடக்கும்"

என்கிறது குறள். உள்ளதிதில் தெளிவும் வலிவும் சாந்தமும் திடநம்பிக்கையும் இருக்குமானால் எந்தத் துன்பமும் ஒருவனைப் பற்றாது என்பதே அதுவாம். அதற்கும் மனவலிமையைத் தருவது தியானமே.

அதற்கு உதாரணம் அரசனுடைய தோபத்துக்கு ஆழாகி தண்டனை பெற்ற திருநாவுக்கரசர் கட்டிப் பிணைக்கப்பட்ட கல்லோடு கடலுள் தாண்டு போகாமல் "சொற்றுணை வேதியன்" பதிகம் பாடி "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற ஆழ் நிலைத் தியானத்தோடு இருந்தபடியினாலேயே கல்லோடு மிதந்து கரை சேருகின்றார். தண்டனை பெற்று கழுகிலே ஏற்றப்பட்ட பட்டணத்தடிகள் அவ்விதமான தியானத்தினாலேயே உயிர் மீண்டு வருகின்றார். அதே பட்டணத்தடிகள் தாயின் உடலை பச்சை வாழை மடலில் கிடத்தி தீப்பற்றி எரியச் செய்கின்றார். இவை எல்லாம் ஆழ் நிலைத் தியானத்தின் சக்தியே. எனவே தியானம் உலக வாழ்வுக்கும் ஆன்ம வாழ்வுக்கம் அரும் மருந்தாகும். இரண்டிற்கும் தெய்வ தியானங்கள் நன்மை தருவனவேயாகும்.
"அறிவுடையான் உள்ளத்தில் உள்ளக் கெடும்" என்றும், அறிவுடையான் என்றது எல்லாம் ஈசன் செயல் என்று உணரும் மெய் அறிவினையே. இதனையே பார்க்கும் இடம் எங்கும் பரமன் காண் என்றார் பட்டணத்தடிகள். மன உறுதியால் அன்றி மக்களை உயர்த்துவதும் வாழ வைப்பதும் இது அறிவோடு கூடிய மனவுறுதியாகும்.

திருவள்ளுவரின் ஒவ்வொரு குறளும் ஒரு தியான சூத்திரம் போன்றதே. இவற்றை நன்கு பயின்று உணர்ந்ததாலேயே உலக மக்களும் திருக்குறளை அன்போடும் மதிப்போடும் ஏற்று வருகின்றனர். இப்படியான பேரின்பப் பெருநிலையிலேயே நிலைத்து வாழும் சான்றோரின் சிறப்பையே நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்துள் குறள் கூறுகின்றது. சுவையொளியூறோசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றமென்றைந்தின் வகை தெரிவான் என்பதும் இவர்களைத்தான் உலகம் இவர்களுக்கத்தான் என்கிறது குறள்.

''தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன்னயிர் எல்லாம் தொழும்'' என்றும்

''கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்றும் குறள் கூறுகின்றது. இதுவே பேரானந்த நிலை. தான் என்ற நினைவு அறவே நீங்க வேண்டும் தானும் உலகில் உள்ள யாவும் பரம்பொருளின் அம்சம் என்ற சமநிலையும் வேண்டும். இப்படியானவனை உலகில் மன்னுயிர்கள் எல்லாம் தொழுன்னும் என்கிறார் வள்ளுவர். இந்த நிலை ஆழ்மனத் தியானத்தினாலேயே அடைய முடியும்.

மனிதனுடைய மனத்தில் பலவிதமான மயக்கங்கள் உண்டு. இவற்றுள்ளும் நிலையில்லாததை நிலையுள்ளது என்று நம்பி ஏமாந்து அலைவது இதற்கு உதாரணம். கானல் நீர் ததும்ப (தாகம் தீர்க்க) மான் அலைவது போன்றதாகும். எனவே நிலையானதை அறிந்து இறுகப் பற்றிக் கொண்டால் ஆத்மாவிற்கு நன்மையே பெருகும். இதை அறிந்து அதன்மீது உறுதியான பற்றுப்பாசம் வைக்க தூண்டுவதும் தியானமே. வள்ளுவன் குறள் எல்லாமே இறைவன் தியானம் எனலாம். இத்தியானத்தால் உலகில் எதையும் அடையலாம் என்ற திடம் கொண்டே வள்ளுவர் இறைவனை முதலாகக் கொண்டு அதற்கு தன் மாதா பிதாவையே முன்வைத்து எப்பாலும் தப்பாமல்முப்பாலில் அடக்கி ஆயிரத்தி முன்னூற்றி முப்பது (1330) குறளில் முதற்குறளாக

"அகர முதல ஏழத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு"

என்று தன் தாயின் பெயலையும் (ஆதி) தந்தையின் பெயரையும் (பகவான்) என்று இணைத்து இறைவனை முதலாகக் காட்டி உள்ளார். எழுத்துக்கள் எல்லாமே அகரத்தை முதலாகக் கொண்டு இருப்பதைப் போலவே உலகில் உள்ள உயிகள் எல்லாமே இறைவனையே முதலாகக் கொண்டு உள்ளன.

திருக்குறள் தனி மனிதனுக்கென்றோ, தனி ஒரு சமூகத்திற்கென்றோ, தனி ஒரு நாட்டுக்கென்றோ, தனிஒரு மதத்திற்கென்றோ உரிமை பாராட்டாமல் பொதுவாகவே உலகம் பூராகவும் ஒன்று என்ற அடிப்படையில் ''ஒன்றே குலம் ஒருவன தேவன்'' என்ற கொள்கையில் யாவையும் இறைவனுக்கே சொந்தமாக்கி அவற்றை உலக மக்களே அனுபவிக்க அமைத்தார் திருக்குறளை.

உலக மாயையில் உளன்று நலியும் மனிதர்களை வள்ளுவர் காட்டும் தியானம் உயர்ந்த தேவநிலைக்கும் உயர்த்தும் என்பதுமன்றி உலகில்மனித வாழ்க்கைக்க எதுவெல்லாம் வேண்டுமோ அவையாவையும் குறள் மூலம் கற்றறிந்து வாழ முடியும் என்பதையும் உறுதியாய் அறிய முடியும்.

இப்படியான திருக்குறளுக்கு பரிமேலழகர், மணக்குறவர் இவர்களோடு இன்னும் பல அறிஞர்கள் காலத்திற்குக் காலம் உரை எழுதி உள்ளார்கள். ஆனால் பரிமேலழகருடைய உரையே அதிசிறந்ததாக உலகம் போற்றுகின்றது. இத்தகைய திருக்குறளை இளமையிலேயே தமிழ் சிறுவர்கள் கற்றுப் பயன் அடைய வெண்டுமென்றும் அதற்க வேண்டிய நல்வழிகளை பெற்றோரும் கைக்கொள்ள வேண்டுமென்றும் தாழ்மையாகக் கேட்கின்றேன்.

குறள் காட்டும் தியானத்தினால் வாழ்வு செழிக்கும், செய்யும் செயல்கள் எல்லாம் வெற்றி பெறும், குடும்பத்தில் அமைதி, மகிழ்ச்சி, இன்பம் பெருகும். துன்பம், துயரம், நோய், கவலை யாவுமே விலகும். எண்ணிய நல்ல எண்ணங்கள் எல்லாம் எண்ணியபடியே சித்தியாகும். மன உறுதி, ஊக்கம், உற்சாகம், மனத்துணிவு யாவுமே பெற முடியும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக நம்மை உயர்ந்த தெய்வீக நிலைக்கு உயர்த்தும் ஆற்றலைத் தருவது ஆழ் மனத் தியானமே.

பெரும் ஞானிகளும் ரிஷிகளும் யோகிகளும் அறிவாளிகளும் அரசர்களும் ஏன் பகவான் ராம கிருஷ்ண பரமகம்சர், அன்னை சாரதாதேவி அம்மையார், சுவாமி விவேகானந்தர், பகவான் ரமணமகரிஷி, பகவான் அரவிந்தர், இன்று பகவான் யோகிராம் சுரத்குமார், பகவான் சத்தியசாயிபாபா, ஈழநாட்டு யோகி யோகர்சுவாமி யாவரும் நம் உலகிற்குக் காட்டித்தந்த வழி தியானமே. இதற்கு வேண்டியது திருக்குறளே.

எப்பொருள் எத்தன்மைத்தா யாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

மெய்பொருள்தான் சத்தியம் ஆத்ம ஞானத்தில் அது மேன்மையான நிலையை அடைவதற்கு உதவுகின்றது. உலகம் நிலைஅற்றது. உலகில் உள்ள பொருள் யாவுமே இறைவனால் நிறைந்துள்ளன அவனே பொருளாக உள்ளான். அவனே எல்லாவற்றுள்ளும் நிறைந்துள்ளான் என்ற மன உறுதி கொண்டு பேராசைப்படாமல் பக்தியோடு கூடிய தியாக புத்தியோடு அவைகளைப் பயன்படுத்த வேண்டும். அவை எந்த ஒரு தனிமனிதனுக்கும் சொந்தமானவை அல்ல. எல்லாம் இறைவனுக்கே சொந்தமானவை. இவையே குறளின் உறுதி. நிறைந்த கல்வி நல்லொழுக்கம் உடைய சான்றோர்களின் பெருமையை உலகில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மந்திர மொழிகளே காட்டிவிடும்.

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலைத்து
மறைமொழி காட்டிவிடும்''

மேலும் நமது மனவலிமைக்கும் மேலாக நம்மை தெய்வீக நிலைக்கு உயர்த்தும் ஆற்றலைத் தருவது ஆழ்ந்த தியானமே.இவ்வித தியானத்தின் சிறப்புக்கள் எவை? அவற்றின் வழிமுறைகள் என்ன? தியானத்தினால் உண்டாகும் பயன்கள் என்ன? பலன் காண்பது எப்படி? இவற்றுக்குத் தவறாது குறளைப் படியுங்கள். ஆன்ம உயர்ச்சியே உலக வாழ்வின் உன்னத உயர்ச்சிக்கும் பிற உயர்ச்சிகளுக்கும் அருமருந்தாகும். இவற்றை உணர்ந்தே

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் உலகிற்கு உறுத்திஉள்ளார். எல்லோரும் படித்து இறைவனின் இன்னருளையும் பெற்று வாழ இறைஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்டுள்ளது

# OPTIMART

**Bright Optical** Opticians



**ஒரு மணிநேரத்தில் கண் வைத்தியரைச் சந்தித்து உங்கள் கண்ணாடியைப் பெற்றுக் கொள்ளலாம்**

முழுக் கண்ணாடி விழி வில்லை (C/H)
உங்கள் கண்ணின் நிறங்களை மாற்றக்கூடிய விழி வில்லைகளை நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்


Eye glasses
Contact Lenses
We have excellent prices on colour contact lenses to change the colour of your eyes

**Served by Licensed Opticians**
**Pleace Call:**
**Mr. Ranjan or Mrs. Mano Ranjan**
**(416) 690-4649**
**(905) 471-8067**

3150 மார்க்கம் - எக்லிங்டன் சந்திப்பில் புதிய கிளை விரைவில்

## 294 Main Street (at Danforth)
## Professional Bldg.,
## Toronto, Ont. M4C 4X5

Mon-Fri 10am-8pm, Sat 10am-5pm
Sunday Closed




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "திருக்குறள்"- உலகப் பொது நூல்

மூர்த்தி செல்லத்துரை

பகுத்தறிவோடு மனித இனத்தைப் படைத்த பகவான் அத்துடன் திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை. இம்மண்ணுலகின் கண்ணே மனித இனம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வண்ணம் ஞானிகள், முனிவர்கள், குருமார்கள், சமய குரவர்கள், பாவலவர்கள் போன்ற வழிகாட்டிகளையும் படைத்தான். சீரிய வாழ்க்கை முறைக்கான அடிப்படைக் கோட்பாடுகள், விதிமுறைகள், குறிக்கோள்கள், வாழ்வின் பெறுபேறுகள், பிறப்பெனும் ஆழியிலிருந்து கரைசேரும் வழி வகைகள் ஆகியவற்றை உள்ளடக்கி அந்த மகான்கள் தமது ஞானதிருஷ்டியினால் வேதங்கள், உபநிடதங்கள் சமய நெறிகள், திருமறைகள் ஆகியவற்றை ஆக்கினார்கள். இவை யாவும் அரும் பெரும் பொக்கிஷங்களாக, அற்புதத் தத்துவங்களாக தமிழர்களாகிய நம்மவர்களால் மாத்திரமன்றி வேற்றினத்தவர்களாலும் பேணிப் பாதுகாத்து வரப்படுகின்றன.

மேற்படி மகான்களுள் ஒருவராக இந்திய மண்ணில் அவதரித்த திருவள்ளுவரால் பாடப்பட்ட திருக் குறளும் அத்தகைய பொக்கிஷங்களுள் அருமையானதொன்றாகும். நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்றெல்லாம் பல் வேறு பெயர்களினால் அழைக்கப்படும் பெரும் பேறுபெற்றவர் வள்ளுவப் பெருமான். இந்து மதத்தவரான திருவள்ளுவரினால் எழுதப்பட்டு இந்துக்களினால் வேத நூலெனப் போற்றப்பட்டு வரும் திருக்குறளானது, எம்மதத்தினருக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமான நூல் என்ற தனிச்சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது. முப்பானூல், உத்தர வேதம், தெய்வ நூல், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை என்றெல்லாம் வெவ்வேறு பெயர்களில் திருக்குறள் மிளிர்கின்றது.

மாபெரும் கருத்துக்களையும், தத்துவங்களையும் ஈரடிகளில் இரத்தினச் சுரக்கமாகப் பாடி உள்ளமை திருவள்ளுவரின் அபார திறமைக்குச் சான்றாகும். "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என வள்ளுவரின் சகோதரியான ஔவைப் பிராட்டியும், கடுகைத் இடைக்காடரும் திருக்குறளின் திறனை வியந்து பாடியுள்ளனர்.

கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கத்தோலிக்கப் பாதிரிமார்கள் இந்தியாவுக்கு வருகை தந்தார்கள். மதத்தைப் பரப்புவதற்குப் பாஷை தடையாக இருந்தது. இதனால் தமிழ் மக்களுக்கு கிறிஸ்தவ மதத்தை போதிப்பதற்காக பாதிரிமார் தமிழைக் கற்க முற்பட்டார்கள். காலப்போக்கில் இன்பத் தமிழின் இனிமையை உணர்ந்து பிரசங்க நோக்கத்துக்காக மாத்திரமன்றி உவப்பிலா ஆனந்தமான தேனிசை சொரியும் செந்தமிழைத் தொடர்ந்து பிரியமுடன் கற்றார்கள். தமிழ் மொழிக்கே அணிகலனாகத் திகழும் திருக்குறளையும் கற்றார்கள். தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெற வெண்டுமென்ற நோக்குடன் அதனை முதலில் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்கள்.

இவ்வாறு கத்தோலிக்க மதத்தைப் போதிப்பதற்காக இந்தியாவிலே நாற்பதாண்டுகாலம் வாழ்ந்து தமிழையும் நன்றாகக் கற்றறிந்த கொன்ஸரன்ரியஸ் பெஷ்ஷி **(Constantius Beschi)** என்பவர் திருக்குறளின் முதலிரு பாகங்களையும் முதன் முதலாக லத்தீன் பாஷையில் மொழிபெயர்த்தார். கையெழுத்துப் பிரதியாக இருந்த இம்மொழி பெயர்ப்பினைப் பல்லாண்டுகளின் பின் வண.ஜி. யு. போப் **(Rev. G.U. Pope)** என்பவர் நூல் வடிவில் பதிப்பித்தார். லத்தீன் மொழியிலான இந்நூலைப் படித்த ஜெர்மனியரான கலாநிதி குறோள் **(Dr. Graul)** என்பவர் அதனை டொச் மொழியில் மொழி பெயர்த்தார்.

ஒரு பிரெஞ் எழுத்தாளர் 1767 ஆம் ஆண்டளவில் திருக்குறளை பிரெஞ் மொழியில் மொழி பெயர்த்ததாக பாரிஸிலுள்ள "பிபிலியோத்திக் நஷியோனல்" **(Bibiliotheque National)** என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன் பின்னர் எம்.ஆரியெல் **(M. Ariel)** எம். துதுமாஸ்ற் **(M.Dedumast)**, எம். லமாய்றெஸ் **(M. Lamairesse)** ஆகியோர் திருக்குறளை பிரெஞ் மொழியில் மொழி பெயர்த்தனர்.

திருக்குறளை 1820 ஆம் ஆண்டுக்கும் 1886 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எவ் டபிள்யூ. எலிஸ்( F. W. Ellis), டபிள்யூ எச். ட்றூ (W.H. Drew) ஈ. யே. றொபின்சன் ( E.J. Robinson), ஜே. லாசரஸ் (J. Lazarus) , வண. ஜி.யு. போப் (G.U. Pope) ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். இவ்வாறு திருக்குறள் லத்தீன், ஆங்கிலம், பிரெஞ், றஷ்ய கிந்தி ஆகிய மொழிகளுட்பட மொத்தம் எண்பது பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. .இதன்மூலம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட முதலாவது தமிழ் நூலென்ற பெருமை திருக்குறளையே சாரும்.

திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் டபிள்யூ. எச். ட்றூவும் ராமானுஜ கவிராயரும் இணைந்து மொழி பெயர்த்த நூல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. ஆனால் அவர்கள் முழு நூலையும் மொழி பெயர்ப்புச் செய்யவில்லை. நூற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தி மூன்று அதிகாரங்களுள் அறுபத்தி மூன்று அதிகாரங்கள் வரையுமே அவர்கள் மொழி பெயர்த்திருந்தனர். கலாநிதி போப் அவர்களால் முழுமையாக மொழி பெயர்க்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பே இன்றுவரை சிறந்த நூலாகத் திகழ்கின்றது. தமிழ், ஆங்கிலம், லத்தீன் ஆகிய மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற ஐயர் என அழைக்கப்பட்டு வந்த வா. வே. சுப்பிரமணிய ஐயர் 1915 ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

புலவர்கள், கவிஞர்கள் ஆகியோர் ஒரு கருத்தினை மனத்தில் வைத்துக் கொண்டு இயற்றும் நூல்களுக்கு வாசகர்களும், உரை எழுதுவோரும் வெவ்வேறு கருத்துக்களை கண்டு பிடிப்பதும் உண்டு. இதனால் அவற்றை ஆக்கியோர் பெருமைக் குரியவர்கள் ஆகின்றனர். வெண்பா நடையில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும் இத்ததைய பெருமைக்குரியதாகத் திகழ்கின்றது. உதாரணமாக முதலாவது திருக்குறளை ஆராய்ந்து பார்ப்போம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்களுக் கெல்லாம் முதலெழுத்தாக 'அ' கர எழுத்து இருப்பது போல், இந்த உலகிலுள்ள உயிர்கள் அனைத்துக்கும் முதலானவன் (ஆதியானவன்) இறைவன் (பகவான்) என்பதே பரிமேலழகரின் உரையாகும். திருக்குறளுக்குப் பலபேர் தமிழில் உரை எழுதியுள்ள போதிலும் பரிமேலழகரின் உரையே சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

கடவுள் இல்லையென்ற கம்யூனிஸக் கொள்கையினை உடைய ரஷ்யர்கள் இதே குறளுக்குத் தங்களது கொள்கைக் கேற்ப எவ்வாறு பொருள் கொள்கிறார்கள் என்பதனைப் பார்ப்போம். ஏழத்துக்களுக்கெல்லாம் **"A"** முதலெழுத்தாக இருப்பது போன்று மண்ணிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் அவற்றின் பெற்றோரே இறைவன், ஏனெனில் ஆதி பகவன் என்பன திருவள்ளுவரின் தாய், தந்தையரின் பெயர்களாகும். எனவே தாய் தந்தையரே கடவுள் என்றே திருவள்ளுவர் பாடியுள்ளதாக அவர்கள் பொருள் கொள்கிறார்கள். அவர்களது கூற்று தவறென்று சொல்வதற்கில்லை. இத்தன்மையின் மூலம் திருக்குறளானது உலகப் பொது நூல் என்ற அந்தஸ்த்துக்கு உயர்ந்து நிற்கின்றது.

திருவள்ளுவர் பெரும் கல்விமானோ பேரறிஞரோ அல்ல. தாழ்த்தப்பட்ட குலத்திலே பிறந்து நெசவுத் தொழிலை செய்து வந்த மிகச் சாதாரண மனிதர். ஆனால் அன்றும், இன்றும், என்றுமே போற்றுதலுக் குரியவராகத் திகழும் அவருக்கு ஒன்றரை வரியினுள்ளே ஒராயிரம் பொருளை வைத்து குறளைப் படைக்கும் சக்தி எப்படி வந்தது? நிச்சயமாக அது தெய்வீகச் சக்தியே. அதனாலேயே அவர் தெய்வப் புலவரெனவும் அழைக்கப்படுகிறார். ஒன்றரை வரியினுள் ஒராயிரம் பொருளை வைத்துப் பாடியதோடு ஒசை நயத்துடனும் இலக்கிய இலக்கண சுவையுடனும் பாடியள்ளமை அவரது பேராற்றலாகும்.

உலகத்தவர் நல்வாழ்வுக்கு வேண்டும் அறிவுரைகளை வழங்கும் திருவள்ளுவரின் ஆற்றல் அளப்பரியது. அதனாலேயே அவர் தெய்வப் புலவரெனவும் அழைக்கப்படுகின்றார். ஒன்றே முக்கால் வரியினுள் ஓராயிரம் பொருளை வைத்துப் பாடியதோடு ஓசை நயத்துடனும் இலக்கிய இலக்கண சுவையுடனும் பாடியுள்ளமை அவரது பேராற்றலாகும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பாக்கு
துப்பாய தூஉம் மழை

சிற்றின்பத்துக்கும் பேரின்பத்துக்கும் சமத்துவமான இடமளிப்பது இந்து சமயமொன்றே. இல்லறஇன்பமான சிற்றின்பத்தை அனுபவித்து ஆசை அறுவித்த பின்னரே பேரின்பத்தை நோக்கித் துறவு கொள்ள வேண்டுமென்பது இந்து சமயக் கோட்பாடு. அக்கோட்பாட்டினை வள்ளுவர் இல்லறவியலிலே முறையாக விளக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. சிற்றின்ப வாழ்வில் இணையும் இளம் தம்பதியினருக்கு அவர் கூறும் அறிவுரை யாது, ஒருவர் மீதொருவர் உண்மையான அன்பு கொண்டு பழகுவீர்களேயானால் அவர்கள் பண்புடனும், பயன்பாட்டுடனும் வாழ்ந்திடுவர் என்பதை பின்வரும் குறளின் மூலம் அறியலாம்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

இக்குறளை நம்மில் பெரும்பாலானோர் திருமண அழைப்பிதழில் அச்சுப் பதிப்பதோடு மாத்திரம் நின்றுவிடுகின்றோமே தவிர அதன் பொருளை உணர்ந்து அதன்படி வாழ்வதில்லை. அவர் கூறிய கூற்றினைக் கடைப்பிடித்து நாம் வாழ்வோமேயானால் நமக்கென்ன பயன் கிடைக்கும் என்பதனையும் வள்ளுவர் பாடிவைத்துள்ளார். உற்றார் உறவினர்களிடத்தே அன்பு செலுத்தி, கோடி புண்ணியமியற்றி, தானதர்மம் செய்து இவ்வையகத்தே முறைப்படி வாழ்ந்து வருவோமேயானால் வானகத்தே பேரின்பப் பெருவாழ்வு வாழும் பெருமானுக்கு அருகேயமரும் பேறு பெறுவோமென்கிறார் பின்வரும் குறள் மூலம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

மன்னயிரைத் தன்னுயிர் போற கருதி அரசாட்சி செய்பவனே மன்னாதிமன்னன் என்பது மாமுனிவர்களது வாக்கு. இதே கருத்தினை வள்ளுவப் பெருந்தகையும், மக்களின் துன்பங்களை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்தம் துயர் துடைக்கும் வண்ணம் செங்கோலாட்சி செலுத்தும் மன்னனின் பாதாரவிந்தங்களைப் பாரே பற்றி நிற்கும் என பின்வரும் குறள் மூலம் விளக்கியுள்ளார்

**குடிதழீகிக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழிஇ நிற்கும் உலகு**

ஆனால் இன்று வள்ளுவரின் வாக்குக்கு நேர் எதிர்மாறாகவே ஆட்சி நடைபெற்று வருகின்றது. மன்னராட்சியிலும் மக்களாட்சியே மகோன்னத மானதென நினைத்து மக்கள், ஆட்சியினை மாற்றினார்கள். மக்களால், மக்களுக்காக, மக்களது ஆட்சியே ஜனநாயக ஆட்சியென அர்த்தமும் கற்பித்தார்கள். மக்களின் விருப்பிற்கிணங்க அவர்களது வாக்குப் பலத்தைப் பெற்று ஆட்சி பீடமேறும் ஜனநாயகத் தலைவர்கள் இன்று வள்ளுவர் வாக்குக் கிணங்க குடிதழீஇக் கோலோச்சுகிறார்களா? ஆட்சி பீடமேறிய மறுகணமே அவர்கள் மக்களை மறந்து விடுகிறார்கள். தமது அடிதழீஇ நிற்கும் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரமே அவர்கள் செங்கோ லோச்சுகிறார்கள். ஏனைய பெரும்பாலான மக்களுக்கு கொடுங்கோலோச்சப்படுகிறது. இதனால் மக்கள் மத்தியில் எரிச்சல், பொறாமை, கோபம் போன்ற துர்க் குணங்கள் தூண்டிவிடப்படுகின்றன.

மேற்படி குறளிலே காணப்படும் மன்னன் என்ற சொல்லின் முற்பகுதியான "மன்' என்பதும் "மான்' என்பதும் மனிதர்களை குறிக்கும் சொற்களாகும். ஆங்கிலத்தில் கூட "மான்' (man) என்ற சொற்பதம் மனிதரையே குறிப்பதாகும். 'மன்' என்ற அடிச்சொல்லில் இருந்து மனிதன் என்ற சொல் பிறந்தது. 'மான்' என்ற அடிச்சொல்லிலிருந்து மானிடன், மானுடம் ஆகிய சொற்கள் பிறந்தன. மன்னன் (மன்+அன்) என்பது மனித இனத்தின் தலைவன் எனப் பொருள்படும். எனவே மன்னனானவன் என்றுமே மக்களைப் பிரிந்து வாழாது மக்களோடு மக்களாக வாழ வேண்டிய கடமைப் பாடுடையவன். ஆனால் இன்றைய ஆட்சியாளர் பெரும்பாலானோர் எப்பொழுதுமே மக்களைப் பிரிந்தே வாழ்ந்து வருகின்றனர். அவ்வப்போது மக்கள் மத்தியில் தோன்ற வேண்டி ஏற்படும் போது தம்மை மக்கள் கொன்று விடுவார்களோ என்ற பயத்தில் பாதுகாப்புக் கவசங்களுடனும், ஆயத மேந்திய பாதுகாவலருடனும் செல்வது கண்கூடு. அவர்களுக்கேன் இந்த அவலநிலை என்பதனையும் வள்ளுவர் பின்வரும் குறள் மூலம் துல்லியமாக விளக்குகின்றார்.

**வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்**

மக்கள் அச்சத்தின் காரணமாக வெருண்டு ஓடுமளவுக்கு குண்டுகளை வீசி மக்களைக் கொன்றும் மனைகள் கல்விச்சாலைகள் ஆலயங்கள் அனைத்தையும் குண்டுகள் வீசி அழித்தும் அட்டூழியம் புரியும் கொடுங்கோல் மன்னர்கள் நிச்சயமாக விரக்தியுறும் மக்களினால் கொன்றழிக்கப்படுவர் என்பதுவே இக்குறளின் பொருள். இதனையே இரத்தினச் சுருக்கமாக அரசியல்பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என கொல்லப்பட்டுள்ளது. நீதி வழுவாது மக்கள் மனம் கோணாது செங்கோலாட்சி செலுத்த வேண்டிய மன்னன் தவறான வழியில் கொடுங்கோலாட்சி செய்வானே ஆகில் அறமே யெமனாக வந்து அவனைக் கொன்றுவிடும்.

மன்னனும் சரி மக்களும் சரி கல்வி அறிவு உடையவர்களாக இருந்தால்தான் நாடே சிறக்கும். கல்வியை கண்ணுக்கு ஒப்புவமையாகக் கூறியுள்ளார் வள்ளுவர். கண்களற்றோர் எதனையுமே கண்டுகளிக்க முடியாது குருட்டு வாழ்க்கை வாழ்வது போல் கல்வியறிவு இல்லாதோரும் ஞானக் கண்களினால் அதாவது அறிவுக் கண்களால் எதையுமே அறிந்து ஆனந்தம் அடைய முடியாது அறிவுச் சூனியங்களாக வாழ்வார்கள். கல்வி அறிவுடையோரே கண்களை உடையோர். கல்வி அறிவற்றோரது முகத்திலிருப்பது கண்களல்ல அவை வெறும் புண்களே என பின்வரும் குறள் மூலம் இனிமையான சொல்லாட்சியில் வர்ணித்துள்ளார்.

**கண்ணுடையார் என்பவர் கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்**

இதன் காரணமாகவே திருக்குறளைக் கற்றுணர்ந்த பல்வேறு மொழியியலாளர்களும் அதனைத் தமது கண்களாகக்கருதி அந்தக் கண்களினூடாக தமதின மக்களும் காணுதற்கரிய காட்சிகளை கண்டு களிப்புற வேண்டுமென்ற வேணவாவுடன் அதனை மொமி பெயர்ப்பு செய்துள்ளனர் என்பது மிகையாகா.
திருக்குறளின் புகழ் திக்கெட்டும் தொடர்ந்து திருநடனம் புரிய அரிய முயற்சி எடுத்திடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# துரித பணமாற்றுச் சேவை

## ‘கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா?’

**1958 – 1998**

**41 ஆண்டுகள் வர்த்தகத் துறையில் முன்னோடிகள்**

எட்டு வருடங்கள் கனடாவாழ் தமிழ் மக்களின் மனதில் நம்பிக்கை, நாணயம் என்ற நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்




தொலை பேசித் தொடர்புகளுக்கு

**416-267-8221**




## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

## M. Kasippillai & Sons Inc.

3228 Eglinton Ave. East Suite #3
Scarborough, Ont. M1J 2H6
**Tel: (416) 267-8221**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் தரும் அறிவியல் சிந்தனைகள்.

எஸ் . பத்மநாதன் . B. A Hons; Dip in Ed.

அறிவியல் நூலாக கருதப்படும் திருக்குறளை மிக ஊன்றிப் படிக்கும்போது அது ஒரு குன்றாத அறிவியல் சிந்தனை வடிவம் என்பது புலனாகும். ஒவ்வொரு குறளையும் ஒவ்வொரு அறிவியல் சிந்தனை என்று கருதிக்கொண்டு படிப்போமானால் அங்கு ஆழமான பொருள் இழையோடுவதினை அவதானிக்கலாம். ஒவ்வொரு குறளும். சிந்தனைக்கு விருந்தளிப்பது மட்டுமல்ல படிப்பவர்களுக்கெல்லாம் புதுப்புது அர்த்தங்களையும் வழங்கக் கூடியது. எந்த ஒரு அறிவியல் அணுகு முறைக்கும் (Scientific Approach) வளைந்து கொடுப்பதனலேயே இது, காலத்தினை வென்று இன்று வரை நிலைத்துள்ளது. திருக்குறள் காலத்தால் பழையது எனினும் அது உணர்த்தும் பாடம் புதியதாகும்.

உலகின் எந்த ஒரு மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழுக்கு இருக்குமாயின் எந்த ஒரு நூலுக்கும் இல்லாத சிறப்பு திருக்குறளுக்கு உண்டு. மேலைத் தேசத்தவர் விஞ்ஞானத்தின் அடிப்படைகள் பற்றி தெரிந்திருப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிவியலில் தமிழர் தெளிவு பெற்றிருந்தமைக்கு பல ஆதாரங்கள் குறளில் உண்டு.

``அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்'' என்ற கருத்தும் ``கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்'' என்ற கூற்றும் குறளின் ஆழமான பொருளை நிரூபிக்கின்றன. பொய்யா மொழி என்று குறளையும் தெய்வப்புலவர் என்று வள்ளுவரையும் உலகம் கொண்டாடுவதற்கு காரணம் குறளின் நிலைபேற்றுத் தன்மையாகும்.

குறளின் வடிவம் ஏனைய கவிதைகளை விட முற்றிலும் வேறுபட்டதாகும். இரண்டு அடிகளில் முழுமையான கருத்தினை வெளியிடும் குறள் இப்பா வடிவத்திற்கு உரியது. தர்க்க ரீதியாக கருத்துக் களை வெளியிடும் திறன் குறள் போல வேறு எந்த இலக்கிய வடிவத்திற்கும் இல்லை. சுருங்கிய அடிதனில் விரிந்த பொருளை அறுதியிட்டு கூறும் இப் பாவடிவம் தமிழுக்குப் புதியது, இன்றும் நிலைபேறுடையது.

திருக்குறளில் முழு வாழ்வு பற்றி சிந்திக்கப் பட்டுள்ளது; தனி மனிதனின் கடமைகள் சிந்திக்கப் பட்டுள்ளன, தமிழ்மரபு அடிப்படையாக பேணப்பட்டுள் ளது. முப்பொருள் பற்றியும், முழுமையான உலகம் பற்றியும் சிந்திக்கப் பட்டுள்ளது. எனினும் இதனுடா கவே பல அறிவியல் சிந்தனைகளும் விரவி வந்துள் ளன. தற்போதைய அறிவியல் போல் நுணுக்கமாண முடிவுகள் கூறப்படவில்லை எனினும் அதி உயர்ந்த எண்ணக் கருத்துக்கள் இரண்டாயிரம் வருடங்க ளுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ளதை வியக்காமல் இருக்கமுடியாது.

திருக்குறள் தந்த அறிவியல் சிந்தனைபோல் தமிழில் வேறு எந்த இலக்கியமும் தரவில்லை. உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட் டுள்ள திருக்குறள் எந்த மதத்திற்கும் உரியதல்ல. ஆனால், பகுத்தறிவு சிந்தனைகளை படரவிட்டுள் ளது. அறிவியல், உளவியல், உலகியல், தத்துவம், புவியியல் போன்ற பல கூறுகள் இதில் சிந்திக்கபட் டுள்ளன. சிந்திக்கப்படாத பகுதிகளே இல்லை என் னும் அளவுக்கு இதன் முழுமை உலகளாவியது. இதனால்தான் `` வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று மகாகவி பாரதி கூறுகின்றார்.

பிரபஞ்சவியல் (Cosmology) வானவியல் (Astronomy) மரபியல் (Genetics) நன்மக்கட் பேற்றியல் (Eugenics) உயிரொழுங்கியல் (Bionomy) உயிராதாரம் (Bionomics) உளவியல் (Psychology) சூழலியல் (Ecology) போன்ற பல அறிவியல் கூறுகள் குறளில் பரவலாக விரவியுள் ளன.

அறிவியலில் முக்கிய கருத்தான உண்மையை கண் டறிதல் பற்றி திருக்குறளில் பல சான்றாதாரங்கள் உள்ளன அதாவது பொருட்களின் யதார்த்தங்களை கண்டறியும் முனைப்பு இதுவாகும்.

சுடச் சுடரும் பொன்போல் ஒளிர்விடும் துன்பம்
சுடச் சுடரும் நோற்கிற் பவர்க்கு. (குறள் 262)

என்ற குறளை உதாரணமாக கொண்டால் பொன்னை சூடாக்க சூடாக்க ஒளி விடும் தன்மை யை கூறியுள்ளார். அதாவது மண்ணோடும் கல்லோ டும் கலந்திருக்கும் தங்கத்தை மண் ஒட்டில் வைத்து நெருப்பினால் காய்ச்சினால் தங்கத்தில் மாற்று ஏறும். இதனையே பத்தரை மாற்று தங்கம், பசும் பொன், தரமான தங்கம், என்றெல்லம் அழைக்கிறோம்.

துன்பத்தினை தாங்கத் தாங்க எமது நோன்பு கூடும் என்பது பற்றி கூறவந்தவேளையில் இவ் உதார ணத்தினை காட்டியுள்ளார். விஞ்ஞானத் தேடலில் ஈடுபடும்போதுதான் அறிவு ஏற்படும என்பதற்கு வள் ளுவரின் பல உதாரணங்கள் உள்ளன. வள்ளுவரின் சிந்தனையில் புலக்காட்சி என்னும் அறிவியல் அடிப்படை பல சந்தர்ப்பங்களில் வருகிறது. இதனை ஒப்புரவு அறிதல் என்ற அதிகாரத்தில் காணமுடிகின் றது.

ஊருணி நீர் நிறைந்தற்றே உலக
பேரறிவாளன் திரு ( குறள் 215)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளில் நீரினை மற்றவர்க்கு வழங்கும் ஊற்று போன்று அறிவுள்ளவன் தன் பணத்தினை மற்றவர்க்கு வழங்குவான் என்கிறார். சமூகத்தின் ஒப்புரவினை துல்லியமாக சிந்தித்தவர் வள்ளுவர். இவ்வாறான பல உதாராணங்களை திருக்குறளில் காண முடிகின்றது.

அறிவியலில் உள்ள கட்டமைப்பு பொதுவாக பிரச்சினைகள் (Problems) கோட்பாடுகள் (Hypotheses) வழிமுறை காணுதல் (Solutions) என்னும் படி முறைகளை கொண்டுள்ளது. முக்கிய நோக்கம் பிரச்சினைகளை விடுவித்தலே யாகும். ஒவ்வொரு பிரச்சினையும் விடுவிக்கப் படும்போது அறிவியல் பிறக்கின்றது. இல்வாழ்க்கை, புகழ் அன்புடமை, வாழ்க்கைத்துணை நலம், ஒப்புரவு அறிதல் போன்ற பல அதிகாரங்களில் பிரச்சினைகள் விடுவிக்கப் படுகின்றன. உதாரணமாக.

அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் ( குறள் 71)

என்ற குறளில் அன்பு கொண்டு பொங்கும் மனக் கதவுக்கு தாழ்பாள் இல்லை என்று கூறி வரைவிலக் கண மூல கோட்பாடுகளை உருவாக்குகின்ற சிறப்பும் உண்டு. கேள்விகள், தாக்க எண்ணங்கள், வரைவிலக்கணங்கள்யாவும் பல்வேறு அறிவியல் வளர்ச்சியை தூண்டுவனவாக அமைந்துள்ளன.

அறிவியலில் பொதுவாக எந்த ஒரு விடயத்தினையும் காரணகாரிய முறை (Cause and effect ) மூலம் சிந்திக்கிறோம். அதாவது எந்த ஒரு விளைவிற்கும் முன்பாக ஒரு காரணம் உள்ளது என்பதே அறிவியில் அடிப்படையாகும்.

எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு (குறள் 467)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (குறள் 319 )

போன்ற குறள்களில் காரணகாரிய விளைவுகள் பற்றி சிந்திககப்பட்டுள்ளன. அத்துடன் முன் எச்சரிக்கை (Precaution) என்னும் சந்தனைக்கு இக்குறள் ஆதாரமாகின்றது.

அறிவியலில் உள்ள கோட்பாடுகள் (hypotheses) முக்கியத்துவம் வாய்ந்தவை. வள்ளுவரின் கோட்பாடு மிக உயர்ந்தவை. எல்லா சமயத்தினரும் வியக்கும் படி மிக நுணுக்கமாக இவரது சிந்தனை வெளிப்பாடு உள்ளது. பரம் பொருள், பிரபஞ்சம், சூரியன, தாய்தந்தை போன்ற பல கருத்துக்கள் ''ஆதிபகவன்" என்ற சொல்லில் உள்ளடக்கம் பெற்றுள்ளது.

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. ( குறள்)

என்ற குறள் இன்றும் ஆய்வுக்குட்பட்டுள்ளது. வள்ளுவரின் தாய்தந்தையாக ஆதிபகவனையும், மூலக்கடவுளையும், சூரிய பகவன் பற்றியும் பல ஆய்வுகள் - உரைகள் எழுந்துள்ளன. எந்தக் கருத்துக்கும் வளைந்து கொடுக்க கூடிய வகையில் ஆதிபகவன என்ற சொற்றொடர் அமைந்துள்ளது.

'பலர் புகழ் ஞாயிறு', ' ஏமமுற விளங்கிய சுடர்,' 'உயங்கு கதிர் விரிந்த' என்று பலவாறாக சூரியனை இவர் விளக்கும் விதம் ஆய்வுக்குரியது சந்திரன் பற்றி இவர் கூறவந்தவவேளையில்.

அறுவாய் நிறைந்த அவிர் மதிக்கும்போல
மறுவுண்டோ மாதர் முகத்து (குறள் 1117)

என்று கூறி சந்திரனில் உள்ள களங்கம்போல் பெண்களில் முகத்தில் உள்ளதோ? என்கின்றார்.

சந்திரனில் கிரகணம் பற்றி பல இடங்களில் கூறி 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என்றும் விளக்கி யுள்ளார். இவரது பல இயற்கையின் அவதானிப் புக்கள் வியப்பூட்டுபவை.

வள்ளுவரின் திருக்குறளில் பல இடங்களில் கணிதரீதியான இலக்கங்கள் பயன்பட்டுள்ளன. 'இருள்சேர் இருவினை' (குறள் 5) 'தானம் தவம் இரண்டும்' (குறள் 455) காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றும் (குறள் 360) 'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் இந்நான்கும்' (குறள் 35) 'பொறிவாயில் ஐந்தவித்தான்' (குறள் 6) 'அறு தொழிலோர்' (குறள் 560) 'எழு பிறப்பு' ( குறள் 62) போன்ற பல இலக்கரீதியான எண்களை பாவித்து திட்டவட்டமாக வரையறை செய்யபட்டுள்ளது. கணிதத்தில் உள்ள எண்ணக் கரு மொழிரீதியாக புகுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப் படவேண்டிய தொன்றாகும்.

குறளில் 'புவியியல்' அறிவின் ஆழம் பெறும் முக்கியத்துவம் போல் வேறு எந்த தமிழிலக் கியத்திலும் இடம்பெறவில்லை. குறிப்பாக 'வான் சிறப்பு' என்ற அதிகாரம் முழுவதும் வானிலை மழைவீழ்ச்சி பற்றியதாகும்.

வான் நின் (று) உலகம் வழங்கிவருதலான்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று (குறள் 11)

நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்து
எழில் தான நல்கா (து) ஆகிவிடின் ( குறள் 19)

போன்ற பல குறள்களில் தண்ணீரின் பெருமை, அதன் அடிப்படை இன்றியமையாமை பற்றி சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

புவியியலில் மனித இனத்துடன் தொடர்புடைய மரபியல் பற்றி பல இடங்களில் குறள் விளக்குகின்றது.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
ஏச்சத்தாற் காணப்படும் (குறள் 114)

என்ற குறளின் மூலம் பரம்பரை அலகுபற்றி நுணுக்கமாக வள்ளுவர் சிந்தித்துள்ளமை புலனாகின்றது.

குடம்பை தனித் தொழியப் புள் பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு (குறள் 338)

உயிர் உடல் பற்றிய உறவினை மேல்வரும் குறள் விளக்குகின்றது. விஞ்ஞானத்தில் மரபு ஒழுங்கு பொதுவாக ஏழு தலைமுறைக்குத் தொடர்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உண்மையுண்டு. இதனை 1869ல் விஞ்ஞானி மெண்டல் விளக்கியுள்ளார். இக்கருத்தினை வள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார். எழு பிறப்பும் தீயவை தீண்டா (குறள் 62) என்ற குறள் இதற்கு ஆதாரமாகும்.

பொதுவாக அறிவியலில் தெளிந்த சிந்தனையே வலியுறுத்தப்படுகின்றது. வள்ளுவரது அறிவு என்ற கருதுகோள் பின்வருமாறு அமைகிறது.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்பொருள் காண்பது அறிவு (குறள் 423)

இக்குறளில் பகுப்பாய்வு, ஆராய்வுத்திறன் மிகவும் உயர்ந்தது.

தெளிவுஇல் அதனைத் தொடங்கார் இளிவு
என்னும் ஏதாப்பாடு அஞ்சுபவர் (குறள் 464)

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல் (குறள் 517)

போன்ற குறள்களில் பல்வேறு நிர்வாகத்திறமை, ஆராய்ச்சி முறை, கூட்டுழைப்பு போன்ற பல திறன்களை விளக்குகின்றார். பகுத்தறிவு சிந்தனையை பல இடங்களில் படரவிட்டுள்ள குறள் மூலம் காலத்தால் அழியாத செம்மறையாக விளங்குது மட்டமல்ல புதுப் புது அர்த்தங்களையும் வழங்கி வருகின்றது.

புரிமேலழகர் முதல் கலைஞர் கருணாநிதி வரையில் பலர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். கால இட அரசியல் சிந்தனைகளுக்கு ஏற்ப இவ் உரைகள் விளங்கியுள்ளன. அழகியல் உணர்வு தொடக்கம் அறிவியில் ஆழம் வரையில் வள்ளுவரின் சிந்தனைகளை விளக்க முற்பட்டுள்ளனர். வள்ளுவத்தின் பரிமாணம் எங்கும் அதன் இழையோடும் அறிவியலே முழுமைப்படுத்துகின்றது.

உலகில் தோன்றிய பல அறிவியல். அர்த்தங்களையும், உண்மைகளையும், சிந்தனைகளையும், புதுமைகளையும் ஒன்றாக இணைத்துள்ள திறன் திருக்குறளுக்கு மட்டுமே உண்டு. அதுவும் தமிழில் எழுதப்பட்டுள்ளது திருக்குறள் என்பதில் மேலும் ஒரு பெருமையுண்டு.

'வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்க்கு
உள்ளத்தனையது உயர்வு' என்று கூறி
புதுமையாக சிந்திக்க வைத்த வள்ளுவர் உலகிற்கு ஏன்? பிரபஞ்சத்திற்குரிய ஒரு சிந்தனைவாதியாகின்றர்.


(Finch & Pharmacy சந்திப்பில் E.C.E. தகுதி பெற்ற
அனுபவமுடைய ஆசிரியை நடாத்தும் குழந்தை பராமரிப்பு

**Mani Home Daycare**

❋ காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

❋ 2 வயது தொடக்கம் 12 வயது ரை

❋ மதிய போசனம் வழங்கப்படும்

❋ பகுதிநேர. முழுநேர பராமரிப்பு உண்டு.



*தினசரி நடவடிக்கைகள்*

❋ *பிள்ளைகளின் அறிவை வளர்ப்பதற்கு ஏற்ற பயிற்சிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்படும்*

❋ *கதை, பாட்டு படிப்பித்தல் (தமிழ், ஆங்கிலம்)*

*மேலதிக விபரங்களுக்கு - மணி*

**(416) 490-0770**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. SHAN A. SHANMUGAVADIVEL

* General Dentistry * Orthodontics * Implants


25 வருடங்களுக்கு மேற்பட்ட பல் வைத்திய அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்.

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

குடும்ப பல்வைத்தியர்

சகலவிதமான பல் வைத்தியச் சேவைகளும், கிளிப் போடுதல் ஆகியனவும் திங்கள், செவ்வாய், புதன், (காலை) வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்


**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Ave. East
(Kennedy & Eglinton)
Scarborough, Ont M1K 5J8
**(416) 266-5165**




சப்வேயிலிருந்து நடந்துவரின்
Mid Scarborough Community Centre
Exit எடுக்கவும்

***Associated:***
**Dr. Nirmala Siva**
**(Tuesday)**
**Dr. Thavamany Srikandarajah**
**(Thursdays & Sundays)**
இவர்களின் சேவையும் இங்கு கிடைக்கிறது

**MAIN SQUARE DENTAL OFFICE**
Main Square Medical & Dental Centre
2575 Danforth Ave.,
Toronto, Ont. M4C 1L5




ஜனவரி 1998 முதல் மீண்டும் இங்கும் சேவைகள் ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னால் விரோதமிது, என்றாலும் சொல்லுகிறேன்

முருக.வே.பரமநாதன்

கற்க்கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக (குறள் 391)

திருக்குறள் உலகளாவியநூல், இதை வள்ளுவன் ''தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்னும் பாரதி வாக்கால் அறியலாம். உலகப் பொதுமறையாகிய இந்நூல் பல மொழிகளிலே மொழிமாற்றம் கண்டுள்ளது. சுமார் 2030 ஆண்டுப் பழமை வாய்ந்தது. வள்ளுவர் வாய் மொழி என்பர் இதை. வள்ளுவர் பெருந்தகையே கருத்தா. 133 அதிகாரம் கொண்ட 1330 குறள் வெண்பாக்களால் இயன்றது.

யாப்பு குறட்பா. எனவே கம்பராமாயணம் அவர்கள் பேசும் மொழியை மையமாகக் கொண்டெழுந்து நூல் யாப்பமைவால் திருக்குறள் என்னும் பெயர் பெற்றது. திரு பெருமை பேசும் அடை.. திரு, தெய்வத்தன்மை, காண்போர் விரும்பும் அழகு, இறை எனப் பொருள் படும். அவ்வகைக்குறள், யோக சித்தி, திருவருட்பயன் என்பன இம்மரபில் - எழுந்தன காம சூத்திரம் அர்த்த சாத்திரம், மனுநீதி இவற்றை நன்கு அறிந்த குறளாசான் விழுமிய மிக்க நூலைப் படைத்து உலகுக்கு அளித்தான். யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன்போல், இளங்கோவைப்போல பூமிதனின் யாங்கணுமே கண்டதில்லை. 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் தெய்வ வள்ளுவன் வான் புகழ் கொண்டதும்' என்பது பாரதி வாக்கு. விக்ரோறியா மகாராணியின் ஆட்சி பொற்கால மெனப் போற்றப்பட்டது. இவரின் சயன அறையில் இருந்த மூன்று நூல்களுள் ஒன்று திருக்குறள்.

இதற்கு இன்றுவரை பலர் உரைகண்டுள்ளனர். பரிமேலழகர் உரைமேலாந்தரம் உடையது என்பர். புலவருக்கு ஒன்பது பெயர். நூற்குமப்படியே. குறளைப் போற்றும் நூல் திருவள்ளுவமாலை. நாட்டை மையமாக வைத்து எழுந்தது. குறளோ ஒரு சமுதாயத்தைமையமாக்கி மக்களைப் பற்றி எழுந்தது. இளங்கோ வடித்த முத்தமிழ் காப்பியம். ஒரு இனம் வாழ்ந்த மண்ணை எனவே நாடு மக்கள் மொழி, இனத்தின் உயிர் தொன்மையான காப்பியங்களிலே வழிவழிவள்ளுவம் வழங்கக் காணலாம். எனவே மக்களின் உயரிய வாழ்வு பற்றிச் சிந்தித்தார் வள்ளுவர். மனித விழுமியம் பேசும் பதினெண்

கீழ்க்கணக்கு இலக்கியங்களில் குறள் தலைமை சான்றது. ஔவை, உலக நாதர், அதிவீரராம் பாண் டியன், குமரகுருபரன். சிவப்பிரதாச சுவாமிகள் பாடிய நீதிநூற்கொத்துகளின் மூலநூல் இது எனலாம், ஆக மனோன்மணிய ஆசான் இதன் பெருமை பேசும் வண்ணம் இது.

''வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள் வள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி"

மனோன் மணியம்.

வழிவழி வள்ளுவம் தந்த வாழ்வியல்.

தமிழுக்குக் கதியாவார் இருவர். ஒருவர் கம்பர் மற்றவர் திருவள்ளுவர். மனிதனுக்கு மனிதன் சொன் னது திருக்குறள். மனிதன் தெய்வத்துக்குச் சொன் னது திருவாசகம். தெய்வம் தெய்வத்துக்குச் சொன் னது பிரணவப்பொருள். தெய்வம் மனிதனுக்குச் சொன்னது கீதை. இவற்றையும் கடந்து தமிழர் பாட் டியரின் ஒரு அம்சமான சைவம் பேணும் இலக்கியங் கள். தத்துவ விளக்கம் நிறைய உண்டு. சில உயிரைப்பற்றிப் பேசும், சில உலகைப் பற்றிப்பேசும், சில இறைவன் பற்றிப் பேசும். சில முப்பொருள் விளக்கம்பற்றி எழுந்தன. குறள் எப்படியும் வாழலாம் என்ற கோட்பாட்டை மறுதலித்து, இப்படித்தான் வாழ வேண்டும் எனப்பேசுகிறது. இது ஒரு வாழ்க்கை நூல், அதேவேளை எல்லாச்சமயத்தவரும் தமது நூல் எனப் பாராட்டும் பெருமை நிறைந்தது.

பேராசியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் வள்ளுவர் ஒரு புரட்சி செய்தார் திருக்குறள் வாயிலாக எனக் கூறுகிறார். எனவே வையத்து வாழ்வாங்கு வாழும் வழி சொன்னவர். மனிதன் குறைந்தது மனிதனாக வேனும் வாழவேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்க்கை ஒரு கலை, வாழ்க்கை ஒரு காவியம். வாழ்க்கை வாழ வேண்டியது எனப்பேசுபவர் மனித நேயம் நிறைந்தால் மனிதன் வாழ்கிறான். வாழு, வாழவிடு, கம்பன் பாத்திரங்களாக மாறினான். வள்ளுவன் அந்நிலையினின்று குணமாகவும், குணி யாகவும் வாழ்ந்து காட்டினான். உதாரணமாக அரசனாக, குடிமகனாக, துறவியாக, இல்லறத்தா னாக, தலைவனாக, தலைவியாக, பண்பாக அன்பாக அருளாக கோபியாக, சாந்தமாக, சமயியாகச் சமயமாக நின்று பேசுகிறான். அவன் தரும் ஆளுமை தனித்துவம் ஆனது

''நல்லாண்மை என்ப தொருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கி கொளல் குறள் 1026

வடிவிலே சின்னன், வளத்திலே பெரிது, வாக்கிலே
சிறிது நோக்கிலே பெரிது

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
கறுகத் தறித்த குறள்

ஔவையார்.

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத்தறித்த குறள். கடுகு சிறிது காரம் பெரிது.

இடைக்காடர்

தான்பிறந்த இல் நினைந்து, தன்னைக் கடைப் பிடித்து, தான் பிறராற் கருதற்பாடுணர்ந்து, தான்பிற ரால் சாவவென வாழான். வாழ்க வென வாழ்தல் நன்று. இதையே வள்ளுவர் பிறரன்பழிப்பதில்லாயின் நன்று என்றார். வாய்மொழிந்தவர் சடகோபர். மணிவாசகர். அவை நிறைமொழிகள். வள்ளுவர் வாய் மொழி பொது மொழியாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத்தமிழால் உரை செய்தார் ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழிமாட்டு.

(திருவள்ளுவமாலை)

வேதத்தின் பொருளை உலகத்தார் ஓதியுணரும் பொருட்டு உபாயத்தால் விரித்து தமிழ் மொழியினாலே சொல்லியருளினார். ஆதலால் நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின் கண்ணே உண்டென்று அறிவுடையோர் சொல்வர்.

வாழ்வியலுக்கு வடிவமைத்த குறள் வடிவம்.

கல்வி அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும், உறும்கவ லொன்றுற்றுழியும் கை கொடுக்கும் என்பர். கல்வியின் நோக்கம் ஓதியுணர்ந்தது போலே - கற்று ஆய்ந்து ஒழுகவேண்டும். எனவே அறம் பொருள் இன்பம் பற்றி விமர்சனம் பண்ணும் குறள் வீடுபற்றிப் பேசவில்லை. இவைமூன்றும் நல்லபடி அமையின் வீடுதானே வந்தடையும். இதைத் தெய்வச் சேக்கிழார் அடியார் பெருமையில் பேசுகிறார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினாஞர்
ஓடும் செம்பொனும் ஒக்கநோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

பெரிய புராணம்.

எது அறம்? எது பொருள்? எது இன்பம? எது வீடு? என்பதை ஔவை மொழியிற் காணலாம்.

ஈதல் அறம், தீவினைவிட்டீட்டல் பொருள்
காதல், இருவர் கருத்தொருமித்து ஆதரவு
பட்டதே இன்பம். சிவனே யென்றிம்
மூன்றும் விட்டதே பேரின்ப வீடு

கொடுத்துச் சாப்பிடுதல் (உண்ணும் போ தொரு கைப்பிடி என்றார் திருமூலர்) அறம். கொடுப்பது உணவுமட்டுமன்று. ஏழைக் கெழுத்தறிவித்தலும் தர்மமே. நல்லவழியிலே தர்ம நெறியிலே பொருள் சம்பாதிக்க வேண்டும். தகுதிவாய்ந்த பெண்ணும் ஆணும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி சேர்ந்து இல்லறம் மேற்கொள்வது இன்பம். இதையே வள்ளுவம் காமத்துப்பால் என்கிறது. இது மனம் பண்படும் இடம், பக்குவம் படும் நிலை, இந்தமூன்றையும் விட்டு. புனிதமான இறை நாட்டம் கொண்டு இரட்டைகளை வென்று இறைநிலை காணலே வீடு. சுந்தரர் இறையோடியைந்த இன்பம் இன்பத்தோடியைந்தவாழ்வு எனப்பாடினார். இந்நிலையில் நாமேன் குறளைப் படிக்கவேண்டும். யார் நமக்கு புத்தி சொல்வது? நாம் முற்றுமறிந்தவர்கள் என்று சிலர் நினைப்பர் உண்மை நிலையை உணர்ந்து விழுப்பமான வாழ்வு பேண குறள் நன்கு பயன்படும். வள்ளுவர் மற்றவர்கள்தம்மீது குறை கூறினும் நன்றே செய்வோம், இன்றே செய்வோமென ஒரு நூல் அமைத்தார். அதேபோல நாம் சொல்வது கனடா வாழ் இளஞ்சமுதாயத்துக்கு விரோத மாய்ப் பட்டாலும் சொல்ல வேண்டியதைச் சொல்லியே ஆகவேண்டும். முடிந்த வரை வாழ்க்கையை வள்ளுவன் வழியிற் கட்டியெழுப்பின் ஒரு இலட்சிய சமுதாயமாய் மாறுவோம். எமக் கென்னென்று இறுமாப்புடன் பெருமை பீற்றல் பொருத்தமன்று.

செய்யக் கூடியதையும், செய்யத்தக்கதையும், செய்ய வேண்டியதையும் நடைமுறைப்படுத்தலாம்.

செய்தக்க அல்ல, செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். குறள் 466

தள்ளவேண்டியதைச் செய் வேண்டாததை விடு நாம் கொலை செய்யாமல், புலால் உண்ணாமல், களவெடாமல், குற்றம் புறியாமல் கோபப் படாமல், கயமை இன்றி வாழ்வோம், அன்பு பண்பு ஒழுக்கம் அறம், உண்மை போன்ற சீலங்களைப் பேணலாம். குறள் ஆய்வுமையங்கள் எழலாம், டாக்டர் பட்டங்கள் குறளிற் பெறலாம், சொற் பெருக்காற்றலாம் தொடர்புடைய நூல்களை ஆக்கலாம். 1330 குறட்பாக்களை பாடமாக்கிச் சொல்லலாம். எத்தனை விழுக்காடு குறள் வழி நாம் நடக்கிறோம். இதுதான் இன்றையவினா. படித்திடித்துச் சொன்னாலும் கேளாதவரை என் செய்வது. 'இடிப்பாரை இல்வாத ஏமராமன்னன் கெடுப்பாரிலானும் கெடும்' என்பது குறள்

பிள்ளைகளை வழிப்படுத்தாத பெற்றோர், மாணவனை செம்மைப்படுத்தாத ஆசிரியர், மனைவியை எச்சரிக்காத கணவன், கணவனை கடியாத மனைவி, நண்பனை கண்டிக்காத சிநேகிதன், பின்துன்பப்படுவர், எனவே வள்ளுவர் இடித்துச் சொன்னார். நாமும் படித்துச் சொல்கிறோம். எனவே விரோதம் நன்மை தருமானால் சொல்லத்தான்வேண்டும். இப்ப தூற்றினும். பின்பு போற்றுவர். குறளை அரங்கேற்ற ஆதரவு கொடுக்காத புலமை உலகம் இன்றிருந்தால் இன்று உலகமே போற்றுகிறது குறளை, வாழ்வளித்த வள்ளுவனுக்கு விழாவும் எடுக்கிறது. எனவே போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்தூற்றுபவர் தூற்றட்டும். ஏற்றதொரு நற்கருத்தை நாம் கூறாமல்

இருந்தாற் துரோகியாவோம். சமுகவிரோதிகளும் ஆவோம். புலம் பெயர்ந்த எம் சமுதாயத்தின் எதிர்காலத்தைக் கட்டி யெழுப்ப இனியொருவிதி செய்வோம். அதை எந்நாளும், எங்கும். எல்லாரிடமும் காப்போம் காரிய உறுதி கொள்வோம்.

திருக்குறள் வாழ்க்கை வாழ்வோம்.

வீதி யொழுங்கு வாகனம் விபத்துக்குள்ளாகாமற் காக்கவும், உயிர்ச் சேதம் பொருட் சேதம் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்டது. இதேபோல வாழ்வு சீரோடும் சிறப்போடும் வாழ்வு நீரோட்டத்திலமையவும், சுகாதாரமான சமாதான சக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு மேற்கொள்ளவும் குறள் ஒரு கலங்கரைவிளக்கம் ஊளின்றுகோல், உத்தம உபதேசம், நடை முறைக்குகந்த சிந்தனைகள். வள்ளுவர் தாம் பேசும் 133 தலைப்பிலும் எடுத்துக்கொண்ட கருத்தை பத்து உத்திகளாம் கவிதா சாமர்த்தியத்தால் அழுத்தி உள்ளார் என்பதை உள்ளுவோம், உபயோகிப்போம். எக்கா லத்துகதும் சாலப் பொருத்தமான 1330 அமுதத்தா ரைகள் எம் நெஞ்சிற்பாய்ந்தால் நாம் பெறுமதியான வாழ்வு காண்போம்.

எனவே:- எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு

எப்பொருள் யார் யார்வாய்க்கேட்பினும்
அப்பொருள், மெய்ப்பொருள்காண்பதறிவு
குறள்

வாழ்வாவது மாயமா - மண்ணாவது திண்ணமா!

வாழவா வழியில்லை. இப்படிவினாவெழுப்பி - நல்ல வண்ணம் வாழுங்கள் என்கிறது. சமயவிஞ்ஞானமும், சாஸ்திர விஞ்ஞானமும் - எனவே வாழ்வு நிச்சயம் . மண்ணும் நிரந்தரம். எனவே ஒருகுருவியை மனித னோடு ஒப்பிட்டுப்பாருங்கள். எவ்வளவு சுபீட்சமாக சுதந்திரமாக வாழ்கின்றது என்கிறார் பாரதி.

கேளடா மானிடவா - எம்மில் கீழோர்மேலோர் இல்லை மீளா அடிமையில்லை - எல்லோரும் வேந்த ரெனத்திரிவோம். உணவுக்குக் கவலை இல்லை - எங்கும் பார்க்கினும் உணவேயடா சிறியதோர்வயிற்றினுக்காய் - நாங்கள் ஜென்மமெல் லாம் வீணாய் மறிகள் இருப்பது போல் - பிறர் வசந்தனில் இருப்பதில்லை காற்றும் ஒளியும் மிகு ஆகாயமே எங்களுக்கு ஏற்ற தொரு வீடு- இதற் கெல்லை யொன்றில்லையடா வையகம் எங்குமுளது உயர்வான பொருளெல்லாம் ஐயமின் றெங்கள் பொருள். இவையெம் ஆதாரமாகும்

ஏழைகள் யாருமில்லை, செல்வம் எளியோர் என்றுமில்லை வாழ்வுகள் தாழ்வுமில்லை - என்றும் மாண்புடன் வாழ்வமடா

என்று நல்லவண்ணம் வாழும் வழிகளைக் குருவிப்பாட்டில் விளக்குகின்றார். பாரதியார்.

மனிதன் ஆற்றறிவுடையவன். புறவை நான் கறிவுடையது. எனினும்.மனித வாழ்வின் இரகசியப் பான்மைகளை குருவியிலே சார்த்திபாடிய இப்பாடல் நம்மை வெகுதூரம் சிந்திக்கவைக்கிறது. வெறும் ரசனைக்காக வெளிப்படவில்லை. பிடிப்புள்ள தாக, பொறுப்புள்ளதாக, கனதி காத்திரம் நிறைந்ததாகக் காட்டி வாழுங்கள் வண்ணமுடன், ஒவ்வொருபரம் பரையும் வாழுங்கள் என்ற வள்ளுவர் வெறும் வாய்வேதாந்தம் பேசவில்லை மனிதனாகப் பிறந்து விட்டா உலகிலே உனக்கு நல்ல வழி இருக்கு. விவேகமும் அறிவும் உண்டு. நான் மனிதன் நல்ல வண்ணம் வாழ்வேன் என்ற திடசங்கற்பத்தை ஆக்கி மேலும் நட என்கிறார் வள்ளுவர்.

ஒளிமயமான வாழ்வியலுக்குத்திருக்குறள்.

உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்பது பாரதிவாக்கு. ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் கொண்ட மனிதன். தன்னிடம் உள்ள கூடாத, தேவையற்ற குணவியல்களை குணப்பாங்களை நீக்கி சத்திய வேட்கையுடன். திறமையான ஆளுமை வெளிப்ப டுத்தி ஆக்கவியற்துறையிற் தன்னைக் கட்டி யெழுப்ப திருக்குறள் நல்ல ஆயுதமாகும். எனவே வெறுமனே மனமொடிந்து மண்ணாகாமால் பொன் னான காலத்தைப் பயன்படுத்தி ஒரு புதுமையான வரலாறு படைக்கவும் குறள் வழிவகுக்கிறது. வள்ளு வர் சொன்னார்.

"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவர் வான்
உறை யும் தெய்வத்துள் வைக்கப் படும்"
குறள் 50

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்
குறள் 294

இராமன் மனிதாய் வாழ்ந்தான் இதை மானிடம் வென்றதம்மா என்றார் கம்பர். கருணையங்கோயிலிற் குடி கொண்ட கண்ணனே - இராமன். அவன் வாழ்ந்து காட்டினான், வாழ்வாங்கு வையத்தில் வாழ்ந்து காட்டினால் தம்பிக்காகத்தியாகம் செய் தான், தந்தைக்காக அரசைத்துறந்தான், தாயின் கட்டளையை உவந்து ஏற்றான் சகோதரத்துவத்தை வீட்டிலா? மட்டுமல்ல வெளியிலும் செயற்படுத்தி னான். குகன் சுக்கிரீ வன்வபீஷணனைச் சகோதர மாக்கி சகோதரத்துதவத்தை நிலை நாட்டினான். வாக்குத் தூய்மையுடன் வாழ்வை மேற்கொண்டு சமத்துவம் பேணினான் அருமனையே தன் இலையிலேயே உணவருந்தச் செய்தான் எப்படிவாழ வேண்டுமோ அப்படி வாழ்ந்தான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டான்.

அரிச்சந்திரன் காந்தியடிகள் சத்திய நெறிநின்றனர் மறைந்தும் மறவாமற் போற்றப்படுகிறார்கள் இதை யே உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இருக்கிறர்கள் அணையாத சோதியாக பொய்சொல்லாதே உண் மையும் சொல்லாதே என்று தன் குருநாதர் செல்லப் பன் சொன்ன உண்மையைப்பாடினார் யோகர்சுவாமி கள்.

பொய்சொல்லாதே என்பான் மெய்யுஞ் சொல்லாதே என்பான் வல்லபங்கள் பேசி வந்தோர் வாயை அடக்கிடுவான் வித்தையொன்றுஞ் செய்து காட்டான விவேதமற்றோர் போலிருப்பார் அத்துவா மார்க்கம் விட்டு ஆறியிருந்திடுவான் (நற்சிந்தனை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் சொல்லாதே உண்மைபேசு என்ற வள்ளுவர் மற்றவர்கட்கு தீங்குவிளையாமல் பொய்பேசினால் இதுவாய்மை என்றார்.

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின் குறள் 292

வழியிலே போய்க்கொண்டிருந்தேன் ஒருவன் களைத்து ஓடிப்போய் விட்டான். தொடர்ந்து கையிற் கத்தியோடு வந்தவன் இவ்வழியால் ஒருவன் ஓடுகிறானோ எனக் கேட்பான் இல்லை என்றேன். போனவன் கொலையுண்ணாமற் தப்பினான். தொடர்ந்தவன் கொலைப்பழியினின்று தப்பினான் இதைத்தான் வள்ளுவர் வாய்மை என்றார். உண்மையும் சொல்லாதே என்றார். இப்படியான புரிந்துணர்வுகள் பேசும் திருக்குறள்.

## சிந்திக்கவைக்கும் குறள் மொழி

தர்மத்தை விளக்க வள்ளுவர் ஒரு உத்தியைக் கையாண்டார். இன்று விஞ்ஞானம் வாகனம் தந்திருக்கிறது. பயணம் செய்ய. அப்போ வண்டிகள் உண்டு. மனிதரை மனிதர் சுமக்கும் சிவிகை இருந்தது. ஏறி உட்கார்ந்திருப்போரை சிலர் சுமந்து சென்றனர் இதை குறளிலே வடித்தார்.

**அறத்தாறிது வென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தான் இடை**

குறள் 37

சிவிகையிலே மன்னர். பெரியோர் கல்விமான், நடன மாதர் இப்படிப்பலர் போவர். பொறுப்போடுதாங்கி, கவனமாய் பொறுமையுடன், பவுத்திரமாய்க் கொண்டுபோய் இறக்குபவர்கள் பாரம்சுமப்பவர். தர்மம் எப்பவும் பொறுமையானது போட்டடிக்காது நன்மைதருவது. தர்மன் இலக்கணம். எனவே பல்லக்கிலே போனவனையும், சுமந்தவனையும் ஒப்பீடு செய்து தர்மம் இது எனக்காண் என்பது தான் குறள் பேசும் உண்மை. நாவுக்கரசர் சம்பந்தப் பெருமானை சிவிகையிலே தாங்கிய பெருமை பாக்கியம் பெற்றார். நமது காலத்து வாழ்ந்த காஞ்சிப் பெரிய வரைத்தாங்கும் பாக்கியம் கிடைத்தவர்கள் எவ்வளவு அறவாணர். அந்தப் பொறைதர்மப்பொறை. பிரயாணம் செய்பவனையும் சுமந்து செல்பவனையும் பார்த்து அறத்தை அளந்துபார், உரைத்துப்பார் என்கிறார் வள்ளுவர். அறிவு ஜீவிகள் புத்தி ஜீவிகள் வெவ்வேறு உரைகண்டனர். எனினும் படிப்போர் தெளிவுறும்படி உரை வகுப்பதே உசிதம். தேவையும் அதுவே பிள்ளைகளைக் கொண்டு பெற்றோரைக் காணலாம் என்பது ஒருகுறள் பல நல்லவர்களின் பிள்ளைகள் பெற்றோரின் மேன்மையை நிலை நாட்டவில்லை இதைக் காந்தியடிகள் வாழ்வில் அமைத்துப்பார்க்க வாம். வள்ளுவர்வழி வாழ்ந்த அவர் விட்டுச் சென்ற எச்சம் கீர்த்தி புகழ் இறைதான் எனவே வள்ளுவர் இசை என்னும் எச்சம் என்கிறார். தனியப்பிள்ளை களைக்கொண்டு இதை நிர்ணயிக்க முடியுமா! மக்கட் செல்வம் இல்லாதவர் பிரமச்சாரிகள் விஷயத்தில் எப்படி அமையும் எனவே பாபாவின் உட் பொருள் துலாம் பரமாய் வெளிப்படல் முக்கியம். எனவே அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பதற்கு பிள்ளைகளிலும் இசை யென்னும் எச்சம் சாலபொருந்துதல் சிந்திக்கற்பாற்று. பெண்களுக்கு மட்டுமன்று கற்பு ஆண்கட்குப் பொது எனப்பாரதி கூறுமுன் பல ஆயிரவருடம்முன் பிறனில் விழையாமையால் விளக்கினார். அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி ஆண்களின் ஒழுக்கவாறு. மடம் அச்சம் நாணம் பயிர்ப்பு பெண்ணுக்குரியது.

## எல்லாம் குறளிலே உண்டு

திருக்குறட் பெருமை எல்லாம் வாழ்வோடு கரைந்து நல்ல ஆற்றலை ஆளமையை வாழ்க்கையை அமைப்பதிலேதான தங்கியுள்ளது. பல நுணுக்கமான பொருளமைவுகளை வேண்டும் இடமெங்கும் மெய்துள்ளார். ஓர் உதாரணம் சொல்லும் செயலும் மனமும் ஒன்றாய் அமைவதே உயர்வு. உதட்டில் ஒன்று நாக்கிலே இன்னொன்று செயலிலேவே றொன்று இவர்களோடு நாமெப்படி இணைந்து வாழ்வது காதல் வாழ்விற் பேசினும் எல்லார்க்கும் அது பொருந்தும்

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு**

குறள் 819

சமயத்தை இட்டு ஆழப்பதிக்காமல் இறைதத்துவம் பற்றி கடவுள் வாழ்த்துடன் தொடங்கும் திருக்குறள் ஆழ்ந்த அழுத்தம் எச்சமயத்துக்கும் கொடுக்க வில்லை எனலாம்.

இவ்விலக்கியம் ஆங்கிலத்திலும் மொழி
பெயர்த்துள்ளனர் விளக்கமும் எழுதியுள்ளனர்.

எனவே கனடாவாழ் தமிழ் மக்களின் முதியபலர் நல்லதமிழ்மொழியாற்றல் உள்ளவர்களாய் உள்ளனர். இளஞ்சந்ததியினருக்கும் ஆவலும் அறிவும் நிறைய உண்டு. அகவாழ் வியலின் மையக்கோடான குறளை பிஞ்சு உள்ளங்களிலும் விளைவு செய்யவேண்டும். வாய்பாடுகளை மனனம் செய்தோம். கணனி இன்றி கணக்குப்பார்க்கிறோம். கஷ்டப்பட்டு ஔவை வாக்குகளை, குறளை எம்முடன் சேரப் படிப்பித்தார். நாம் வெற்றியுடன் வாழ்வு கண்டோம் இந்த இயக்கம் எங்கும் குறளை எங்கும் பதிய வைக்கட்டும். அறுவடை நிகரலாபம் தரும்.

உள்ளுவர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாழ் மொழி மாட்டு
எல்லாப் பொருளும் இதன் பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்.

திருவள்ளுவமாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eastown
Restaurant & Banquet Halls



திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கு Catering வசதிகளுடன்



எமது மண்டபத்தில் நடைபெறும் திருமணங்களில் திருமணத் தம்பதிகளுக்கு *வலம்புரிச் சங்கை* அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

## Banquet facilities up to 700 Persons

50 பேர் தொடக்கம் 700 பேர் வரையில் கொள்ளக்கூடிய

அலங்கரிக்கப்பட்ட 3 மண்டபங்கள் ஓரே இடத்தில் அமைந்துள்ளது



போதிய வாகனத் தரிப்பிட வசதி உண்டு




**Call: JEY or SASI**

**Tel: (416) 266-3841, (416) 265-3333**

**2648 Eglinton Ave. East, Scarborough, Ont(at Brimley)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் எழுந்த பின்புலம்

***அ. அன்ரன் ஜெயக்குமார் (B.A)***

சங்ககாலப் பிற்பகுதியிலேயோ அல்லது சங்கமருவிய கால ஆரம்பத்திலேயோ தோன்றியதாகக் கருதப்படும் திருக்குறள் அக்கால வாழ்க்கை முறையைக் கண்டனம் செய்ய எழுந்த நூலே என்பதைக் குறள் எழுந்தகாலப் பின்னணியை ஆராயும்போது புலனாகின்றது.

சங்க இலக்கிய நூல்கள் அக்கால சமூக அரசியல் சூழ்நிலைகளைத் துல்லியமாகப் படம் பிடித்துக்காட்டுகின்றன. மக்கள் வாழ்வில் காதலும் வீரமுமே சிறப்பிடம் பெற்றதாகக் கூறும் அந்நூல்கள் அக்கால மக்கள் தமக்கு இன்பமும் புகழும் தரவல்ல பொருள்களையும் செயல்களையுமே நாடினர் என்கின்றன. தமக்குக் கிடைக்கும் புகழும் பெருமையும் வீரத்தின் வழி வந்தன என்று கருதி, நாடு பிடிக்கும் பேராசைகொண்ட குறுநிலமன்னர் போர் - - - போர் - - - - - என்று முரசு கொட்டியதும் மன்னருக்காகத் தம் உயிரை அர்ப்பணிக்கத் திரண்டெழுந்தனர் வீரத் தமிழ் இளைஞர். வெற்றி அல்லது வீரமரணம் என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு சங்கத் தமிழனின் பேச்சிலும் மூச்சிலும் தீயாகக் கனன்று கொண்டிருந்தது.

தம் மக்களைப் போருக்கு அனுப்பிவிட்டு அவர்கள் வெற்றிவீரர்களாக நாடு திரும்பும் காட்சியைக் காண்பதை விட களத்திலே பகைவர்கள் தலைகளைப் பந்தாடிப் பெருஞ்சமர் புரிந்து வீரசுவர்க்கம் அடைந்து விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்பதையே தம் குலப் பெருமையாகக் கொண்டிருந்தது வீரத்தாய்க்குலம்.

புறநானூறு தரும் ஒரு வீரத்தாயின் கதை. தன் மகன் போரில் புறமுதுகு காட்டி ஓடி வேல்பட்டு மாண்டான் என்ற செய்கி கேட்டு வெறிகொண் டெழுகிறாள் ஒரு தாய். அப்பேடிக்கு பால் ஊட்டிய தன் மார்புகளை அறுத்தெறிவேன் என்ற சபதத்துடன் கையில் வாளுடன் போர்க்களம் சென்று உயிரற்ற தன் மகனின் உடலைத் தேடுகிறாள். அம்மா - - - - - - -என்ற ஒலிகேட்டு ஓடிச் செல்லுகிறாள். உற்று நோக்குகிறாள். பகைவரின் உயிரற்ற உடற்குவியலுள் மார்பில் வேலேந்தி வீழ்ந்து கிடக்கும் தன் மகனைக் காண்கிறாள். மகனே என்று ஓடிச் சென்று அவனை அள்ளி அணைக்கிறாள். மடியிற் கிடத்தி உச்சி முகர்கிறாள். தாயைக் காண்பதற்காகவே காத்திருந்த அவனது ஆவி, தாயைக் கண்ட மகிழ்ச்சியுடன் அவனை விட்டுப் பிரிகிறது.

போரில் விழுப்புண் பெற்று வரும் காதலரின் புண்களுக்கு வீசிவிட வாசலில் வேப்பிலைக் கொத்தைக் கட்டி விட்டு வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் காரிகையர் கூட்டம் பற்றி செய்திளையும் அக் கால நூல்கள் அறியத்தருக்கின்றன.

பழந்தமிழர் நூல்களில் சிறப்பாகப புறநானூற்றில் போர்க்களச் சித்திரிப்புகள் மிகவும் கொடூரமானதாகவும் பயங்கரமானதாகவும் விபரிக்கப்பட்டிருக்கிறது. இதே புறநானூற்றில் போரினால் அழிவுற்றுச் சிதையுற்ற சமூகத்தின் விதவைகளும் அபலைகளும் பற்றியும் குறிப்புக்களும் காணப்படுகின்றன. இருபக்கமும் சிந்தப்பட்டது தமிழர் இரத்தமே என்பதையும் வீர இளைஞர்களைப் பலிகொடுத்த சமுதாயத்தில் விரக்தியும் வேதனையுமே மிஞ்சின என்பதையும் சங்கத் தமிழ் வரலாறு கோடிட்டுக் காட்டுகிறது.

போர்க்களக் கொடுமையைச் சித்திரிக்கும் புறப்பாடல் ஒன்று, வெட்டப்பட்ட பகைவர்களின் தலைகளையே அடுப்பாகக்கொண்டு தசை. மூளை முதலியவற்றை இட்டுத் தோள்களைத் துடுப்பாகக் கொண்டு துழாவும் கொடுமை பற்றிக் கூறுகிறது. (புறம் 26)

``மங்கலம் என்ப மனைமாட்சி'' என்ற சங்கத் தமிழரிடையே ஒருவன் பெண் கேட்டு வந்தால், அப்பெண்ணின் தந்தை தமையன்மார் தம்மையொத்த வீரனுக்கே அப் பெண்ணைக் கொடுக்கவிரும்பினர். பெண்கேட்டு வந்தவன் அவர்களுடன் நேருக்கு நேர் வாட்போர் செய்து. அவர்களை வென்று தானும் அவர்களையொத்த அல்லது அவர்களிலும் சிறந்த பெருவீரன் என்று நிரூபித்தபின்பே அப்பெண்ணின் கை பிடிக்க முடியும். இத்தகைய போரில் விழுப்புண்களும் மரணங்களும் நேருவதுமுண்டு. சில சமயங்களால் இச் சிறுபோர் பெரும் போராக மாறி இரு நாடுகள் பங்கேற்பதுமுண்டு. கலித்தொகை காட்டும் பெண்ணொருத்தி தன் மனங்கவர்ந்த காதலனுடன் களவொழுக்கம் கொண்டாள். செய்தியறிந்து பெண்ணின் தந்தையும் தமையன்மாரும் வழக்கம்போல வெகுண்டெழுந்தனர். தம் குலப் பெருமை என்னாவது என்று சினந்தனர். வெறிகொண்டு அம்பையும் வில்லையும் நோக்கினர். சினம் சிரசேற கண் சிவந்து ஒருபகல் முழுவதும் கொலை வெறிகொண்டு காதலரைத் தேடியலைந் தனர்.

``அவரும் தெரிகனை நோக்கி சிலை நோக்கிக் கண் சேந்து ஒரு பகல் எல்லாம் உருத்து எழுந்து'' 39:-21

என அவர்களது கோபத்தையும் ஒரு பகல் முழுதும் துடித்ததையும் இவ்வடிகள் காட்டும்.

பழந்தமிழகத்தின் பாலை என்ற நிலத்தில் வாழ்ந்த மறவர் கூட்டம் களவைத்தொழிலாகவும் கொலையை விளையாட்டாகவும் கொண்டு வாழந்தனர். வலிய உடலும் கொடிய புலி நோக்கும் கொண்ட இம் மறவர் பாலை வழியில் வருபவர்களை அடித்துத் துன்புறுத்திக் கொன்றனர். வழிப்போக்கர்களின் தலையை இலக்காக வைத்து அம்பெய்து கொன்று தமது வில் தொழிலைப் பழகும் இவர்களுக்கு உயிர் ஒரு கொலை விளையாட்டு. ஆனிரை கவர்ந்து சென்று அவற்றைக் கள்ளுக்கு விலையாக்கி மேலும் கள்குடித்துக் களித்தனர் என்ற செய்தியையும் அறிகிறோம்.

உலகியல் வாழ்வையே மையமாகக்கொண்டு வாழ்க்கை நடாத்தி வந்த தமிழருக்கும் உலகியல் வாழ்வே பெரும் பேறெனக் கருதி வாழ்ந்த யவனருக்கும் கடல் வணிக நிமித்தம் தொடர்பு ஏற்பட்டது. வணிகத்தொடர்பு கலாச்சாரத் தொடர்பாக வெகுசீக்கிரத்தில் மாறி சில யவனர் நிலையாகத் தமிழகத்தில் தங்கிவிட்டனர். யவனத்து மது தமிழகத்தில் தாராளமாகப் புழங்கியது . அளவுக்கதிகமாக மதுவை உட்கொண்ட தலைவன் கையில் மதுக்கிண்ணத்துடன் தலைவியின் ஆடைகளை அலங்கோலமாக்கி அவளைத் துரத்திச் சென்று கட்டிப்பிடித்து முத்தமிடும் காட்சியையும் காண்கின்றோம்.

மருத நிலத்தில் காணப்பட்ட பரத்தமை ஒழுக்கம் பற்றிச் சங்க நூல்கள் செய்திகள் தருகின்றன. மருத நிலத்து ஆடவர்கள் இராக்காலங்களில் ஆடல் பாடல் வல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணரும் பரத்தையரும் வாழுமிடம் சென்று இராப் பொழுதை பரத்தையுருடன் செலவழித்தனர். அகநானூற்றுப் பாடல் ஒன்று தலைவனை நீர் நாய்க்கு ஒப்பிடுகிறது. நீர் நாய் ஒன்று கொழுநாற்றம் வீசும் வாளை மீன்களை மேய்ந்து அவற்றைத் தின்ற அடையாளமாக அதன் கூரிய பற்களில் இரத்தக்கறை தெரிய முள் நிறைந்த கொடிகள் கொண்ட பிரப்பம் புதரில் போய்த் தங்குகிறது. வள்ளைக் கொடி போன்ற பரசேரிப் பரத்தையர் அவனைச் சுற்றிக்கொள்கின்றனர். நீர் நாயும் வாளை மீன்களும் பிரப்பம் புதரும் கொண்ட அப்பொய்கையின் நடுவே, ஓர் ஒப்பற்ற தாமரை சுடர் விளக்குப்போல ஓங்கி வளர்ந்து தோன்றுகிறது. தலைவியைத் தாமரைப் பூவிற்கு ஒப்பிடப்படுகிறது. பரத்தையரில் முற்போக்காக மேல் பாயும் வாளை போன்ற ஒருத்தியை அன்பு நெறியில்லாமல் காமத்தின் நெறியால் அனுபவிக்கிறான் தலைவன். அந்தப் பரத்தையின் வீட்டில் இருந்து வரும் பொழுது அந்தக் காமத்தின் அடையாளங்களெல் லாம் அவனிடம் தோன்றுகின்றன. மீண்டும் அவன் பிரப்பம் புதரையே நாடிப் போவதாக அப்பாடல் கூறுகிறது.

சுடர்ப் பூந்தாமரை நீர் முதிர் பழனத்து
அந்தூம்பு வள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர் நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
பல்வேல் மத்தி கழாஅர். (அகம் 6)

சங்கத் தமிழரைப் பற்றி அவர்களது வீரவாழ்வு பற்றி தமிழ்மக்கள் பெருமைப்படுவதில் நியாயமுண்டு. உலகியல் வாழ்க்கைச் சுகங்களை மட்டின்றி அனுபவித்து வாழ்ந்தவர்கள் அவர்கள். கடவுள் நம்பிக்கை, கடவுள் வழிபாடு அவர்களிடையே இருந்ததாயினும் மதம் என்று ஒன்று இருக்கவில்லை. வழிபாடு என்ற பெயரில் இறந்த வீரர்களின் நினைவாகக் கட்டப்பட்ட நடு கற்களின் முன் அவர்களின் உருவப்படங்கள் மயிலிறகுகள் கொண்டு அலங்கரிங்கப்பட்டு, வேல்களும் வாள்களும் நிறுத்தப் பட்டுகள், மிருக இரத்தம் என்பன படைக்கப்பட்டு வீர வணக்கம் செலுத்துப்பட்டது. இயற்கையோடு இணைந் திருந்த முருகனை வழிபடும்போது கள், ஆட்டிரத்தம் என்ற படையலுடன் இளம்பெண்கள் ஆடும் குரவை யாட்டம், வெறியாட்டம் என்பன ஆடப்பட்டன மாயோன், கொற்றவை போன்ற தெய்வங்களும் பண்டைத்த தமிழரின் வழிபாட்டுக்குரியனவே.

பிற்காலத்தவரால் பஞ்சமாபாதகங்கள் என இகழ்ந்து ஒதுக்கப்பட்டவை, சங்கத்தமிழர் வாழ்வில் முக்கிய இடம் பெற்றன என்ற செய்திகளை சங்ககால இலக்கியங்கள் தருகின்றன. இந்த சமூகப் பின்னணியிலேயே திருக்குறள் தோன்றுகிறது. போரின் கொடுமைகளால், சமூகச்சீர்கேடுகளால் அழிந்து, நலிந்து, விரக்தியுற்று வாழ்க்கையில் வெறுப்படைந்த ஓர் சமூகத்தை நெறிப்படுத்தி வாழ்க்கை வாழ்வதற்கே என்ற புது இரத்தம் பாய்ச்சும் தீவிர சமூகப்பணியில் திருவள்ளுவர் தன்னை அர்ப்பணிக்கிறார். இக்காலத்தில் எழுந்த அறநூல்கள் மறுபிறப்பு, தேவர் உலகம் போன்ற கவர்ச்சிக் கருத்துக்களைத் தோற்றுவித்து வாழ்க்கயின் நிலையாமையை எடுத்துக் கூறி துறவுவாழ்க்கை வாழ்வதன் மூலமே ஒருவன் பேரின்பம் அடையமுடியும் என்ற கருத்தை வலியுறுத்தின. உலக நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலிய வாழ்க்கை வெறுப்புக்குரிய கருத்துக்களை அளவிறந்து வற்புறுத்தின. மனிதர்களுக்கு இயல்பாக அமைந்த வாழவேண்டும் என்ற துடிப்பை இந்த நூல்கள் முற்றாக உதாசீனம். செய்தன.

*வாழ்க தமிழ், வளர்க தமிழ்*

வடக்கில் இருந்து வந்த வைதிக சமயம் வர்ணாச்சிரம தர்மத்தை வலியுறுத்தி மக்களை நால் வகைக்குலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு குலத்துக்குமுரிய கடமைகளை கூறியதோடல்லாமல், நிலையாமைக் கருத்தை அதிகம் வற்புறுத்தாது, நிலையற்ற வாழ்விலும் இன்பம் தரக்கூடிய செல்வ வளம், புத்திரர்பேறு, சத்துரு வெற்றி கிடைப்பதற்கு வேள்விகள் செய்வதும், பிராமணரை ஆதரித்தலுமே உறுதியான வழிகள் என்று கோடிட்டுக் காட்டியது. வேள்வியின்போது எரியும் நெருப்பில் மிருக இரத்தம், நெய் என்பன ஊற்றப்பட்டு தானியங்களும் சேர்க்கப்பட்டன. வேள்வியால் மகிழ்வுறும் வானுறையும் தேவர்களுக்கு வேள்வி செய்பவரின் தேவைகளை எடுத்துச் சென்று கூறும் தூதுவனாக நெருப்பு (அக்கினி தேவன்) கருதப்பட்டது. பொருள் வசதி, பணவசதி படைத்த அரசர்களால் மட்டுமே இத்தகைய வேள்விகளைச் செய்யவும் பிராமணரை ஆதரிக்கவும் முடிந்தது.

வாழ்க்கையின் துன்பச் சுமையினால் அழுந்தப் பெற்று துரத்தப் பெற்று ஓடி ஓடி வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடிவிட்ட பழந்தமிழினத்தை 'நிலையாமை' என்ற கருத்தே வரவேற்று நின்றது. உலகியல் வாழ்க்கை, அறவாழ்க்கை, வைதீக சமயக்கருத்துக்களென மும்முனைக் கருத்துக்களால் மோதுண்டு அலைப்புண்டு பேரின்பம் என்ற அமைதிக்கு துறவுதான் ஒரே வழியென்ற கொள்கையை ஏற்கத் தயாராகியத பழந்தமிழினம்

இந்த நிலையை நன்குணர்ந்த திருவள்ளுவர், குறளில் இல்லற வாழ்க்கைக்குச் சிறப்பிடம் கொடுக்கிறார். ஒருவன் அறவழியில் நின்று இல்லறவாழ்க்கையில் பெறமுடியாத ஒன்றையும் துறவறத்தில் சென்று பெற்றுவிடமுடியாது என்ற வள்ளுவரின் துணிகரமான கருத்து இந்தியச் சிந்தனை வரலாற்றிலும் தமிழ் நாட்டுச் சிந்தனைப் போக்கிலும் ஒரு புதுமையான கருத்து. ''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'', ''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போய்ப் பெறுவ தெவன்'' என்ற வள்ளுவர் கருத்துக்கள் வாழ்க்கையை விரும்புக என்று பணிக்கின்றன.


சங்ககாலச் செய்யுள்களில் சிறப்பாகப் பேசப்பட்ட போர், காதல், இறைச்சியும் மீனும் உண்ணல், மது வருந்துதல், கொலை, காமம், களவு, கள் என்பவற்றைக் குறள் கடிந்தொதுக்கிறது. வரைவின் மகளிர், பெண்வழிச் சேறல், பிறனில் விழையாமை என்னும் அதிகாரங்களில் காமம் கடியப்படுகிறது. புலவர்கள் வள்ளல்களிடம் சென்று பிச்சை கேட்பது இரவச்சம் என்ற பகுதியில் இழித்துக் கூறப்படுகிறது. ஓர் ஆணின் துறவு வாழ்க்கைக்கு இடைஞ்சலான சாபக்கேடு பெண்ணென்று மற்றைய அறநூல்கள் கடிந்துரைக்க கற்புள்ள பெண்ணின் உரிமை, பெருமை, அன்பு பற்றி வள்ளுவர் வானளாவப் புகழ்கிறார். அவர் மனைவியைக் வாழ்க்கைத் துணையெனக் கூறுவது மிகவும் சிறப்பானதோர் அம்சம்.

சங்கத்தில் அரங்கேறிய திருக்குறளுக்கு ஆரம்பத்தில் பலத்த எதிர்ப்பு இருந்தது. ஆனால் நாளடைவில் அதன் சீரிய கருத்துக்களை சமூகம் பெருமையுடன் ஏற்றுக் கொண்டது. பாரத நாட்டில் தோன்றிய சமயங்கள் மட்டுமல்ல, புகுந்த சமயங்களாகிய இஸ்லாம், கிறிஸ்த்தவமும் தமது சமயக்கருத்துக்கள் குறளில் இருப்பதாகக் கூறி அமைதி கண்டன. திருக்குறள் உலகப் பொது மறையாயிற்று.

ஆதாரம்:- புறநானூறு, காலமும் கருத்தும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கிய வரளாறு தெ.பொ.மீ தமிழ் வீரம் டாக்டர் மு. அப்துல் கறீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRACE FOR A GREAT SMILE



பற்களை ஒழுங்கு படுத்துதல்



# Dr.M. ILLANGO

**( General Practice including Orthodontics)**

## டாக்டர் இளங்கோ முத்துக்குமாரு

*சகல பல் வைத்தியத்திற்கும் விஷேடமாக கிளிப் போடுவதற்கும்*

**S** விஷேடமாக கிளிப் போடுதல (Braces)

எந்த வயதிலுள்ளவர்களுக்கும் ஆலோசனையும். வைத்தியமும்
பிள்ளைகளுக்கு பல் தாமதித்து முளைத்தல். கோஎ ஏலாக முளைத்தல்.
விரல் சூப்பும் பழக்கம் என்பவற்றுக்கு ஆலோசனையும் வைத்தியமும் வழங்கப்படும்.

Emergency Pager No: (416) 608-5299

**Scarborough**
செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு
Ellesmere Prof. Budg
919 Ellesmere Road, Suite 102
**Tel: (416) 75 2-3455**

**Mississauga**
புதன், வெள்ளி, சனி
3660 Hurontario St. 2nd Floor
(Hurontario Burnenthope)
**Tel: (905) 272-3455**

**Down Town**
திங்கள்
Rosedale Medical Center
600 Sherbourne St. Suit 305
**Tel: (416) 967-9272**

**West End**
புதன்
1280 Finch Ave. West, Suite 709A
Keel / Finch
**Tel: (416) 667-7672**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - கனடா
# திருக்குறள் மாநாடு

### நன்றி மறப்பது நன்றன்று

திருக்குறள் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கட்கும் சிறப்பு விருந்தினர்கள், சிறப்பு பேச்சாளர்கள், தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராளர்கள் அனைவருக்கும் எம் மனப்பூர்வமான நன்றிகள்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த பெருங்கவிக்கோ. வா.மு. சேதுராமன் அவர்களுக்கும் பேராசிரியர் ஆண்டி அவர்களுக்கும், இங்கிலாந்திலிருந்து வருகை தந்த திரு. யோகராஜா (சொலிசிற்றரும் பெறிஸ்ரரும்)(Solicitior and Barrister) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வருகை தந்த டாக்டர் ராம் மோகன் அவர்களுக்கும், டாக்டர் நாக கணேஸ் அவர்களுக்கும் திருக்குறள் மாநாட்டு மலருக்கு ஆசி செய்தி அனுப்பிய அனைவருக்கும் எம் நன்றிகள். இசை நிகழ்ச்சிக்காக வருகை தந்த கலைமாமணி யோகேஸ்வரன் அவர்கள், எமது திருக்குறள் மாநாட்டிற்கு ஆதரவு நல்கிய வெகுசன தொடர்பு சாதனங்கள், தமிழர் செந்தாமரை, உதயன், செந்தாமரை, நம்நாடு, ஈழநாடு, தமிழ்ஒலி வானொலி, கீதவாணி, றேடியோ ஏசியா, ஆகியவற்றுக்கும் எமது சிறப்பான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது திருக்குறள் மாநாடு சம்பந்தமாக விபரங்கள் பொதுமக்களுக்கு சென்றடைய உதவிய வெகுசனத்தொடர்பு சாதனங்களுக்கும் எம் நன்றிகள். மேலும் செய்திகள் வெளியிட்ட முழக்கம் பத்திரிகை, ரி.வி. Ceylon, ரி.வி தமிழ் கலாபம், விளம்பரம், SHAW CABLE ,South Asian T.V. ஆகிய நிறுவனங்களின் அதிபர்களுக்கும் எமது நன்றிகள்.

திருக்குறள் மாநாட்டையொட்டிய அதிட்ட இலாப சீட்டுக்களை இலவசமாக அடித்து உதவிய U.T.M. அச்சகத்தாருக்கும், பரிசில்கள் வழங்கிய J.R.B. Universal Inc., நியூசங்கர் அன்கோ, சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் ஆகியோருக்கும் அதிட்ட இலாப சீட்டு விற்க உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரைப்போட்டிகளின் போது மத்தியஸ்தம் வகித்த அறிஞர்கள், பங்குபற்றிய போட்டியாளர்களுக்கும், போட்டியாளர்களை ஊக்குவித்த பெற்றோர்கள், பாதுகாவலர்களுக்கும் இப்போட்டி நிகழ்ச்சிகள் சிறப்புற உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

இந்நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்கிய போட்டலோ நிறுவன அதிபர் திரு. இராசதுரை, டாக்டர். சண்முகவடிவேல், Ebony Fashion உரிமையாளர், Eastown Restaurant & Optimart Banquet Hall உரிமையாளர் Jay & Sasi,ஆகியோருக்கும் மேலும் உதவிய டாக்டர் விக்டர் ஜோன் ஃபிகுராடோ, காசிப்பிள்ளை அன் சன்ஸ், ஜோதி மிக்சர், 6 Kumar's ஆகியோருக்கும் திருக்குறள் அச்சடிப்பதற்கு உதவிய ஸ்ரீதுர்க்கை அம்மன் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள், சட்டத்தரணி கைலாசநாதன், Real Estate இராஜா மகேந்திரன் அவர்களுக்கும் எம் நன்றிகள். திருக்குறள் போட்டிகளில் முதலிடம் பெற்ற போட்டியாளர்களுக்கு தங்கப்பதக்கங்களை அன்பளிப்புச் செய்த A. K. Gold House, கனகாம்பிகை நகைமாளிகை, கீதாஞ்சலி நகைமாளிகை, ஸ்ரீசக்தி ஜுவலர்ஸ்(இராமையா பத்தர்) ஆகிய நிறுவன உரிமையாளர்களுக்கும் எமது நன்றிகள். கட்டுரை, கவிதை ஆகியவற்றைத் தந்துதவிய அறிஞர்களுக்கும், விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் எமது நன்றிகள்.

எமது கூட்டங்கள் நடத்துவதற்கும், போட்டி நிகழ்வுகளுக்கும் உதவிய Scarborough Civic Center கல்விச்சபைக்கும் எம் நன்றிகள். மண்டப ஒழுங்கமைப்பு சேவையாற்றும் தமிழர் ஐக்கிய அமைப்பு தொண்டர்களுக்கும் அதன் அமைப்பாளர்களுக்கும் எம் நன்றிகள்.

மண்டப ஒழுங்கு, மண்டபவாசலில் கோலம், ஆகியவற்றை செய்துதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் மண்டப அலங்காரம் ஒழுங்குகள் ஆகியவற்றைச் செய்த திரு. ஆனந்தன் அவர்களுக்கும் நன்றி. இம்மாநாடு சிறக்க உதவிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். இம்மலரை அச்சிட்டு உதவிய U.T.M. அச்சக அதிபர் திரு. க. கோடீஸ்வரன் அவர்களுக்கும் இவரது நிறுவனத்தைச் சார்ந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J.R.B. UNIVERSAL INC.

**(Almost All Services Available)**

## ஜே.ஆர்.பி. யூனிவேசல் இங்க்.

*(அனேகமான சகல சேவைகள் ஒரே நிறுவனத்தில் பெறலாம்)*

❋ அரச அங்கீகாரம் பெற்ற பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் (Scholarship) சேமிப்புத் திட்டம் (20% அரசாங்க மான்யம் பற்றிய மற்றும் பூரண விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்)

❋ தனியார் வர்த்தகக் கணக்கு + வரிச் சேவை (Accounting & Tax Services)

❋ அனைத்துவகை காப்புறுதி ஒழுங்குகள் (Auto, Life, Home, Business) கனடாவில் பல்வேறு சிறப்பு வாய்ந்த காப்புறுதி நிறுவன பிரதிநிதிகளின் பயனுள்ள ஆலோசனைகள் உங்களின் நலனில் அக்கறையுள்ளவர்களின் ஒத்துழைப்பைப் பெறுங்கள்.

❋ வீடு வாங்குதல், விற்றல், அடமானம், சட்ட ஒழுங்கு அனைத்திற்கான சிறந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சேவைகள்.

**உங்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளும் உங்கள் நலனில் அக்கறை கொண்ட அத்துறை சார்ந்த சிறப்பு தேர்ச்சி பெற்றவர்களால் வழங்கப்படுகிறது.**

❋ வாகன விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்புறுதிப் பணம் பெறும் ஒழுங்குகளும் சேவைகளும் (Injured In an Auto Accident)

❋ கணணி (Computer) உங்களுடைய பொருளாதார நிலமையையும் தேவையையும் கருத்திற் கொண்டு நிலமையையும் தேவையையும் கருத்திற் கொண்டு சிறப்பான கணணியை வாங்குவதற்கும், வழிகாட்டுவதற்கும் தொடர் சேவைக்கும்

❋ உலக நாடுகளுக்கான விமான ரிக்கற் ❋ வர்த்தக வாய்ப்பு

❋ சிறப்பான அச்சு வேலைகள் ❋ University Admissions in India & Russia

❋ ஏற்றுமதி இறக்குமதி ஒழுங்குகள்

❋ கார், வாகன விற்பனையும் நிதி ஒழுங்குகளும்

❋ உங்களுக்குத் தேவையான அனைத்து வீடு வியாபார நிலைய நிர்மாண திருத்த வேலைகளுக்கும் விளம்பர சேவைகளுக்கும்

## J.R.B. Universal Inc.

2365-C Eglinton Ave. E., (Kennedy & Eglinton)

**Tel: (416) 750-2111 Fax: (416) 750-8705**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE FINANCIAL SERVICES

&

**BEST INSURANCE BROKERS**

சர்வதேச காப்புறுதி + நிதிச்சேவை



## A. VELUPPILLAI (VEL)

(Life Consultant & Insurance Borker)

காப்புறுதி ஆலோசகர்

- ஆயுள் காப்புறுதி
- வீடு
- வாகனம்
- கல்வி

Twelve continuous years in Canadian Insurance Industry
Life Section- Under International - Insurance Property Section-
Under BST Insurance

*கனடாவில் 12 வருட காப்புறுதி அனுபவம்*

# Tel: (416) 499- 9596

# Fax: (416) 499-9382

## International Insurance Financial Service

2190 Warden Ave. Suite 203,
Scarborough, Ont. M1T 1V6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P.KAYILASANATHAN



B.A.(CEY) LLB. (CEY)- Barrister & Solicitor

உங்கள் தேவைகளுக்குக் குறிப்பாக...

8 குற்றவியல் வழக்குகள் 8குடிவரவு அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள். மேன்முறையீடுகள். 8மனிதாபிமான அடிப்படையில் விண்ணப்பங்கள். 8ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும். 8வீடு. வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல். விற்றல்., 8குடும்ப விவகாரங்கள் (விவாகரத்து. பிள்ளைகள் பராமரிப்பு. பிள்ளைகள் பாதுகாப்பு. சொத்துக்கள் பிரித்தல்)

8வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

2401 Eglinton Ave. East, Suite 302
Scarborough, Ont. M1K 2M5

**Tel: (416) 752-9561** **Fax: (416) 752-7262**




எங்கள் கனவு இல்லத்தைக்
கண்டுபிடிக்கக் கூடியவர் யார்?
இதோ! உங்கள் கனவை
நனவாக்குபவர்.
தொடர்பு கொண்டு பாருங்கள்.

ராஜா எம். மகேந்திரன்

## (416) 491-4002

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்ச்சிக்கு ஒரு வழிகாட்டி

## THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

- அரச அங்கீகாரம் பெற்ற வரிச் சலுகையுடன் கூடிய கல்வி சேமிப்பு திட்டம்
- உலகத்தின் எந்த பகுதியிலும் பெறலாம்
- அரசாங்கத்தின் 20%கல்வி மானியத் திட்டம் பற்றிய மற்றும் பூரண விபரங்களைப் பெற தொடர்பு கொள்ளப்பட வேண்டியவர்கள்



ஆர்.ஆர். ராஜ்குமார்
(முகாமையாளர்)
off: (416)750-2111
(416)757-6363
Rs: (416)332-8457
Pager(416)866-1866



ஐ. செல்லத்துரை
off:(416)757-6363
Rs: (416)759-2072
Fax:(416)759-2332



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org